

THE MANJARI DIGEST MAY 2004
மஞ்சரி
நம் நாட்டு மொழிகளில்
நம்பர் 1 டய்ஜெஸ்ட்
5/-
மே – 2004
10/05/04
ஒளிரும் இந்தியா
காரணம் என்ன...?
ஒரு சர்வாதிகாரியின்
மறுபக்கம்

# இலக்கியவீதி

## மஞ்சரி டய்ஜெஸ்ட்

இணைந்து நடத்தும் இலக்கியவீதி

## கல்லூரி மாணவர்களுக்கான

# அற்புத அறிவியல் கட்டுரைப் போட்டி

இன்றைய உலகம் அடைந்துள்ள அறிவியல் வெற்றிகள் சாதனைகள் குறித்துப் பழகு தமிழில் கட்டுரைகளை வழங்க, கல்லூரி மாணவர்களை அழைக்கிறோம். கணினி, மருத்துவம், பொறியியல், விண்வெளி, தகவல்தொடர்பு, சுற்றுச்சூழல் போன்ற துறைகளில் கட்டுரைகள் அமையலாம். உதாரணத்திற்கு சில தலைப்புகள் இங்கே...

1. நன்னீர் பெருக்கி நானிலம் காப்போம், 2.விண்வெளியில் ஒரு விஞ்ஞான நகரம், 3.ஓசோன் மண்டலக் கிழிசலைத் தைப்போம், 4. நாளைய உலகில் கணினி, 5. டி.என்.ஏ (D.N.A) என்றொரு அற்புதம்!, 6. சூரிய மூலதனம்

✪ *கட்டுரைகள் மஞ்சரியில் பத்து பக்கங்களுக்குக் குறையாமல் அமைய வேண்டும். தெளிவாகவும் சுவையாகவும், தேவைப்படும் விளக்கப் படங்களுடன் அனுப்ப வேண்டும்.*

✪ *கட்டுரைகளோடு, தாம் இன்ன கல்லூரி மாணவர் என்பதற்கான சான்றும் இணைக்கப் பட்டிருத்தல் அவசியம்.*

✪ *போட்டிக் கட்டுரைகள் இலக்கியவீதி அமைப்பாளர், மஞ்சரி ஆசிரியர் மற்றும் அறிவியல் அறிஞர்களால் தேர்வு செய்யப்படும்.*

*போட்டிக்கட்டுரைகளை அனுப்ப கடைசித் தேதி: 07.08.2004*

**முதல் பரிசு : ரூ. 1500/-**

**இரண்டு இரண்டாம் பரிசுகள் : ரூ. 1000/-**

**மூன்று மூன்றாம் பரிசுகள் : ரூ. 500/-**

★ இவை தவிர ஆறு கட்டுரைகள் பிரசுரத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப் படும். கட்டுரைகள் ***அறிவியல் தமிழ்*** தலைப்பில் மஞ்சரியில் ஒரு வருடத்திற்கு தொடராக வெளியாகும்.

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்
நிறுவுனர்: அமரர் என். ராமரத்னம்

மலர் : 57 தாரண - வைகாசி மே - 2004 இதழ் : 5

மும்பை தமிழ்ச் சங்கம்

# நூலகம் மஞ்சரி

**உள்ளே ...**

சூரியனில் சுக்கிரன் ..... 2
ஒரு சர்வாதிகாரியின் மறுபக்கம் ..... 9
தென்கச்சி பதில்கள் ..... 19
போமர்ஷே (புத்தகப் பகுதி) ..... 22
குணச்சித்திரம் டச்சு சினிமாக் கதை ..... 30
காசியும் ஹரித்வாரும்- பயணக்கட்டுரை ..... 42
இலக்கியவுலகில் ரத்னாவளி....49
கரைக்கு அப்பால் ..... 52
தாயத்து தெலுங்குக் கதை..... 60
வலைத்தளத்திலிருந்து ..... 68
சுயமுன்னேற்றத் தொடர் ..... 75

# ஒளிரும் இந்தியா...

இந்தியா ஒளிர்கிறது - நெஞ்சைத் தொடும் இந்த நிகழ்கால வாக்கியம் சர்ச்சை யாகிப் போனது. அதுவே எதிர்கால வாக்கியமாய் எடுத்துக் கொள்ளப்பட்டால் ...?

பொருளாதார வல்லுநர்களின் கருத்துப்படி - ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் - இந்தியா ஒளிர்வதற்கான அம்சங்கள் இருப்பதாகவே படுகிறது. ஆனால் சில குறிப்பிட்ட வகைகளின் துறை சார்ந்த வளர்ச்சி சற்றே சரிந்திருப்பது வெளிப்படை உண்மை! 2003 - 2004 ஆண்டுகாலத்தில் 8.1% ஜி.டி.பி வளர்ச்சி விகிதம் இருக்கும் என மத்திய புள்ளியியல் நிறுவனம் மதிப்பிட்டிருந்தது. ஆனால் வளர்ச்சி விகிதம் எதிர்பார்த்த அளவு அமையவில்லை. நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் விவசாயத் துறை கொஞ்சம் படுத்துவிட்டதே இதற்குக் காரணமாம்...


முக்கியமாக தென்மாநிலங்களில் மழைப் பொழிவு குறைந்தது, நாட்டின் விவசாயத்துறை வளர்ச்சி விகிதத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் வட மாநிலங்களில் கூடுதல் மழைப்பொழிவு, அதனால் நல்ல விளைச்சல் என ஆரோக்கியமான சூழல் நிலவியதால்தான், தேர்தலை முன்னதாகவே எதிர்கொள்ள மத்திய ஆளும் கூட்டணி தயாரானது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அதிகரித்திருக்கும் அன்னியச் செலாவணிக் கையிருப்பு நாட்டுக்குத் தெம்பளிக்கும் விஷயம். குறைந்து போயிருக்கும் கடனுக்கான வட்டிவீதங்களால் மக்களின் நுகர்வு அதிகரித்து விற்பனையும் உற்பத்தியும் பெருகியிருக்கிறது. உலகமயமாக்கலும் மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளுமே இதற்கு நேரடிக் காரணம். இருப்பினும் இந்த விஷயத்தில் பலரும் சிந்தித்திராத மறைமுகக் காரணமும் இருக்கிறது. இவ்விதழில் இடம் பெற்றுள்ள கட்டுரை அந்த விளக்கத்தை உங்களுக்குத் தரலாம்.

ஒளிரும் - இந்தியா - நிச்சயமாக!

அறிவியல் பார்வை

# சூரியனில் சுக்கிரன் !



**வி.எஸ்.கல்யாணராமன்**

*சீரவிருஞ்சுடர் மீனொடு வானத்துத்*
*திங்களையும் சமைத்தே*
*ஓரழகாக விழுங்கிடும் உள்ளத்தை*
*ஒப்பதோர் செல்வமுண்டோ?*

- பாரதி

தாரகையென்ற மணித்திரள் யாவையும் மனத்திடைச் சார்ந்திடப் போகச் சொன்ன பாரதி மட்டும் வரும் ஜூன் மாதம் 8 ஆம் தேதி இவ்வுலகில் இருந்திருப்பாராயின் தமது கற்பனைச் சிறகுகளைத் தட்டிவிரித்து இன்னுமோர் அமர கவி புனையக் கூடும். அத்தகையதொரு அரிய வானியல் நிகழ்வு ஒன்று, வருகின்ற ஜூன் 8 ஆம் தேதி நிகழவிருக்கிறது. இந்த நூற்றாண்டின் இந்த ஒப்பற்ற காட்சியைக் காண உலகெங்கும் உள்ள வானியலாளர்கள் ஆர்வமுடன் காத்திருக்கின்றனர்.

வியப்பூட்டும் சூரிய சந்திர கிரகணங்களையே ஆர்வத்தோடு காணும் நமக்கு, பகலில் சுக்கிரனைப் பார்க்க விந்தையாக இருக்காதா என்ன? சாதாரணமாக முன் இரவில் மேற்கு வானிலும், அதிகாலையில் கிழக்கேயும் பிரகாசமுடன் தெரியும் சுக்கிரனை நம்மில் பலர் பெரும்பாலும் பார்த்திருக்கக் கூடும். ஆனால் நாம் காணப்போவது அந்த சுக்கிரனை அல்ல! இந்த விந்தை நிகழ்வை மீண்டும் காணவேண்டுமாயின், இன்னும் நூறாண்டுகளுக்கு மேல் காத்திருக்க வேண்டும்.


இந்த அரிய வாய்ப்பு 121 ½ வருடங்களுக்குப் பிறகு, 2004 ஜூன் 8 ஆம் தேதி நமக்குக் கிடைக்கிறது. இதை சுக்கிர ஸம்தரணம் - அதாவது சூரிய ஒளிமுகத்தின் குறுக்கே சுக்கிரன் கடந்து செல்லும் நிகழ்ச்சி... அல்லது, சுக்கிரக் கடப்பு நிகழ்வு (Transit of Venus) எனக் குறிப்பிடலாம்.

இதற்கு முன் 1882 டிசம்பர் 6 இல் இத்தகையதொரு அரிய நிகழ்வு நடந்திருக்கிறது. அதைக் கண்டவர்களில் யாரும் இப்போது உயிருடன் இருக்க வாய்ப்பில்லை.

2004 ஜூன் 8 ஆம் தேதிக்குப் பிறகு அடுத்த நிகழ்வு, எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 2012 ஜூன் 6 ஆம் தேதி, இதே போல சூரியனின் வட்ட முகத்தின் குறுக்கே சுக்கிரன் நகர்ந்து செல்வதை மறுபடியும் காணலாம். ஒரே ஒரு வித்தியாசம், இந்த ஆண்டு சூரியத் தட்டின் தெற்கில் கடந்து செல்லும் சுக்கிரன், 2012 இல் சூரிய முகத்தின் வடக்குத் திசையில் கடந்து செல்லும்.

2012 ஜூன் 6 ஆம் தேதிக்குப் பிறகு ஒரு தலைமுறையினருக்கு இந்த வாய்ப்பே அமையாது. காரணம் இதே போன்ற அடுத்த நிகழ்வு 2117 டிசம்பர் 11 இல்தான் நிகழும். அதற்கு அடுத்து, எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 2125 டிசம்பர் 8 இல் இந்த நிகழ்வு ஏற்படும்.

அதாவது, சூரிய முகத்தின் குறுக்கே சுக்கிரன் நகர்ந்து செல்லும் விஷயம், 223 ஆண்டுகளில் இருமுறை, எட்டாண்டுகள் இடைவெளியில் ஒரு ஜோடியாக மொத்தம் நான்கு முறை நிகழும். இவை டிசம்பர் 8 தேதி வாக்கில் எட்டாண்டு இடைவெளியில் இருமுறை நிகழ்ந்த பின்னர் 121½ வருடங்கள் கழித்து அடுத்த ஜோடி நிகழ்வுகள் ஜூன் 7 வாக்கில் எட்டாண்டு இடைவெளியில் இருமுறை மறுமுறையும் நிகழும்.




படம் 1

அதற்கும் பிறகு, மீண்டும் ஒரு முறை 105½ வருட இடை வெளி விட்டு அதேபோன்று டிசம்பர் மாதங்களில் எட்டாண்டு இடைவெளியில் இருமுறை இவை நிகழும். இதே அட்டவணைப்படி, ஒரு தொடர்கதையாக இந்த நிகழ்வுகள் நடந்து கொண்டே இருக்கும்.

பகலில் சுக்கிரன் சூரிய ஒளித் தகட்டின் குறுக்கே நகர்ந்து செல்வது போல, புதனும் அவ்வப்போது செல்வதுண்டு. இது ஒரு நூறாண்டு கால அளவில் 13 அல்லது 14 முறை நடைபெறும். புதன் ஒரு மிகச் சிறிய கிரகம். அது பூமியிலிருந்து சுக்கிரனைவிட பல்லாயிரம் மைல்களுக்கப்பால் சூரியனைச் சுற்றி வருகிறது. அதாவது சுக்கிரன் புதனைவிட நமக்கு மிக அருகிலும், புதனைவிட பெரிதுமாக இருக்கிறது. இதனால் சூரியனுக்கு முன்னால் சுக்கிரன் கடந்து செல்லும் நிகழ்வுகளின் போது (Transits of Venus) புதனைவிட சுக்கிரனை சற்றே பெரியதொரு கரும்புள்ளியாக நாம் பார்க்க முடியும்.

சூரியனுக்கு முன்னால் புதன் கடந்து செல்லும் நிகழ்வுகளை விட (Transit of Mercury) சுக்கிரன் கடந்துசெல்லும் நிகழ்வுகள் (Tran

sit of Venus) நமது கவனத்தை மிகவும் ஈர்க்க வல்லன. ஏன் என்றால் சிறு புள்ளியாகத் தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் புதனை விட சற்றே பெரியதொரு கரும் புள்ளியாகச் சுக்கிரனை சூரிய ஒளி வட்டத்தில் நாம் காணமுடியும் என்பதுதான்!

2003 மே 7ஆம் தேதி புதன் சூரியனுக்கு முன்னால் கடந்து சென்றது. எதிர்வரும் 2006 நவம்பர் 8 ஆம் தேதியிலும் புதன் சூரியனுக்கு முன்னால் கடந்து செல்லும். புதனானாலும் சரி, சுக்கிரனானாலும் சரி, இத்தகைய கடந்து செல்லும் நிகழ்வுகளை, உலகில் அந்த நேரத்தில் பகலாக இருக்கும் நாடுகளில் மட்டும்தான் காண முடியும். இரவாக இருக்கும் நாடுகளில் இருப்போருக்கு எப்பொழுதே ஒரு முறை நிகழும் இக்காட்சிகளைக் காணமுடியாது.


ஏன் சுக்கிரனும் புதனும் மட்டும் இவ்வாறு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சூரியனுக்கு முன்னால் கடந்து செல்கின்றன?

புதன் சூரியனுக்கு மிக மிக அருகில் சூரியனிலிருந்து 3.6 கோடி மைல்கள் தொலைவில் ஒரு நீள்வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றி வருகிறது. அதற்கும் அடுத்து சூரியனிலிருந்து 6.7 கோடி மைல்கள் தொலைவில் சுக்கிரனின் சுற்றுப்பாதை அமைந்துள்ளது. அதற்கும் அடுத்தபடியாகத் தான் நாமிருக்கும் பூமி; சூரியனுக்கு 9.3 கோடி மைல்கள் தொலைவில் சூரியனைச் சுற்றி வருகிறது. அதாவது புதனும் சுக்கிரனும் விண்வெளியில் நமக்கும் சூரியனுக்கும் இடையே அமைந்துள்ள தத்தமது பாதைகளில் மாறுபட்ட சாய்வான தளங்களில் சூரியனை வலம் வருகின்றன. இப்பாதைகள் மாறுபட்ட சாய்வான தளங்களில் அமைந்து உள்ளதால்தான் இந்தக் கடப்பு சமாசாரங்கள் அடிக்கடி நிகழ வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. இல்லாவிட்டால் இவையும் சர்வசாதாரண நிகழ்வுகளாகி இருக்கும்.

பூமி செல்லும் அயனப்பாதையின் தளத்திற்கு புதனின் பாதையின் தளம் சுமார் 7 டிகிரியும், சுக்கிரனின் பாதையின் தளம் சுமார் 3¼ டிகிரியும் சாய்வாகவுள்ளன. அதனால் புதனும் சுக்கிரனும் தமது பாதைகளில் பூமி தளத்திற்கு மேலாகவோ கீழாகவோதான் பெரும்பாலும் வலம் வர முடிகிறது. அதிகமான நாட்கள் அவை பூமியின் தளத்திற்குச் சமநிலையில் வர முடிவதில்லை. ஆனால் சில நேரங்களில் அவை சூரியனுக்கும் பூமிக்கும் இடையே தமது அயனப் பாதையில் அகச் சேர்வு நிலை அல்லது அண்மை நிலையையும் (Inferior conjunction) அடைந்து சூரியப் பாதையையும் (Ecliptic) ஒரே நேரத்தில் கடக்க நேர்கிறது. அப்போது அவை சூரியனுக்கும் பூமிக்கும் இடையே ஒரே தளத்தில் நேர்கோட்டில் வந்துவிடுவதால் பூமியிலிருந்து பார்க்கும்போது சூரிய ஒளித்



தட்டிற்கு எதிரில் சுக்கிரனும் புதனும் சூரியனின் ஒளிவட்டத்தில் மிதந்து செல்வதைக் காண முடிகிறது. இதைத்தான் சூரிய




படம் 2

ஒளித் தட்டில் புதனோ சுக்கிரனோ கடந்து செல்லும் விந்தை நிகழ்வுகளென (transits of Mercury or Venus) சுக்கிரக் கடப்பு/ புதக்கடப்பு என குறிப்பிடுகிறோம்.

இந்த சுக்கிரக் கடப்பு - கால அட்டவணையைப் பார்ப்போமா?

சூரியனை ஒரு சுற்று வர சுக்கிரன் 224.701 நாள்கள் எடுத்துக் கொள்கிறது. அதற்கு பூமி எடுத்துக் கொள்வதோ 365.256 நாள்கள். எனவே எட்டாண்டுகளில், அதாவது 2922 நாள்களில் சுக்கிரன் 13 முறையும் பூமி 8 முறையும் சூரியனை வலம் வருகின்றன. இதனால் எட்டாண்டுகளுக்கு ஒரு முறை சூரியனுக்கு எதிரில் ஒரே திசையில் இவை இரண்டும் தத்தம் பாதைகளில் உள்ள இடங்களில் ஒரே நேர் கோட்டில் வருகின்றன. ஆனால் இந்த எட்டாண்டு வட்ட கால அளவை பூமிக்கும் சுக்கிரனுக்கும் சரிசமம் என்று கூறமுடியாது. அதனால் ஒரு எட்டாண்டு முடிவில் சுக்கிரன் பூமியை சுமார் 22 மணி நேரம் முந்திக் கொண்டு குறித்த இடத்திற்கு வந்துவிடுகிறது. எனினும் அப்போதும் சமதளத்தில் அவை சில மணிநேரம் இருப்பதால் மற்றொரு முறை சூரியத் தகட்டின் குறுக்கே சுக்கிரன் நகர்ந்து செல்வது, அதாவது மற்றொரு சுக்கிரக் கடப்பு சாத்தியமாகிறது. ஆனால் மூன்றாவது எட்டாண்டு முடிவில் பூமி குறித்த இடத்திற்கு வருவதற்குள் சுக்கிரன் அந்த இடத்தைத் தாண்டிப் போயிருக்குமாகையால் மற்றொரு சுக்கிரக் கடப்புக்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. எனவே அடுத்த வய்ப்புக்கு 121 அல்லது 105 வருடங்கள் காத்திருக்க வேண்டியதாகிறது. அவை சுக்கிரனது எதிரெதிர் அயன வெட்டுப் புள்ளிகளில் (nodes) மாறி மாறி நிகழ்கின்றன.

தொலைநோக்கி கண்டுபிடித்ததற்குப் பிறகு ஆறு முறைதான், இத்தகைய சூரிய முகத்தில் சுக்கிரன் நகர்ந்து செல்லும் நிகழ்வுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவை நிகழ்ந்தது முறையே 1631, 1639, 1761, 1769, 1874 மற்றும் 1882 ஆண்டுகளிலாகும்.

வரும் 2004 ஜுன் 8 இல் சுக்கிரன் நகர்ந்து செல்லப் போகும் காட்சியை சற்றே விரிவாகப் பார்க்கலாம்...

இதற்கு நான்கு கட்டங்கள் உண்டு. சூரியனுக்கு வெகு அருகில் இருந்தும் நம்மால் பார்க்க முடியாத சுக்கிரன் தனது வெளி விளிம்பால் சூரியனின் வெளி விளிம்பைத் தொடுவது முதல் கட்டம். ஓரத்தில் சிறு கருப்புத் தட்டிய சூரிய முகத்தில் அடுத்தபடி சுக்கிரன் முழுமையாக நுழையும் கணமே இரண்டாவது கட்டம். அப்போது சுக்கிரனது புற விளிம்பு சூரியனது உள் விளிம்புடன் சேர்ந்திருக்கும். சூரிய முகத்தில் சுக்கிரனது யாத்திரையின் துவக்கம் இக்கணம்தான்!

பிறகு மெல்ல மெல்ல நகரும் கரும் புள்ளியாக சூரியனின் வட்ட முகத்தில் சுக்கிரன் பவனி வருவதை நாம் காணலாம். பின்னர் சூரியனது எதிர் உள்விளிம்போடு சுக்கிரனது புற விளிம்பு தொடும் கணம்தான் மூன்றாவது கட்டம். நான்காவதான இறுதிக் கட்டம், சுக்கிரனின் வெளி விளிம்பு சூரியனின் வெளி விளிம்பிலிருந்து தொட்டுத் தொடாமல் இருக்கும் நிலையிலிருந்து விடுபடும் கணமாகும். அந்தக் கணமே சூரிய முகத்திலிருந்து விடுதலையான சுக்கிரன் நம் பார்வையிலிருந்தும் சூரிய ஒளி வெள்ளத்தில் மறைந்து மாயமாய்ப் போய்விடும்.

*2004 ஜூன் 8* இல் இந்த நிகழ்வுகளை ஐரோப்பாவிலும், மேற்குப் பிரதேசங்கள் தவிர்த்த ஏனைய ஆப்பிரிக்காவிலும், மத்தியக் கிழக்கு நாடுகளிலும் சில கிழக்குப் பிரதேசங்கள் தவிர்த்த ஆசியாவின் பெரும்பகுதியிலும் காண முடியும். ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், கொரியா, தூரக் கிழக்கு சீனா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இந்த நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே சூரியன் மறைந்துவிடும். அதனால் அங்கெல்லாம் இறுதிக் கட்டங்களைக் காண இயலாது.

அதுபோல், மேற்கு ஆப்பிரிக்கா, வடகிழக்கு அமெரிக்கா, கரீபியன் மற்றும் பெருமளவு தென்அமெரிக்காவிலும் சூரியன் உதிக்கும் போதே இந்நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும். அங்கெல்லாம் ஆரம்பக் கட்டங்களைக் காண இயலாது. தென்சிலி, அர்ஜென்டினா, மேற்கு வட அமெரிக்கா, ஹவாய் மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் இரவு நேரம் என்பதால் இந்த அரிய நிகழ்வைக் காண இயலாது.


இந்தியாவில் சுமார் காலை *10:46* க்கு துவங்கும் இந்நிகழ்வு, பிற்பகல் *4:52* வரை நீடிக்கும். காலை *11:05* முதல் பிற்பகல் *4:32* வரை சுக்கிரன் முழுவதுமாக சூரியுனின் வட்ட ஒளி முகத்தில் பவனி வரும்.

இந்த சுக்கிரக் கடப்பு நிகழ்வுகள் வானியல் ஆராய்ச்சியாளர்களுக்கு, பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தூரத்தை பூமியின் பல பாகங்களிலிருந்தும் உற்று நோக்கி, ஆராய்ந்து மிகத் துல்லியமாகக் கணக்கிட அரியதொரு வாய்ப்பைத் தருகிறது. சுக்கிரனின் வாயு மண்டலத்தினால் சூரிய ஒளி சிதறும்போது அதன் தன்மைகளையும் ஆய்ந்தறிய இந்நிகழ்வுகள் பெரிதும் உதவுகின்றன.

அகச் சேர்வு (Inferior Conuunction) நிலையை அடைவதற்கு முன்போ அல்லது அடைந்த பின்போ உள்ள 66 நாட்களில்தான் சுக்கிரன் அதிக ஒளியுடன் காணப்படும். மிகப் பிரகாசமாக இருக்கும்போது அதன் ஒளியளவு-4.4ஆகும். மிகப் பிரகாசமாகத் தெரியும் ஸிரியஸை (Sirius) விண்மீனைவிட 15 மடங்கு ஒளி விடும் வெள்ளி , அந்த நாட்களில் சூரிய சந்திரர்களுக்கு அடுத்தபடியாக ஒளித்திறனில் மூன்றாவது இடத்தைப் பெற்றுவிடும். அப்போது நண்பகலில் கூட சுக்கிரனைக் காணலாம். மிக்க ஒளியோடு இல்லாவிடினும் கூட, கூர்ந்து நோக்கினால் எளிதில் அதைக் கண்டுவிடலாம்.

கிரகணங்கள் போன்ற நிகழ்ச்சிகள் அவை தெரியவரும் நாடுகளில் துவங்கும் நேரத்தில் உதயமாகும் லக்கினம், அமையும் கிரக நிலைகள் போன்றவற்றுக்கேற்ப என்னென்ன விளைவுகளை ஏற்படுத்தும் என ஜோதிட வல்லுநர்கள் ஆராய்ந்து அவற்றின் பக்க விளைவுகள் நிகழ்வுக்கு சில காலம் முன்னரோ அல்லது ஒரு சில ஆண்டுகள் நிறைவுறும் வரையிலோ நிலுவையில் இருக்கும் என்கின்றனர்.

இதற்கு முன் நிகழ்ந்த சுக்கிரக் கடப்பு நிகழ்வுகள் உலகில் குறிப்பிடத்தக்க பெரிய நிகழ்வுகளை ஏற்படுத்தியதற்கான போதிய சரித்திர ஆதாரங்கள் இல்லையென்றாலும், ஓரிரு நிகழ்வுகளுக்கு முன்னரும் பின்னரும் உலகில் விளைந்த சில நிகழ்ச்சிகள் கவனிக்கத் தக்கவை. 1631 இல் நிகழ்ந்த சுக்கிரக் கடப்பிற்குச் சில மாதங்கள் முன்னர் 1630 நவம்பர் 30 இல் தோன்றிய ப்ளேக் நோய் 16,000 பேருக்கு மேல் காவு கொண்டது. 1631 டிசம்பரில் வெஸுவியஸ் எரிமலை வெடித்து, ஆறு கிராமங்களை அழித்து, பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்றது. இதனால் பலிகடாவானது இத்தாலிதானோ என நம்பத் தோன்றுகிறதல்லவா?



1761 இல் நிகழ்ந்த சுக்கிரக் கடப்பிற்கு முன் 1760 இல் போஸ்டனில் ஏற்பட்ட பெரும் தீயில் நகரில் பெரும்பான்மை பகுதி அழிந்தது. 1882 நிகழ்வுக்குப் பின் 1883 இல் இந்தோனேஷியாவில் நிகழ்ந்த க்ரகடாவ் எரிமலை வெடிப்பு உலகிலேயே மிகப் பெரிய வெடிப்பாகக் கருதப் படுகிறது. இதன் வெடிச் சத்தம் 4635 கி.மீ. வரை கேட்டதாகவும், சுண்டா உட்கடலில் அலைகள் 150 மீட்டர் உயரே பொங்கியதாகவும், வெளிவந்த தூள் வானில் எங்கும் பரந்து உலகின் வெப்ப நிலையை ஒரு வருடத்திற்கும் மேலாக பெரியஅளவில் குறைத்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சில மாதங்களுக்கு முன் அமெரிக்காவில் படர்ந்த மாபெரும் காட்டுத் தீ எதிர்வரும் சுக்கிரக் கடப்பு நிகழ்வுக்குக் கட்டியம் கூறியதாகுமோ என்னவோ?

ப்ருஹத் சம்ஹிதை என்ற புராதன ஜோதிட நூலில் சுக்கிரன் சூரிய அஸ்தமனத்திற்கு முன் வானில் தெரிந்தால் மக்கள் பீதியடைய வேண்டிவருமெனவும், மேலும் பகல் முழுதும் தெரிந்தால் நாட்டில் பஞ்சமும் நோயும் தலைவிரித்தாடும் எனவும் கூறுகிறது. 2004 ஜுன் 8 இல் பட்டப்பகலில் சுக்கிரன் சில இடங்களில் சுமார் 6 மணி நேரம் தெரியப்போவது என்னவோ நிச்சயம்தான்! ஆனால் அது ஒளிவிடும் சுக்கிரனாக அல்லாமல் ஒரு கரிய புள்ளியாகத்தான் தெரியப் போகிறது. சுக்கிரக் கடப்புகள் குறித்து ப்ருஹத்சம்ஹிதை ஏதும் கூறாவிடினும், கருப்பாக சுக்கிரன் பலமணி நேரம் பகலில் தெரியப்போவதையொட்டி சில பலன்களைக் கூற ஜோதிட ஆராய்ச்சியாளர்கள் முன்வரலாம்.

எது எப்படியோ... உம்பர் வானத்துக் கோளையும் மீனையும் ஓர்ந்தளந்ததோர் பாஸ்கரன் மாட்சியைப் பாடியபடி, எதிர்வரும் ஜுன் 8 ஆம் தேதிக்கு நாமும் காத்திருப்போம். ●

## வெள்ளி பாடல்

*சில இலக்கியங்கள் பல காலமாக வழங்கி வருகையில் சில புலவர்கள் சில புதிய பாடல்களை இயற்றி அவற்றினிடையே சேர்த்து விடுவதுண்டு. இடைச் செருகலாகிய அந்தக் கவிகளைக் கண்டுபிடித்து விலக்குவது அருமையான காரியம். பழங்காலத்தில் சீவகசிந்தாமணியில் இப்படிச் சில பாடல்களை ஒருவர் சேர்த்துவிட்டார். அவர் பெயர் கந்தியார் என்று நச்சினார்க்கினியர் உரையால் தெரியவருகிறது. அப்படியே வெள்ளியம்பலவாணத் தம்பிரான் என்பவர் கம்பராமாயணம், தேவாரம் முதலிய நூல்களில் சில பாடல்களைச் செருகி விட்டார். அத்தகைய பாடல்களை வெள்ளி பாடல் என்று குறிப்பிடுவார்கள். பிற்காலத்தில் செருகு கவிகளையே வெள்ளி பாடல் என்று பெயர் கூறி விலக்கும் வழக்கம் ஏற்பட்டது.*





# ஒரு சர்வாதிகாரியின் மறுபக்கம்

தமிழாக்கம்: செங்கோட்டை ஜனார்த்தனன்

மூலக்கட்டுரை : மாத்ருபூமி (மலையாளம்)

### கட்டுரை ஆசிரியரைப் பற்றி...

**இந்தக் கட்டுரை ஆசிரியர் டாக்டர்.சி.கே.என். நாயர் பாரதநாடு சந்தித்த புகழ்மிக்க விவசாயத்துறை விஞ்ஞானிகளுள் ஒருவர். பூனாவிலுள்ள நேஷனல் கெமிக்கல் லாபரட்டரியில் மூத்த விஞ்ஞான அதிகாரி, திருவனந்தபுரம் விவசாயக் கல்லூரியின் முதல்வர், கேரள விவசாயப் பல்கலைக் கழகத்தின் சிறப்பு அதிகாரி போன்ற பதவிகளில் அமர்ந்து சிறப்புறப் பணியாற்றியவர். இவரது ஆங்கிலப் புலமையில் சர்.சி.பியே மயங்கியதுண்டு.**

**ம**ன்னராட்சி என்பது இன்று கடந்த காலத்தின் ஓர் அடையாளம் மட்டுமே. இருப்பினும் இன்று நமக்கேற்பட்டுள்ள சில கசப்பான அனுபவங்களை எண்ணுகின்ற பொழுது சிறந்த நிர்வாகத் திறமையுடன் நாடே வியக்குமளவிற்கு நற்பணியாற்றிய சில மாமேதைகளும் நம்மை அறியாமலேயே நம் நினைவிற்கு வருகின்றனர்.

தங்கள் நாட்டையே ஸ்ரீபத்மனாபனுக்கு சமர்ப்பணம் செய்துவிட்டு பின் அவருடைய பிரதிநிதிகளாக நாட்டை ஆண்டவர்கள் திருவிதாங்கூர் மன்னர்கள். அவர்களுக்கு பக்கபலமாக பல அறிஞர்களும் வீரமிக்க தளவாய்களும் நிர்வாகத் திறன் படைத்த திவான்களும் இருந்தனர். அத்தகைய திவான்களுள் ஒருவர்தான் பேரறிஞரும் நிர்வாகத்திறன் மிக்கவருமாக விளங்கிய திருவிதாங்கூர் திவான் சர்.சி.பி. ராமசாமி ஐயர்.

1933 முதல் 1936 வரை திருவிதாங்கூர் மகாராஜாவின் நிர்வாக ஆலோசகராகவும் 1936 முதல் 1947 வரை திருவிதாங்கூர் திவானாகவும் பணியாற்றியவர். அவர் தம் அதிகார வரம்பை முற்றிலும் உணர்ந்து செயல்பட்டவர். அவர் நினைத்தி

டாக்டர். சி.கே.என். நாயர்

ருந்தால் அன்றே கோடிக்கணக்கில் சம்பாதித்திருக்க முடியும். ஆனால் அவருடைய அன்றைய மிகப்பெரிய எதிரிகள் கூட அவரை ஊழல் பேர்வழி என்றோ, தனக்கென பெரும் சொத்துக்களைச் சுருட்டியவர் என்றோ குற்றம் சாட்டவில்லை.

சர்.சி.பி அன்று கூறிய "இந்திய நதிகள் இணைப்புத் திட்டத்தை" நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று நாம் அண்டை மாநிலங்களுடன் மோத வேண்டிய நிலை வந்திருக்காது. சர்.சி.பி கொண்டுவந்த திட்டம் என்ற ஒரே காரணத்திற்காக அதை அன்று ஒதுக்கி வைத்தனர். அதன் விளைவை நாம் இன்றும் அனுபவிக்கிறோம்.

சர்.சி.பியை மத்திய அமைச்சரவையில் சேர்க்கலாமே என ஒருவர் நேருவிடம் கூறியபோது, "அப்படியானால் நான் பட்டேலை எங்கு அமர்த்துவது?" என்று கேட்டாராம். அவர் சர்.சி.பிக்கு கொடுத்த ஸ்தானம் இது.

திருவிதாங்கூரை விட்டு சர்.சி.பி வெளியேறிய வேளை. அதே சமயத்தில்தான், எல்லாத்துறைகளும் நலிவுற்ற நிலையில் தள்ளாடிக் கொண்டிருந்த காசி இந்து பல்கலைக்கழகத்தை இழுத்து மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதைக் காப்பாற்றும் திறன் படைத்தவர் சர்.சி.பி ஒருவர்தான் என்பதை உணர்ந்த நேரு, அந்தப் பல்கலைக்கழகத்தின் துணை



டாக்டர் சி.கே.என்.நாயர்

வேந்தராகப் பணியாற்ற சர்.சி.பியை வேண்டினார். சர்.சி.பியும் அதனை ஏற்றார். பணியாற்றத் தொடங்கிய இரண்டாண்டிற்குள், நலிவுற்றிருந்த அப்பல்கலைக்கழகத்தை அழிவிலிருந்து காப்பாற்றி மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்தார்.

எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் சரி, நாட்டை ஆள்பவர்கள் தவிர்க்க முடியாத சில இக்கட்டான வேளைகளில் சர்வாதிகாரிகளாக மாறுவதுண்டு. இல்லையெனில் மக்களுக்கு நிலையான ஒரு நல்லாட்சியைத் தர இயலாது போய்விடும் என அவர்கள் நம்பினர். அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சர்ச்சில் போன்றோர் இந்த வரிசையில் வருகின்றனர்.

இவர்களைப் போன்று திருவிதாங்கூர் போன்ற ஒரு சிறிய நாட்டின் சர்வாதிகாரியாக சர்.சி.பி



செயல்பட்டார் என்றே கூறலாம். அன்று தேர்தல்களோ, வாக்கெடுப்பு முறையோ, குறுக்குவழியில் குறுகிய காலத்தில் கோடீசுவரர்களாகும் "ஜனநாயக சர்வாதிகார" ஜாலவித்தைகளோ இல்லாதிருந்தன.

அன்று திருவிதாங்கூரில் வாழ்ந்த சிலர் சில தனிப்பட்ட காரணங்களுக்காக சர்.சி.பியை ஓர் அரக்கனாகச் சித்தரித்துக் காட்டினர். இந்த மாயையின் முன் சர்.சி.பியின் எல்லா நன்முயற்சிகளும் மறைந்தே போயின. இன்றும் அவரது ஆட்சிக் காலத்தை ஒரு கெட்ட கனவாகக் கருதுகின்றவர்களும் உள்ளனர். இதில் வேடிக்கை என்னவென்றால் அவரை நேரில் பார்த்திராத நெருங்கிப் பழகாத, அவரைப் பற்றி பிறர் கூறியதை மட்டும் நம்பிய ஒரு சாரார் தாம் அவரை இன்றும் கடுமையாக விமர்சிக்கின்றனர். இவர்கள் தெரிந்தோ தெரியாமலோ சர்.சி.பி.ராமசாமி ஐயர் எனும் மாமனிதரின் ஒரு பக்கத்தை மட்டுமே பார்த்தவர்கள். அவருடைய மறுபக்கத்தைக் காணாதவர்கள் அல்லது காண மறுத்தவர்கள்.

இத்தகைய மாமனிதரைப் பற்றி, அன்று முதல் இன்று வரை பலருக்கும் ஒரு புதிராகவே விளங்குகிற நவயுக சாணக்கியரைப் பற்றி, அவரோடு நெருங்கிப் பழகி அவருடைய அபிமானத்திற்குப் பாத்திரமான டாக்டர் சி.கே.என். நாயர் எழுத்துக்களின் வழியே நாம் அறிந்து கொள்வோம்!

### முதல் சந்திப்பு

1938 ஜூலை மாதத்தில்தான் நான் முதல் முதலாக திருவனந்தபுரத்திற்கு வந்தேன். என் வாழ்வில் அது ஒரு முக்கிய திருப்பம். 1938ல் நான் திருவனந்தபுரத்திற்கு வந்த போதிலும் 1941 ஜூலையில்தான் நான் திவான் சர்.சி.பி. ராமசாமி ஐயரவர்களை சந்தித்தேன். அப்பொழுது எனக்கு 21 வயது. மூன்று ஆண்டுகளாக நான் அங்கு படித்துக் கொண்டிருந்த போதிலும் சர்.சி.பி அவர்களை அதற்குமுன் நான் பார்த்ததில்லை. என் இரசாயனப் பேராசிரியர் டாக்டர் முட்கில் எனும் பெருமகனார் தாம் என்னைப்பற்றி ஒருமுறை திவான் சர்.சி.பியிடம் கூறியிருக்கிறார்.

### மரணத்தின் விளிம்பில்

1938ம் வருடம் ஜூலை மாதத்தில் நான் அறிவியல் கல்லூரியில் இரசாயன வகுப்பில் பி.எஸ்ஸி. மாணவனாகச் சேர்ந்தேன். கல்லூரியில் சேர்ந்த அன்றே ஒரு கார் விபத்தில் சிக்கித் தலையில் அடிபட்டு மயக்க நிலையில் திருவனந்தபுரம் பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அதனால் மருத்துவமனை ரெக்கார்டுகளில் ஓர் அனாதை என எழுதிவிட்டார்கள்.

இந்த அனாதையின் தலையில் சுமார் எட்டு மணி நேர அறுவை சிகிச்சையை செய்து முடித்தனர் அங்கிருந்த டாக்டர்கள். அன்று அறுவை சிகிச்சையில் புகழ்

பெற்று விளங்கிய டாக்டர் ஜேக்கப் தளியத் எஃப்.ஆர்.சி.எஸ்; டாக்டர் கேசவன் நாயர் எஃப்.ஆர்.சி.எஸ் போன்றவர்கள் தாம் தீவிரமாகப் போராடி மரணத்தின் விளிம்பிலிருந்து என்னை மீட்டார்கள். சற்று சிந்தித்துப் பாருங்கள். அரசு பொது மருத்துவமனையில், எந்த சிபாரிசுமில்லாத அனாதை எனக் கருதப்பெற்ற ஓர் இளைஞனுக்கு, புகழ் பெற்ற இரண்டு அறுவை சிகிச்சை நிபுணர்கள் எத்தகைய பிரதிபலனையும் எதிர்பாராமல், ஓர் அபாயகரமான அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்து காப்பாற்றியுள்ளார்களென்றால், அதற்கு முக்கிய காரணம் சர்.சி.பியின் நிர்வாகத் திறன்தான். இன்றைய சூழலில் இத்தகைய மருத்துவ வசதியை டில்லி உள்பட வேறு எந்த மாநில அரசு மருத்துவமனைகளிலாவது நாம் எதிர்பார்க்க முடியுமா?

மறுநாள் என் மயக்கம் தெளிந்ததும் டாக்டர் ஜேக்கப் என்னைப் பற்றி விசாரித்தார். நான் அறிவியல் கல்லூரியில் இரசாயன வகுப்பில் படிக்க நேற்று சேர்ந்துள்ள மாணவன் என்பதைத் தெரிந்து கொண்ட அவர், உடனே என்னைப்பற்றி அன்றைய அறிவியல் கல்லூரி முதல்வர் டாக்டர் முட்கிலுக்கு செய்தியனுப்பினார். தொடர்ந்து நாலரை மாதங்கள் நான் மருத்துவமனையில் தங்க வேண்டியதாயிற்று.



சர்.சி.பி.ராமசாமி ஐயர்

எனக்கு நேர்ந்த விபத்து பற்றிக் கேள்விப்பட்ட டாக்டர் முட்கில், என் பழைய சான்றிதழ்களை எடுத்துப் பார்த்திருக்கிறார். 1938ம் வருடத்தில் சென்னை பல்கலைக்கழகத்தில் இரசாயன பாடத்தில் 100ற்கு 98 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்தில் முதல் மாணவனாக நான் வெற்றி பெற்றிருப்பதைக் கண்டு வியந்துள்ளார். அப்பல்கலைக்கழகத்தில் இதற்கு முன்பு யாருமே இரசாயன பாடத்தில் இந்த மதிப்பெண்ணைப் பெற்றதில்லை என்பது என் மீது அவர் பரிவுகாட்ட ஒரு முக்கிய காரணமாயிற்று எனலாம். டாக்டர் முட்கில் எனக்கு அறுவை சிகிச்சை செய்த டாக்டர் ஜேக்கப்பின் நெருங்கிய நண்பரும்கூட.



மறுநாள் டாக்டர் முட்கில் டாக்டர் ஜேக்கப்புடன் மருத்துவமனையில் என்னை வந்து பார்த்தார். பிறகும் நான் அங்கிருந்த நாலரை மாதங்களில் பலமுறை அங்கு வந்து உடலாலும் உள்ளத்தாலும் தளர்ந்து கிடந்த என்னைத்தட்டிக் கொடுத்து தைரியமூட்டினார். ஆறுதல் கூறினார். இவ்வாறு, வகுப்பில் தொடங்க இயலாது போன ''குரு சிஷ்ய உறவு'' எதிர்பாராத விதமாக பொது மருத்துவமனையில் தொடங்கியது!

வழக்கம்போல் ஒரு நாள் அவர் என்னைப் பார்க்க மருத்துவமனைக்கு வந்தபோது, நான் அவரிடம், ''சார், கடந்த நான்கு மாதங்களாக நான் வகுப்பில் ஆஜராகவில்லை. இந்நிலையில் நான் தேர்வு எழுதமுடியுமா?'' என்று கேட்டேன். ''மை டியர் பாய்! இதென்ன கேள்வி? இதோ நிற்கிறாரே, இந்த டாக்டர் ஜேக்கப் இல்லையெனில் இந்த வருடம் மட்டுமல்ல, உன் வாழ்க்கையே நஷ்டப்பட்டிருக்கும். காலேஜ் திறந்து ஐந்து மாதங்களாயிற்று. நீயோ ஒரு நாள் கூட வகுப்பில் ஆஜராகவில்லை. ஒரு வேளை தேர்வு எழுத உன்னை அனுமதித்தால் கூட நீ என்ன எழுதிவிட முடியும்? இதுவரை நடந்த பாடங்களையெல்லாம் படிக்க வேண்டாமா? அது நடக்கிற காரியமா? அது மட்டுமல்ல. உனக்குப் போதிய அளவு ஆஜர் இல்லாததற்கு எக்ஸெம்ஷன் தரும் அதிகாரம், இந்த ஆண்டு தொடங்கியுள்ள திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகிய சர்.சி.பி. ராமசாமி ஐயருக்கு மட்டுமே உள்ளது. எனவே அதைப் பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டிய நேரமல்ல இது. எதைச் செய்ய வேண்டுமோ அதை வேளை வரும்போது நானே செய்வேன். கவலையை விடு'' என்றார்.

அவர் இத்துடன் நின்று விடவில்லை. அடுத்த முறை திவானைச் சந்தித்தபோது என் பிரச்னை பற்றி அவரிடம் விரிவாகப் பேசியிருக்கிறார்.

சென்னைப் பல்கலைக்கழக மதிப்பெண் ரெக்கார்டைத் தகர்த்த என் இரசாயன பாடத்தின் மதிப்பெண்ணைக் கேட்ட சர்.சி.பி. மிகவும் மகிழ்ந்திருக்கிறார். எனக்குத் தேவையான ஆஜர் எக்ஸெம்ப்ஷனை உடனே அளிக்குமாறு ரெஜிஸ்திராருக்கு உத்தரவிட்டார்.

அதன்பின் 1940ல் பி.எஸ்ஸி இரசாயனத் தேர்வில் முதல் வகுப்பில் நான் தேர்ச்சி பெற்றபோது மீண்டும் ஒருமுறை என்னைப் பற்றி என் பேராசிரியர் டாக்டர் முட்கில் சர்.சி.பியிடம் கூறியிருக்கிறார்.

உலகப் புகழ்பெற்ற ஜெர்மன் இரசாயன மேதை டாக்டர் ஜெ.எச். வெயிட்டன் எனும் விஞ்ஞானியின் கீழ் உதவி ஆராய்ச்சியாளனாக நான் பாரி அன்ட் கம்பெனியில் சேருவதற்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இது. பாரி அன்ட் கோ வில்

ஓராண்டு பணியாற்றினேன். இருப்பினும் ஏனோ என் மனம் அப்பணியில் ஒட்டவில்லை. மீண்டும் பல்கலைக்கழகத்தில் இரசாயன ஆராய்ச்சியாளனாக சேர வேண்டுமென்பதுதான் என் குறிக்கோளாக இருந்தது.

1941 ஜூலை மாதத்தில், இரசாயன ஆராய்ச்சிப் பிரிவில் சேருவதற்கு ஒரு மாணவனுக்கு அனுமதியளிக்கலாம் என டாக்டர் முட்கில் தீர்மானித்தார். அதில் என்னைச் சேர்க்க அவர் விரும்பினாலும் அதிலும் ஒரு சிக்கல் இருந்தது. பட்டதாரியானபின் ஆராய்ச்சிப் பிரிவில் சேர வரும் மாணவனுக்கு அன்றைய ஃபெல்லோஷிப் தொகை மாதந்தோறும் ஐம்பது ரூபாய் மட்டுமே. அதே வேளையில் பாரி அன்டு கம்பெனியில் நான் பெற்று வந்ததோ மாதந்தோறும் 200 ரூபாய். மாதந்தோறும் 200 ரூபாய் பெற்று வந்த ஒருவனை இழுத்து வந்து 50 ரூபாய் கொடுக்க வேண்டுமா? அது அநீதியல்லவா என எண்ணினார் டாக்டர் முட்கில்.



“முட்கில்! தங்களுடைய சீடனுக்காகத் தாங்கள் எடுத்துவரும் முயற்சிகளைக் கண்டு மகிழ்கிறேன். இந்த நாட்டிலுள்ள ஆசிரியர்கள் தங்களைப் போல இருந்தால் இன்றைய யுவ தலைமுறை பெரும் சாதனைகளை நிகழ்த்தும்...”

அடுத்த முறை டாக்டர் முட்கில் சர்.சி.பியைச் சந்தித்தபோது என் பெயரைக் குறிப்பிட்டு ''சார்! அவனுக்கு ஃபெல்லோஷிப் அளிக்கும் விஷயத்தில் எனக்குச் சில பிரச்னைகள் உள்ளன'' என்று கூறியிருக்கிறார்.

''ஓ! அந்த நாராயணன்தானே! அவனுக்கு என்ன பிரச்னை? பாரி அன்ட் கம்பெனியில் அவன் இப்பொழுது என்ன சம்பளம் வாங்குகிறான்?'' என்று கேட்டிருக்கிறார்.

''200 ரூபாய் சார்'' என டாக்டர் முட்கில் கூற, ''நல்லது. நான் இன்றே ஒரு முடிவெடுக்கிறேன்'' என்று கூறியுள்ளார் சர்.சி.பி.

அதன்பின் இரண்டு நாட்களுக்குள் துணைவேந்தர் எனும் நிலையில் சர்.சி.பி, டாக்டர் முட்கிலுக்கு ஓர் உத்தரவை அனுப்பினார். அதில் என் ஃபெல்லோஷிப் தொகை மாதம் இரு நூறு ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது எனக் குறிக்கப்பட்டிருந்தது.

உடனே டாக்டர் முட்கில் அன்றைய பாரி அன்ட் கம்பெனியின்



ஜெனரல் மேனேஜர் அலேர்ட்டன் துரையை அழைத்து என்னைத் தம்முடைய அலுவலகத்திற்கு அனுப்பும் படி கூற அவரும் என்னை அனுப்பி வைத்தார்.

என்னைக் கண்டதும் டாக்டர் முட்கில், ''நாராயண், நீ பாக்கியவான்தான். சந்தேகமில்லை. சர்.சி.பி. அவர்களே ஆராய்ச்சி ஃபெல்லோஷிப்பிற்கு உரிய அனுமதியை உனக்கு நேரடியாகவே அனுப்பியுள்ளார். எனவே நீ அவரை நேரில் சந்தித்து நன்றி கூற வேண்டும். அதுதான் முறை. நான் நாளை காலை பத்து மணிக்கு சர்.சி.பியைக் காணச் செல்கிறேன். அவரிடம் முன் அனுமதி பெறாமலேயே உன்னை அவரிடம் அழைத்துச் செல்ல விரும்புகிறேன். நீ அவரைச் சந்தித்துப் பழகினால் அத்தொடர்பு ஒருவேளை உன் எதிர்கால வாழ்விற்குப் பயனுடையதாக அமையலாம். எனவே நாளை நாமிருவரும் பக்தி விலாசத்திற்குச் செல்கிறோம். நாளை காலை ஒன்பது மணிக்கு இங்கு வந்துவிடு'' என்றார்.

### பக்தி விலாசம்

திருவிதாங்கூர் மக்களுக்கு மிகப்பழக்கமான பெயர். அரசியல்வாதிகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கிய இடம். ஆம். அதுதான் திவான் சர்.சி.பியின் பங்களா.

மறுநாள் காலை பத்து மணிக்கு டாக்டர் முட்கிலும் நானும் பக்தி விலாசத்தையடைந்தோம்.

அங்கிருந்த போலீஸ்காரர்களும் ஊழியர்களும் டாக்டர் முட்கிலுக்களித்த மரியாதையைக் கண்டு வியப்புற்றேன். அனைவருடைய வணக்கங்களையும் வரவேற்பையும் ஏற்றவாறு முட்கில் கம்பீரமாக நடந்துசென்றார். அவரைக் காணும் யாருமே அவருக்கு வணக்கம் செலுத்தாமலிருக்க முடியாது. அந்த கம்பீரமான உருவத்தின் முன் யாருடைய தலையும் சற்று தாழத்தான் செய்யும். ஆறடிக்கும் அதிகமான நெடிய உருவம். முறுக்கிச் சுற்றியது போன்ற சுரிதார் பைஜாமா. பளபளக்கும் கருப்பு பூட்ஸ். கோடு போட்ட முழுக்கைச் சட்டை. புள்ளிகளாலான பெரிய பஞ்சாபி தலைப்பாகை. ஏறு போன்ற நடை. மொத்தத்தில் அவர் ஒரு பஞ்சாப் சிங்கமாகவே செயல்பட்டார். மிக விரைவாக நடக்கும் அவருக்குப் பின்னால் நான் ஓட வேண்டியிருந்தது.

மாடிப்படிகள் ஏறியதும் நம் கண்ணில் படுவது ''பிரைவட் செக்ரட்டரி டு தி திவான்'' எனும் பெயர்ப்பலகைதான். டாக்டர் முட்கில் அதைக் கவனிக்காமலே நடந்து சென்று சர்.சி.பியின் விசாலமான அறைக்கதவை முன்னறிவிப்பு ஏதுமின்றித் தள்ளித்திறந்து உள்ளே சென்றார். நானும் பின் தொடர்ந்தேன்.

முட்கிலைக் கண்ட சர்.சி.பி,

தன் இருக்கையிலிருந்து எழுந்தார். "ஹலோ! முட்கில், குட்மார்னிங் டூ" என்று கூறியபடி எதிரேயுள்ள இருக்கையில் அமரும்படி கூறினார். பின் என்னை ஒரு நிமிடம் ஏற இறங்கப் பார்த்தார். அதன்பின் முட்கிலிடம், "தங்களோடு வந்துள்ள இந்த இளைஞன், தாங்கள் முன்பு கூறியுள்ள நாராயணன் என நினைக்கிறேன்" என்றார்.

"உண்மைதான். தங்களிடம் முன் அனுமதி பெறாமலேயே இவனை இங்கு அழைத்து வந்ததற்கு மன்னியுங்கள். தாங்கள் இவனுக்கு அனுமதித்துள்ள ஃபெல்லோஷிப்பிற்கு நன்றி கூறவே இங்கு வந்துள்ளான்" என்றார் டாக்டர் முட்கில்.

"முட்கில்! தங்களுடைய பெருந்தன்மைக்கு என் நன்றி. தங்களுடைய சீடனுக்காகத் தாங்கள் எடுத்து வரும் முயற்சிகளைக் கண்டு பெரிதும் மகிழ்கிறேன். இந்த நாட்டிலுள்ள ஆசிரியர்கள் தங்களைப் போல் இருந்தால் இன்றைய யுவ தலைமுறை பெரும் சாதனைகளை நிகழ்த்தும்."

மீண்டும் முட்கில் சர்.சி.பியிடம், "தங்களிடம் நான் முன்பு கூறியது நினைவிருக்கும் என நம்புகிறேன். இவன் 1938ல் சென்னை பல்கலைக்கழகத்தின் இன்டர்மீடியட் தேர்வில் இரசாயன பாடத்தில் அதுவரையுள்ள எல்லாப் பல்கலைக்கழக ரெக்கார்டுகளையும் தகர்த்தெறிந்து 100க்கு 98 மதிப்பெண்கள்

★ இலக்கியத் துளி

## கூடல் இழைத்தல்

*பழைய காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கிய நிமித்தங்களில் கூடல் என்பது ஒன்று. மணலில் சுழி சுழியாக வரைந்து கொண்டே வந்தால் ... தொடங்கின இடத்தில் வந்து முடிந்தால் நினைத்த காரியம் கைகூடும் என்று கொண்டு மகிழ்ச்சியடைந்தார்கள். அப்படி முடியா விட்டால் அது தீய நிமித்தம். காரியம் கைகூடாது என்பதற்கு அறிகுறி. தலைவனைப் பிரிந்த காதலி அவன் வருவானா என்று கூடல் இழைத்துப் பார்ப்பது வழக்கம் என்று பழைய இலக்கியங்களால் தெரிய வருகிறது. ஆண்டாள் இந்த நிமித்தத்தைப் பார்த்தபோது பாடியதாக நாச்சியார் திருமொழியில் ஒரு பகுதியே இருக்கிறது.*

பெற்று அப்பல்கலைக்கழகத்தின் முதலிடத்தைக் கைப்பற்றியவன். அந்த மகத்தான வெற்றியில் இவனைத் தவிர வேறொருவருக்கும் அதில் பங்குண்டு. யூனியன் கிறிஸ்டியன் காலேஜில் இவனுக்கு இரசாயனம் பற்றி வகுப்பெடுத்த கெமிஸ்டிரி புரஃபசர் டி.ஆர். அனந்த ராமய்யர்தான் அந்த மற்றொருவர். அவருடைய அன்பு மாணவன் இவன். கடந்த பல ஆண்டுகளாக மாணவர்களுக்கு இரசாயன பாடம் நடத்தும் ஒரு பேராசிரியர் நான். பல ஆண்டுகளாக ஆசிரியர் தொழில் புரிந்து



வரும் என்னிடம் படித்த மாணவர்களுள் மூன்றோ நான்கோ மாணவர்கள்தாம் தங்கள் அறிவாற்றலாலும் திறமையாலும் என்னைக் கவர்ந்தவர்கள். அவர்களுள் இந்த நாராயணனும் ஒருவன். அதுமட்டுமல்ல, புகழ்பெற்ற இரசாயனப் பேராசிரியர் டாக்டர் ஹார்னரின் பாராட்டினைப் பெற்று அவருடைய அபிமான சீடனாகவும் விளங்குகிறான் இவன்" என்றார்.

முட்கில் இவ்வாறு கூறியபின் சர்.சி.பி. என்னை எதிரேயுள்ள சோபாவில் உட்காரும்படி கூறினார்.

"வேண்டாம் சார். நான் நிற்கிறேன்."

"யங்மேன். ப்ளீஸ் சிட் தேர்" சி.பி. வற்புறுத்தினார்.

வேறுவழியின்றி நான் சோபாவின் விளிம்பில் அமர்ந்தேன்.

பின் சர்.சி.பி. என்னிடம்கேட்டார்... "நாராயணன், பாரி அன்ட் கம்பெனியில் கிடைத்த நல்ல வேலையை விட்டு விட்டு பல்கலைக்கழகத்தில் ஓர் ஆராய்ச்சி மாணவனாகச் சேர்வதில் என்ன லாபத்தைக் கண்டாய்?"

"சார், பாரி கம்பெனி வேலையை விட ஓர் ஆராய்ச்சி மாணவனாக மேற்படிப்பில் ஈடுபட நான் கொண்ட ஆர்வம்தான் காரணம். என்னுடைய அந்தக் கனவை நிறைவேற்றி எனக்கு ஃபெல்லோஷிப் அளித்த [illegible]

ளுக்கு என் இதயங்கனிந்த நன்றியை நேரில் தெரிவிக்கவே நான் வந்துள்ளேன்"

"இரசாயனத்தில் எந்தத் துறையில் ஆராய்ச்சி செய்ய விரும்புகிறாய்?"

"விவசாயத் துறையில்"

உடனே சர்.சி.பி. முட்கிலிடம், "இரசாயனத்தில் இத்தகைய ஒரு துறை நம் ரிசர்ச் டிப்பார்ட்மென்டில் உண்டா?" என்று கேட்டார்.

"உண்டா என்று கேட்டால் அத்தகைய ஒரு துறை இல்லை என்றே கூறலாம். ஆனால் அதே வேளையில் முற்றிலும் இல்லை என்றும் கூறிவிட முடியாது. இதுதான் இன்றைய நிலை. தெளிவாகவே கூறிவிடுகிறேன். இரசாயன அடிப்படையில் விவசாய ஆராய்ச்சிகள் நடப்பது திருவனந்தபுரத்தில் அல்ல, மாறாக அவை கொல்லத்தில்தான் நடைபெறுகின்றன. விவசாயத் துறையின் கீழ் செயல்பட்டுக் கொண்டிருந்த இந்த ஆராய்ச்சிப் பிரிவை அங்கிருந்து மாற்றி பல்கலைக்கழகத்தின் கீழ்க் கொண்டு வந்ததைத் தாங்களும் அறிவீர்களே!"

"அப்படியானால் நாராயணனை கொல்லத்திற்குத்தான் அனுப்ப வேண்டுமா?"

"சார், அதை இப்பொழுது கூற முடியாது. நாராயணனுடைய ஆராய்ச்சிக்குத் தேவையான உபக[illegible]லிருந்து

இங்கு கொண்டு வர முடியுமா என் பதை முதலில் பார்க்க வேண்டும். விவசாயம் பற்றிய ஆராய்ச்சிக்கு ரிய அனைத்து வசதிகளையும் முத லில் திருவனந்தபுரத்தில் ஏற்ப டுத்த வேண்டுமென்பதுதான் என் லட்சியம். எது எப்படியிருப்பி னும் முதல் ஆறுமாதங்கள் நாராய ணன் இங்கு இருக்கட்டும். அதற் குள் ஆராய்ச்சியினை எங்குத் தொட ரலாம் என்பது பற்றி ஒரு முடி விற்கு நாம் வந்துவிடலாம். இதற் கிடையில் டாக்டர் ஹார்னர் இவனை கண்ணன் தேவன் கம்பெ னிக்கு அழைத்துச் செல்ல ஒரு திட் டத்துடன் என்னை அணுகி யுள்ளார்'' என்றார் முட்கில்.

இவை அனைத்தையும் பொறு மையாகக் கேட்டபின் சர்.சி.பி. என்னை நோக்கி, ''நாராயணன், உன்னைப் பற்றிய செய்திகள் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின் றன. நீ எப்போது வேண்டுமானா லும் என்னை நேரில் வந்து சந்திக்க லாம். அதற்கென முன் அனுமதி எதுவும் தேவையில்லை. என்னை எப்பொழுது நேரில் சந்திக்க விரும் புகிறாயோ அந்த விபரத்தை உடனே சிதம்பரத்திடம் ஃபோ னில் தெரியப்படுத்து. சரி. நான் முட்கிலிடம் சிறிது தனியே பேச வேண்டியுள்ளது'' என்றார்.

''நீ வெளியே காத்திரு'' என்றார் முட்கில். நான் பங்களாவிற்கு வெளியேயுள்ள பூங்காவில் காத்தி ருந்தேன். மனத்திற்குள் பல்வேறு சிந்தனைகள் அலைபாய்ந்தன. என் குருநாதர் டாக்டர் முட்கில் மூலம் சர்.சி.பி அவர்களைச் சந்தித்த இந்த முதல் சந்திப்பு தான் என் பிற்கால வாழ்க்கையில் ஏற்பட்ட எல்லா முன்னேற்றங்களுக்கும் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம்.

– தொடரும்



திரு. சுகி சிவம், பாரதி சுராஜ் போன்ற அறிஞர்கள் பாராட்டும் மிக அற்புதமான நூல்...ஸ்ரீகாஞ்சி மகாபெரியவாள் செய்த அற்புத சித்துக்கள், அருளிய அருள் உபதேசங்கள் அனைத்தும் அடங்கிய கவி நூல். மொத்தம் 192 பக்கம். விலை ரூ.60/- மட்டுமே (விலை ரூ.50 தபால் செலவு ரூ.10) அனுப்பி, கவியோகி வேதம் (போன்: 24490246) 3/496, ரெங்கா ரெட்டிகார்டன், நீலாங்கரை, சென்னை - 600 041 அவர்களிடமிருந்து பெற்று விமர்சனம் எழுதுபவர்களுக்குப் பரிசுகளும் ஸ்ரீஅன்னை சக்தி யோகா அன்பர்களால் தரப்படும்.

வாங்குக! முந்துக!





நேயர் கேள்விகள்

# தென்கச்சி பதில்கள்!



■ பட்டாம்பிராமையர், பாண்டிச்சேரி-8.

● உங்கள் பிறந்த ஊரான தென்கச் சிக்கு குறிப்பிட்டுச் சொல்லும்படி யாக ஏதாவது நன்மைகள் செய்திருக் கிறீர்களா?




★ அந்த ஊரைவிட்டு விலகி வந் திருக்கிறேனே இது ஒன்று போதாதா?

■ புலவர்.ஆ. ஞானசேகரன், திருலோக்கி.

● அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும் என்னும் முதுமொழியை விளக்குங்கள்.

★ இந்த முதுமொழிக்கு விளக்கம் என்ன என்று இரண்டு முதியவர்க ளிடம் கேட்டேன்.

ஒருவர் சொன்னார்: அரசன் உடனே தண்டனை வழங்குவான். ஆண்டவன் நிதானமாக தண்டனை வழங்குவான்.

இன்னொருவர் சொன்னார்: எந்த தண்டனையும் அரசன் கொடுப்பது அல்ல. (கொல்வது அரசன் அன்று!)

பின்னால் நின்று கொண்டிருக்கிற ஆண்டவனே அரசன் மூலமாக தண் டனையை வழங்குகிறான்.

■ சி.பி. சிவலிங்கம், கோவை-18.

● உண்மை சுடுமா?

★ உண்மையானவர்களை உண்மை சுடுவதில்லை!

பொய்யானவர்களுக்கு அது சூடா கத் தெரியும்!

■ கா. திருமாவளவன், திருவெண்ணெய் நல்லூர்.

● சார்! தங்களிடம் நாங்கள் கேள்வி கேட்கிறோம். அதற்கு நீங்கள் சுலபமாக பதில் சொல்லிவிடுகிறீர் கள். பதில் சொல்ல முடியாமல் தவித் ததுண்டா?

★ அடிக்கடி அப்படி தவிப்பதும் உண்டு!

அது உங்களுக்குத் தெரியாமல் மறைப்பதும் உண்டு!

■ நெய்வேலி.க. தியாகராசன்.
கொரநாட்டுக்கருப்பூர்.

● அறிவுப்பசி, ஆன்மீகப்பசி, பணப்பசி, பதவிப்பசி, புகழ்ப்பசி, வயிற்றுப்பசி - இவற்றில் எதற்கு முதலிடம் தருவது?




★ இறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள பசிக்குத்தான் முதலிடம் தர வேண்டும்.

அந்தப் பசி அதிகமானால் மற்ற பசிகள் எல்லாம் மரியாதையாக ஒதுங்கிக் கொண்டுவிடும்!

■ ஆடுதுறை.கோ. ராமதாஸன்.

● திருட்டுக்கு ஒரு சிறப்பான விளக்கம் ப்ளீஸ்....

★ நம்மிடம் இருக்கிற ஒன்று நமக்குத் தெரியாமல் இன்னொருவரிடம் போய்விடுகிறது பாருங்கள், அதற்குப் பெயர்தான் திருட்டு!




சிலசமயம் உள்ளதைப் பறிகொடுக்கிறோம். பல சமயம் உள்ளத்தைப் பறிகொடுக்கிறோம்.

■ எம். சண்முகம், கொங்கணாபுரம், சேலம் மாவட்டம்.

● ஒருவர் மனம்போல் இன்னொருவர் மனம் இல்லையே ஏன்?

★ அப்படி இருந்துவிட்டால், இந்த உலகத்துக்கு அந்த இன்னொரு மனிதனே தேவைப்படமாட்டான்!

■ கவிச்சுடர் இளங்கதிரவன், கோவை-18

● அமைதி தருவது எது?

★ "வாழ்க்கையில் அமைதியான நேரம் எது தெரியுமா?

எந்தவிதமான நிபந்தனைகளும் இல்லாமல் அன்பு செலுத்துகிற நேரம் இருக்கிறது பாருங்கள்..... அதைவிட அமைதியான நேரம் வேறு எதுவுமில்லை!"- என்கிறார் ஓஷோ.

■ மனோ மணாளன், கோவை-11

● எந்த விதிக்கும் விதிவிலக்குண்டு என்ற வாசகத்திற்கு விளக்கம் தருக.

★ ஒருநாள் முதல்வர் எம்.ஜி.ஆர் மதுரை மாவட்ட மருத்துவமனைக்கு வருகிறார்.

ஒவ்வொரு பகுதியாக சுற்றி வருகிறார். வழியில் கிழே ஒருவர் படுத்திருப்பதைப் பார்க்கிறார்.






"தெரிந்த முகமாக இருக்கிறதே... யார் இவர்?" என்று பக்கத்தில் இருந்த மருத்துவ அதிகாரியைக் கேட்கிறார். அவர் சொல்கிறார்:

"அவர்... முன்னாள் அமைச்சர் கக்கன்!"

"ஏன் அவருக்கு ஸ்பெஷல் வார்டு கொடுக்கவில்லை?"

"ஸ்பெஷல் வார்டு கட்டணம் ஒரு நாளுக்கு 10 ரூபாய். அதைக்கட்ட அவரிடம் வசதி இல்லை!"

எம்.ஜி.ஆர் உடனடியாக அருகிலிருக்கும் தமது செயலாளர் பரமசிவத்தை அழைத்துச் சொல்கிறார்:

"கக்கன் இருக்கும்வரை அவருக்கு இலவசமாக மருத்துவ உதவி அளிக்க வேண்டும். மேலும் மாதம் 500 ரூபாய் ஓய்வு ஊதியம் பெற்றுத்தர வேண்டும். சென்னையில் அவர் தங்கியிருக்கும் வீட்டு வசதித் துறையின் வாடகை வீட்டை அவருக்குச் சொந்தமாக்கித் தரவேண்டும்!"

இந்த உத்தரவு நிறைவேற்றப்படுகிறது.

அரசியல்வாதிகளிலும் இப்படி சில விதிவிலக்குகள் உண்டு!


■ எம்.எஸ். சேகர், நீலிக்கோணாம்பாளையம்.

● இன்றைய பிஞ்சுகளின் வயதுக்கு மீறிய பேச்சுகள் எப்படி?

★ "ஏன்டா ஒரு மாதிரி இருக்கே?"

"பக்கத்துப் பையன்கிட்டே சண்டை!"

"இனிமே அதுமாதிரி போடாதே! இந்தா சாக்லேட்... இதை அவன் கிட்டே கொடு... சமாதானமாயிடு!"




மறுநாள்-

"என்ன ஆச்சு?"

"சமாதானமாயிட்டேன்!"

"என்ன சொன்னான்?"

"இன்னொரு சாக்லேட் கேக்கறான்!"

புத்தகப் பகுதி

# போமர்ஷே

- வெ. ராஜகோபாலன்

## அரசியல் நையாண்டியை அரங்கத்தில் ஏற்றியவர்!

*ஃபிரஞ்சு இலக்கிய வரலாறு முதல் பாகத்தில் ஆரம்பம் முதல் பதினேழாம் நூற்றாண்டு இறுதி வரையிலான இலக்கியவாதிகளை, இலக்கிய வகைகளை, சம்பவங்களைத் தொகுத்து வழங்கிய வெ.ராஜகோபாலன், அதன் இரண்டாம் பாகத்தில் பதினெட்டாம் நூற்றாண்டு இலக்கியவாதிகளை அருமையாகக் காட்டுகிறார். பாரீஸ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று, பிரஞ்சு பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர் வெ.ராஜகோபாலன். இவர் பிரஞ்சு இந்திய அரசில் பிரஞ்சு-தமிழ் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர். நூலாசிரியரின் இந்த அனுபவம், ஃபிரஞ்சு இலக்கிய வரலாறு (பதினெட்டாம் நூற்றாண்டு) நூலை ஆழமும் எளிமையும் கலந்து வெளிக் கொணர உதவியிருக்கிறது. நூலின் ஆரம்பத்தில் ஃபிரெஞ்சுச் சொற்களை உச்சரிக்க உதவிக் குறிப்புகளையும் கொடுத்துள்ளார். நாடகங்கள், கவிதைகளின் போக்கை எளிதாகச் சொல்லியிருக்கிறார்.*

*ஒரு இடத்தில் லெப்ரேனின் நகைச்சுவை வரிகளை மேற்கோளாகக் காட்டியிருக்கிறார். அந்த வரிகள்...*

"ஆ... என் வீட்டில் திருட்டுப் போய்விட்டது!

ஐயோ பாவம்! உனக்கு என் அனுதாபங்கள்.

நான் எழுதி வைத்திருந்த கவிதைகள் அனைத்தும் கொள்ளை போய்விட்டன!

ஐயோ பாவம், திருடன்! அவனுக்கு என் அனுதாபங்கள்!"

*... இந்நூலில் இடம்பெற்ற போமர்ஷே பற்றிய பகுதி மஞ்சரி வாசகர்க்கு புத்தகப் பகுதியாக ...*

*நூலின் பெயர்: ஃபிரஞ்சு இலக்கிய வரலாறு(பதினெட்டாம் நூற்றாண்டு)*

*வெளியீடு: காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024 விலை: ரூ. 95/- பக்கங்கள்: 209*



### அரசியல் நையாண்டி:

தனிமனிதனுடைய குணக் குறைகளைக் கிண்டல் செய்வது ஒருவகை நகைச்சுவை; சமுதாயத்தின் அங்கமான சில அமைப்புகளை (நீதித்துறை, அலுவலகங்கள், சில அரசியல் கொள்கைகள், சட்டங்கள், சில பொதுநிகழ்வுகள் இன்னபிற) நாடகக் கதையின் ஊடே அவ்வப்போது மறைமுகமாகக் குத்திக்காட்டிக் கிண்டல் செய்வது வேறு ஒருவகை.

கருத்துச்சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டபோதெல்லாம் இத்தகைய நையாண்டிக்கு வாய்ப்புண்டு. ஆனால் இது பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஓரளவு விவரம் தெரிந்த மக்களுக்கும் மட்டுமே நன்கு விளங்கும். (திரு 'சோ'வின் நாடகங்கள் நம் நினைவிற்கு வருகின்றன.)

இவற்றில் வசனங்கள், வேட ஒற்றுமை, அங்க சேஷ்டைகள் ஆகியவற்றுக்கு முக்கிய இடமுண்டு. உரையாடலில் சொன்ன சொல்லுக்குப் பின்னணியில் சொல்லப் படாமல் விட்ட தகவல்களே அதிகம் இருக்கும். பார்ப்பவர்களுக்குச் சொல்லம்புகள் யாரை இலக்காகக் கொண்டுள்ளன என்பது தெற்றெனப் புலப்படும். இவ்வகை நகைச்சுவையில் தம் இரண்டே நாடகங்கள் மூலம் பெயர் பெற்றவர் போமர்ஷே. அறிவியல் நூற்றாண்டின் பல புரட்சிக் கருத்துகளை மேடை ஏற்றிய பெருமை இவருக்குண்டு.

**கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளித் தற்று - குறள்:**

1732-ல் பாரீஸில் ஒரு கடிகாரக் கடைக்காரரின் மகனாகப் பிறந்தார் போமர்ஷே. தந்தையிடம் தொழில் பயின்று அதில் திறமை மிக்கவராகத் திகழ்ந்தார். இதைத் தொடர்ந்து அரண்மனைக் கடிகாரங்களைப் பராமரிக்கும் வேலை இவருக்குக் கிடைத்தது. ஹார்ப், புல்லாங்குழல் கருவிகளை நன்கு இசைக்கத் தெரிந்த இவருக்கு அரசகுமாரிகளிடம் பழகும் வாய்ப்பும் அதனால் நல்ல செல்வாக்கும் கிட்டின. இவர் தம் நிலையை உயர்த்திக் கொண்டார். நண்பர்களுக்கும் உதவினார்.

1767 - 70 ஆண்டுகள் இடையே இவர் எழுதிய நாடகங்கள் படுதோல்வி கண்டன. திருமணமாகிப் பத்தே மாதங்களில் முதல் மனைவி இறந்தாள். 1768-ல் போமர்ஷே மறுமணம் செய்துகொண்டார். இரண்டாண்டுகளில் இம்மனைவியும் இறந்தாள். சிலகாலம் சென்றபின் இவர் மூன்றாம் முறை திருமணம் செய்து கொண்டார்.

ஒரு நண்பருடன் சேர்ந்து கூட்டு வியாபாரம் தொடங்கினார். மிகுந்த பொருள் சேர்ந்தது. கூட்டாளி தொடுத்த கோர்ட் வழக்குகளையும் சந்திக்க நேர்ந்தது. இங்கிலாந்து ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு ரகசிய தூதுப் பணிகளில் இவர் அனுப்பப்பட்டார். 1775-ல் அமெரிக்காவில், இங்கிலாந்தின்



பிடியிலிருந்த பகுதிகளில் மக்கள் புரட்சி எழுந்தது. போமர்ஷே ஒரு வியாபாரக் கம்பெனி தொடங்கி, தம் கப்பல் மூலமாக ஃபிரான்ஸ் அரசர் அனுமதியுடன் ரகசியமாக ஆயுதங்களையும் போர்த் தளவாடங்களையும் கிளர்ச்சியாளர்களுக்கு அனுப்பி உதவினார்.

*1775*-ல் இவர் எழுதிய செவீல் நகரத்து நாவிதன் (Le Barbier de Seville) எனும் நாடகம் பெரிய வெற்றி கண்டது. போமர்ஷே *1777*-ல் 'நாடக எழுத்தாளர்கள் சங்கம்' ஒன்று தொடங்கினார்; வொல்தேரின் நூல்கள் அனைத்தையும் மறுபதிப்புச் செய்தார். *1784*-ல் இவருடைய 'ஃபிகாரோவின் திருமணம்' (Le marriage de Figaro) என்ற நாடகம் பல தணிக்கைகளையும் எதிர்ப்புகளையும் கடந்து இவருக்குப் புகழ் சேர்த்தது.

ஃபிரஞ்சுப் புரட்சிக்குப் பின் தாய்நாட்டுக்காகத் துப்பாக்கி வாங்குவதற்கு ஹாலண்ட் சென்ற இவரை 'நாட்டை விட்டோடியவர்' பட்டியலில் சேர்த்து விட்டனர். ஹாம்பர்க் நகரில் இவர் வறுமையில் வாடி அலைந்தார். *1796*-ல் பாரீஸ் நகர் திரும்ப அனுமதிக்கப்பட்ட போமர்ஷே *1799*-ல் மறைந்தார்.

## இரு நாடகங்கள்:

செவீல் நகரத்து நாவிதன் (Le Barbier de Seville 1775) என்ற இந்நாடகம் *4* அங்கங்களைக் கொண்டது. ஒரு பிரபு தான் காதலிக்கும் பெண்ணை மணக்க விரும்பி அவளைப் பின்தொடர்ந்து வேறு ஊர் வருகிறான். அப்பெண்ணைப் பாதுகாக்கும் பொறுப்பேற்ற பெரியவர் தாமே அவளை மணம் செய்துகொள்ள விரும்பி அவளைத் தமது தீவிரக் கண்காணிப்பில் வைத்திருக்கிறார். பிரபுவின் பணியாளான ஃபிகாரோ யுக்திகள் பல செய்து பெரியவரை ஏமாறச் செய்து பிரபு அவளை மணக்க உதவுகிறான்.

## ஃபிகாரோவின் திருமணம்:

(Le Marriage de Figaro) *1784* - அதிகார வர்க்கத்தை நையாண்டி செய்யும் வசனங்கள் பல கொண்ட இந்நாடகம் நான்கு ஆண்டுகள் தணிக்கையாளர்களால் முடக்கப்பட்டுக் கிடந்தது. 6 முறை தணிக்கை செய்யப்பட்டது.

மன்னர் பதினாறாம் லூயி (*1791*-ல் ஃபிரஞ்சுப் புரட்சிக்குப் பலியானவர்) இந்நாடகம் 'அருவருக்கத்தக்கது' எனக் கூறினார். *1783*-ல் அரங்கேற்றத்திற்கு நாள் குறிக்கப்பட்டும், கடைசி நிமிடத்தில் இந்நாடகம் தடைசெய்யப்பட்டு ஒரு தனிநபர் வீட்டில் மேடையேறியது. அடுத்த ஆண்டு இத்தகைய எதிர்ப்புகளைத் தாண்டி வந்த இந்நாடகம் பரபரப்பை உண்டாக்கி ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டதில் வியப்பில்லை. நாடகம் மிகப் பெரிய வெற்றியடைந்தது. வெற்றிக் களிப்பில் திளைத்திருந்த போமர்ஷேவின் சில துடுக்கான வார்த்தைகள் மன்னரின் சினத்தைச் சீண்டி, சில நாட்கள் இவருக்கு சிறைவாசம் பெற்றுத் தந்தன.

'ஃபிகாரோவின் திருமணம்' எனும் கதை முந்தின நாடகத்தின் தொடர்ச்சியாக அமைந்திருக்கிறது. அந்நாடகத்தில் நாயகனாக வந்த பிரபுவின் மாளிகையில் ஃபிகாரோ ஒரு முக்கியப் பணியாள். அவன் பிரபு மனைவியின் பணிப்பெண்ணைக் காதலிக்கிறான். பிரபுவுக்கும் அதே பணிப்பெண் மேல் நாட்டம் விழுகிறது. எஜமானருக்கும் அவருடைய பணியாளுக்கும் இடையே ஒரே பெண்ணை முன்னிட்டு போட்டி. ஃபிகாரோ வெற்றி பெறுகிறான்.

அப்போதிருந்த பிரபுத்துவ சமுதாய அமைப்பில் ஒரு சாதாரணப் பணியாள் தன் சாதுர்யத்தினால் பெரிய பிரபுவைக் காதலில் தோற்கடிப்பதாக மேடையில் சித்தரிப்பது துணிச்சல்மிக்க புதுமை. கண்ணைக் கவரும் பல அரங்கமைப்புகள் கொண்ட இந்நாடகத்தில், இசைக்கும் பாடல்களுக்கும் முக்கிய இடமுண்டு.

## போமர்ஷேவின் எழுத்தாற்றல்:

போமர்ஷேவின் இவ்விரு நாடகங்களும்; சிக்கல்களும் திடீர்த் திருப்பங்களும் விபரீதச் சூழ்நிலைகளும் நிரம்பியவை. மாறுவேடங்கள் கலைவதும், குட்டு உடையும் நிலையில் புதுக்குழப்பங்கள் தோன்றுவதும், சிக்கல் அவிழும் தருணத்தில் மேலும் பல முடிச்சுகள் ஏற்படுவதும், நாடகம் பார்ப்பவர் கவனத்தை ஈர்த்துக் கட்டிப் போடும் தன்மை உடையவை. முடிச்சுகள் போடுவதிலும் செடுக்குகளை மாயாஜாலம் போல் மறையச் செய்வதிலும் ஒரு மாஜிக் நிபுணரின் வல்லமை பெற்றவர் எனக் கருதப்பட்டவர் போமர்ஷே.

இவரது கிண்டல் நேரடியாகச் சென்று ஆழமாகத் தைப்பது. பிரபுக்களைத் துச்சமாகக் கருதிப் பேசும் பணியாள் ஃபிகாரோவின் துடுக்குத்தனம், அக்காலக் கட்டத்து ஏழை ரசிகர்களுக்கு இனித்தது. எடுத்துக்காட்டாக, 'செவீல் நகரத்து நாவிதன்' நாடகத்தில் இதோ ஒரு வசனம்:

**"ஒரு வேலைக்காரனிடம் இத்தகைய பண்புகள் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டால், அத்தகைய வேலைக்காரனாக இருக்கத் தகுதி படைத்த பிரபு யாரையாவது உங்களுக்குத் தெரியுமா, மேன்மை தாங்கிய பிரபு ஐயா அவர்களே!"**

'ஃபிகாரோவின் திருமணம்' எனும் நாடகத்தில் தணிக்கையாளர்களும் நீதிபதிகளும் மருத்துவர்களும் கிண்டல் செய்யப்படுகிறார்கள்.

## ஃபிகாரோவின் பாத்திரப் படைப்பு:

மேற்கண்ட இரு நாடகங்களிலும் மையப் பாத்திரம் ஃபிகாரோ· போமர்ஷேவின் கருத்துகளை வெளியிடும் பாத்திரம் இவன்தான். தாழ்வெனக் கருதப்படுவதைப் பிழைப்புத் தொழிலாகக் கொண்டவனாயினும் ஃபிகாரோ ஒரு சகல கலா வல்லவன்; அறிவுக் கூர்மையும் துணிச்சலும் மிக்கவன். அடக்க முனைந்தால் எதிர்ப்புக்குரலை எழுப்பும் இவன் ஏமாறுவான் இல்லை. சுதந்திர மனப்போக்கும், அதிகாரத் தோரணைக்கு அடிபணியா மனமும், நீதிக்குப் போராடும் இயல்பும் இவனிடம் மிகுதி. ஃபிகாரோ எனும் பாத்திரத்தில் தம் இதயங் கவர்ந்த ஒரு சுதந்திர மனப்போக்கின் முழு உருவகத்தைக் காண்கின்றனர் ஃபிரஞ்சு மக்கள், இன்றுங்கூட.

பிரபு குடும்பத்து எஜமானனைச் சாதாரண ஒரு பணியாள் தோற்கடிப்பதை மக்கள் எழுச்சி மனப்போக்கின் பிரதிபிம்பமாகக் கண்டனர் அக்காலத்தில் வாழ்ந்தவர்கள். (நாடகம் அரங்கேறியபின் ஐந்து ஆண்டுகளில் ஃபிரஞ்சுப் புரட்சி வெடிக்கப் போவதை நினைவில் கொள்ள வேண்டும்.) மன்னராட்சி முறையையும் பிரபுத்துவ ஆணவத்தையும் தலைகுப்புறக் கவிழ்த்து சமுதாயத்தை மாற்றிய மைக்க குமுறிக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்கத்தினரின் வேணவாவை முன்னறிவிக்கிறது இந் நாடகம், இடிக்கிற வானம் மழையை முன்னறிவிப்பது போன்று! வேற்றுமைகள் பல இருப்பினும், வாய்விட்டு, மனம் விட்டுச் சிரிக்க வைப்பதில் போமர்ஷே 'மெலியேரின் வாரிசு' எனப் போற்றப்பட்டவர்.

## சுவைக்கச் சில துளிகள்:

ஃபிகாரோவின் திருமணம் எனும் நாடகத்தில் ஐந்தாம் அங்கம் மூன்றாம் காட்சியில் இடம்பெறும் ஃபிகாரோவின் தனியுரையில் இருந்து சில பகுதிகளின் மொழிபெயர்ப்பைக் கீழே காணலாம்:

(காதலில் தனக்குப் போட்டியாக வரும் பிரபுவிடம் சீற்றம் கொண்டு, புலம்புகிறான் ஃபிகாரோ.)

''...பிரபு அவர்களே! நிச்சயம் அவள் உங்களுக்குக் கிடைக்க மாட்டாள். ஆமாம், இதில் சந்தேகமேயில்லை. நீங்கள் பெரிய பிரபுவாக இருக்கலாம். அதனால் பெரிய மேதை என நினைப்போ? உயர்குடிப் பிறப்பு, பணம், அந்தஸ்து, பதவிகள் இவையெல்லாம் கர்வத்தை அளிக்கக் கூடியவையே. ஆனால் இவற்றைப் பெற நீங்கள் செய்தது என்ன? சிரமப்பட்டு (தாயைச் சிரமப்படுத்தி)ப் பிறந்து விட்டீர்கள் என்பதைத் தவிர, வேறு எதுவும் செய்யவில்லையே! மற்றபடி நீங்



கள் சாதாரண மனிதர்தான். ஆனால் நான்?

அநாமதேயக் கும்பலில் அடையாளம் தெரியாதவர்களிடையே ஒருவனாக இருந்துகொண்டு ஒவ்வொரு நாளும் உயிர் வாழ்வதற்கே எத்தனை ஜாலவேலைகள், புரட்டுக் கணக்குகள் போட வேண்டி இருக்கிறது! இவ்வறிவாற்றல்கள் இந்த ஸ்பெயின் நாட்டைப் போன்ற எத்தனையோ ஸ்பெயின் நாடுகளை நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆட்சி செய்வதற்குத் தேவையான அளவைவிட அதிகம்! என்னிடமா மோதுகிறீர்கள்...?



''இரசாயனம் கற்றேன்; மருந்தியல் படித்தேன்; அறுவை சிகிச்சையும் அறிந்து கொண்டேன். ஒரு பெரிய பிரபுவின் சிபாரிசு இருந்தும்கூட மாட்டு வைத்தியர் வேலைதான் எனக்குக் கிடைத்தது. பாவம், நோய் கண்ட வாயில்லா ஜீவன்களைப் போய் மேலும் துன்புறுத்துவானேன் என்று அதற்கு நேர் எதிர்த்தொழிலான, மனிதர்களை மகிழ்விக்கும் தொழிலுக்கு, (ஆமாம் இந்நாடகத் தொழிலுக்குத் தான்) வந்தேன். இதைவிட கழுத்தில் ஒரு பாறாங்கல்லைக் கட்டிக் கொண்டு கடலில் குதித்திருக்கலாம்!

மொகலாய மன்னர்தம் அந்தப்புர லீலைகளை வைத்து ஒரு நகைச்சுவை நாடகம் போட்டேன். நான் தான் இந்த ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவன் ஆயிற்றே! முகமதியர்களைக் கொஞ்சம் கிண்டல் செய்யலாமே என நினைத்தேன். எங்கிருந்தோ ஒருத்தன் வந்தானய்யா! நான் முஸ்லீம்களின் மத நம்பிக்கைகளை புண்படுத்தி விட்டேனாம்; பாரசீகம், ஈஜிப்ட், இந்தியாவின் சில பாகங்கள், திருப்போலி, ட்யூனிஸ், அல்ஜீரியா, மொராக்கோ ஆகிய நாடுகளை அவமதித்து விட்டேனாம்! இவ்வாறெல்லாம் கூடக் குரலிட்டான். அவ்வளவுதான்! 'கிறிஸ்துவ நாய்கள்' என்று நம்மைத் திட்டி நம் முதுகெலும்பு முறியநையப் புடைக்கும் துருக்கிய மன்னர்களை திருப்திப்படுத்துவதற்காக என் நாடகம் அம்பேல்! அறிவு பூர்வமாக வெல்ல முடியவில்லை; இடையூறு பண்ணிப் பழி வாங்குகிறார்கள்!...

''கையில் ஒரு காசுகூட இல்லாவிட்டால் என்ன? பணம் சம்பாதிக்கும் சுலப வழிகள் பற்றி ஒரு புத்தகம் எழுதினேன். உடனே என்னை வண்டியில் ஏற்றிச் சென்றார்கள். என் வருகைக்குத் தொங்குபாலம் இறங்கிக் கோட்டைக் கதவுகள் திறந்தன. என் சுதந்திரத்தையும் நம்பிக்கையினையும் அகழியிலேயே போட்டுவிட்டு உள்ளே சென்றேன். அநாமதேயன் எனக்குச் சிறையில் வைத்துத் தண்டச் சோறுபோட அலுத்துப்போய் சீக்கிரமே நடுத்தெருவில் விரட்டிவிட்டார்கள்.

ஆனால் ஜெயிலுக்கு வெளியே இருந்தாலும், சாப்பிட வேண்டியிருக்கிறதே! என்ன செய்வது? என் பேனாவைத்தான் மீண்டும் எடுத்தேன், ஏதாவது எழுதலாமேயென்று! புதிய விஷயம் ஏதாவது உண்டா எனப் பலரிடம் விசாரித்தேன்.

உறைவிடம் - உணவு - ஓய்வு - எனக்கு ஓசியில் அளிக்கப்பட்டிருந்த காலத்தில், மேட்ரிட் நகரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பதற்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் அந்தச் சுதந்திரம் புத்தக உற்பத்திக்கும் பொருந்தும் என்றும் சொன்னார்கள். ஒரே நிபந்தனை என்னவென்றால் என் எழுத்துக்களில் நான் அதிகார வர்க்கத்தைப் பற்றி எழுதக்கூடாது; மதவிஷயம், அரசியல், ஒழுக்கம் பற்றிப் பேசக்கூடாது; உள்ளூர் மக்களைப் பற்றி எழுதக்கூடாது; செல்வாக்குள்ளவர்களைப் பற்றி எழுதக்கூடாது; ஒப்பேரா அல்லது மற்ற கேளிக்கைகள் பற்றி எழுதக்கூடாது; குறிப்பிடும்படியாக யாரைப் பற்றியும் எழுதக்கூடாது; மற்றபடி நான் எதை வேண்டுமானாலும், இரண்டு மூன்று தணிக்கையாளர்களுக்கு உட்பட்டுச் சுதந்திரமாக எழுதலாம் என்றார்கள்!

**எகிப்தில் லிபியா பாலைவனத்தில் செழு நிலமாக உள்ள இடத்தில் சிவா என்று ஒரு ஊர் உள்ளது. இதைச் சைவா என்றும் சொல்லலாம். அங்கு ஆதிசமயிகளாகிய இந்துக்களின் பிரதான வணக்கத்திற்குரிய ஓர் அம்மன் ஆலயம் சிதைவுற்று அழிந்த நிலையில் இன்றளவும் உள்ளது.**

**– நெ. இராமன்**

மனத்துக்கினிய இந்தச் சுதந்திரத்தை அனுபவிக்க எண்ணி ஒரு மாத இதழ் தொடங்கப் போவதாக அறிவித்தேன். வேறு எவருடனும் போட்டியிடும் எண்ணமில்லை என்பதைக் காட்ட என் இதழுக்குப் 'பயனற்ற பத்திரிகை' எனப் பெயரும் இட்டேன். உடனே எதிர்ப்புக் குரல் எழுப்பினர், ஆயிரம் 'பிட் நோட்டீஸ்' எழுத்தாளர்கள். அவ்வளவுதான்! அதுவும் தடை செய்யப்பட்டது. பிழைக்க வழியற்ற நிலை மறுபடியும் வந்தது...

இந்த நிலைமையில்தான் கடவுள் எனக்குப் பழைய தொழிலை மீண்டும் காட்டி விட்டார். கத்தியைக் கையிலெடுத்தேன்; தகரப் பெட்டியையும் தீட்டும் பட்டைத் தோலையும் (அது இங்கிலாந்தில் தயாரித்ததாக்கும்!) கைக் கொண்டேன். கற்பனைக் கனவுகளைக் காற்றிலே பறக்கவிட்டு விட்டேன். அவற்றைப் பற்றிக் கொண்டு யார் வேண்டுமானாலும் பிழைத்து விட்டுப் போகட்டும் என்று ஊர்ஊராகச் சென்று சவரத் தொழில் செய்து கவலையற்றுப் பிழைப்பு நடத்தி வருகிறேன்; வெட்கத்தை நடுவழியிலேயே விட்டுவிட்டேன், காலை வீசி நடப்பதற்கு இதுவேறு என்ன வீண்சுமை என்று!

செவீல் நகருக்கு ஒரு பெரிய பிரபு வந்தார்; என்னைக் கண்டு கொண்டு தமது பணியில் அமர்த்திக் கொண்டார். அவருடைய திருமணத்தை நான் முடித்து வைத்தேன். தாம் விரும்பிய பெண்ணை அவர் அடைவதற்கு நான் செய்த முயற்சிகளுக்குக் கைம்மாறாக, நான் மணக்க விரும்பும் பெண்ணை என்னிடமிருந்து அவர் பறிக்கப் பார்க்கிறார்! இவ்விஷயத்தில் தான் எத்தனை சாமர்த்தியச் சூழ்ச்சிகள்....!''

(ஃபிகாரோவின் திருமணம் - V.3)


## கலைமகள்

மே 2004 இதழில் ...

- அமரர் ராமரத்னம் குறுநாவல் போட்டியில் முதல் பரிசு பெற்ற குறுநாவல்.
- ஜெயகாந்தன் படைப்புகள் ஒரு பார்வை - இலக்கிய விமர்சனம்
- பாகிஸ்தானில் இந்தியா பெற்ற மகத்தான கிரிக்கெட் வெற்றி - கட்டுரை

தனி இதழ் ரூ.10/- ஆண்டுச் சந்தா ரூ. 120/-

கலைமகள், 1. சம்ஸ்க்ருதக் கல்லூரித் தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004

# குணச் சித்திரம்


**டச்சு சினிமாக் கதை**

**ஆஸ்கார் பரிசு பெற்ற படம்**

சிறந்த அயல்மொழித் திரைப்படம் என்று 1998-ம் ஆண்டு ஆஸ்கார் பரிசு பெற்ற அற்புதத் திரை ஓவியம் இது! படத்தின் இயக்குனர் - மைக் வான் டையம்.

அந்த நகரத்தின் முக்கிய நீதி மன்ற பெய்லீஃப் ட்ரவர்ஹாவன் கொலை செய்யப்பட்டது தொடர்பாக கடாட்ரியூஃபி கைது செய்யப்பட்டான்!

ஒரு இருண்ட அறையில் அவனை அமர வைத்து, மூன்று துப்பறியும் போலீஸார் விசாரணை நடத்திக் கொண்டிருந்தார்கள்....



இறந்து போன ட்ரவர்ஹாவன் - கைதாகி இருக்கும் கடாட்ரியூஃபிக்கு அப்பா முறைதான்! ஆனால் தன் வாழ்நாளின்போது அந்த நிர்தாட்சண்யமான அரசாங்க பெய்லீஃப் அதை பகிரங்கமாக ஒத்துக் கொண்டதே இல்லை!

''எனக்கும் என் தந்தை ட்ரவர் ஹாவனுக்கும் கடுமையான சண்டை நடந்தது என்னமோ உண்மை! கட்டிப் புரண்டு, உருண்டு எழுந்தோம்! ஒருவரை ஒருவர் உதைத்துக் கொண்டோம். ரத்த காயங்கள்கூட ஏற்பட்டன. ஆனால், என் அப்பாவை நான் கொலை செய்யவில்லை!''

- தலையைக் குனிந்துகொண்டு வருத்தத்துடன் சொன்னான் கடாட்ரியூஃபி. பிறகு, தன் பூர்வ கதையை சொல்லத் தொடங்கினான்....

நீதிமன்ற உத்தரவுதான் பெய்லீஃப் ட்ரவர்ஹாவனுக்கு வேத வாக்கு! சட்டத்தை நிறைவேற்றும் பணியில் இருப்போர் - ஈவு, இரக்கம் பார்க்க வேண்டியது இல்லை என்பது அவன் கட்சி. அவன் கொஞ்சமும் பச்சாதாபம் பார்ப்பதில்லை!

சில வழக்குகளில் சிலரைக் கட்டாயமாக வீட்டை விட்டுக் காலி செய்ய வேண்டி இருக்கும். அதற்காக எந்தவிதமான அராஜகச் செயலுக்கும் ட்ரவர்ஹாவன் தயங்க மாட்டான்!

...ஏழைகள், வாயிலும் வயிறிலும் அடித்துக் கொண்டு ''விலைமாதின் மகனே!'' - என்று ட்ரவர்ஹாவனை ஏசிக் கொண்டிருப்பார்கள்!.... ஆனால், சட்டபூர்வமாகக் கடமையைச் செய்துவிட்ட திருப்தியுடன் ட்ரவர்ஹாவன் அங்கிருந்து கம்பீரமாக நடந்து செல்வான்!...



தயவு தாட்சண்யம் பார்க்காத ராட்சசன் என்று மக்கள் மத்தியில் அவன் பெயர் எடுத்தான். தனது வருமானத்தை புத்திசாலித்தனமாக முதலீடு செய்து - செல்வத்திலும் செல்வாக்கிலும் உயர்ந்து கொண்டிருந்தான் ட்ரவர்ஹாவன்!

**ஜோ**பா, அவன் வீட்டில் வேலைக்காரியாக வந்து சேர்ந்தாள்.... ட்ரவர்ஹாவனுக்கு அவள் எல்லாப் பணிவிடைகளையும் சிரத்தையாகச் செய்யத் தொடங்கினாள்....

ஒருநாள் தனக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அறையில் ஜோபா தனியாக இருந்தாள்... கிராமபோன் இசை மதுரமாக ஒலித்துக் கொண்டிருந்தது!

டிரவர்ஹாவன் அந்த அறைக்குள் நுழைந்தான். வசீகரிக்கும் அவள் தேகம் அவனை ஈர்த்தது! கணப் பொழுதில் அவன் அவளை ஆட்கொண்டான்.

தான் கர்ப்பமுற்றிருப்பதைத் தெரிந்து கொண்டபோது, ஜோபா வேலையை விட்டு நின்றுவிட்டாள். பொது மருத்துவமனையில் அவள் பிரசவித்தாள். ட்ரவர்ஹாவனிடம் பிள்ளை வளர்ப்புக்காகவோ, தன் எதிர் காலத்திற்காகவோ அவள் எதையும் எதிர்பார்க்கவில்லை!

அவனிடம் கடிதத் தொடர்பு கூட வைத்துக் கொள்ள அவள் விரும்பவில்லை!

ஆனால் ட்ரவர்ஹாவனோ, விடாது அவளுக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தான். மணி ஆர்டர்களும் அனுப்பிக் கொண்டிருந்தான்... அவன் அனுப்ப அனுப்ப அந்தக் கடிதங்களையும் மணி ஆர்டர்களையும் ஜோபா திருப்பி அனுப்பிக்கொண்டே இருந்தாள்....

ட்ரவர்ஹாவனுக்கும் ஜோபாவுக்கும் இப்படி வேண்டா வெறுப்பாகப் பிறந்த பிள்ளைதான் - கடாட்ரியூஃபி!

**சி**ன்னப் பையனாக இருந்தபோது ஆரம்பப் பள்ளியில் கடாட்ரியூஃபிக்கு கசப்பான பல அனுபவங்கள் ஏற்பட்டன!

ஆசிரியர் கரும்பலகையில் எழுதிக் கொண்டிருப்பார். மாணவர்கள் மேஜை அருகில் அமர்ந்து, பார்த்து எழுதிக் கொண்டிருப்பார்கள். அப்போது ஒரு துண்டுக் காகிதத்தில் ஒரு பையன் ஏதோ எழுதி கடாட்ரியூஃபிக்கு அனுப்புவான். காகிதத் துண்டு பல கைகள் மாறி, இவன் கைக்கு வரும். பிரித்துப் பார்த்தால் ''விலைமாதின் மகன்'' என்று எழுதப்பட்டிருக்கும். கடாட்ரியூஃபிக்கு ஆத்திரம் பீறிடும்!

ஒருமுறை விளையாட்டு மைதானத்தில் ஒரு பையன், இவனை - ''விலைமாதின் மகனே!'' என்று அழைக்க கடாட்ரியூஃபி அவனைப் புரட்டி எடுத்துவிட்டான்.

மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்ட பையன் வீட்டில் போய் புகார் செய்தான். பலர் வீடு தேடிவந்து ஜோபா



வையும், கடாட்ரியூஃபியையும் கெட்ட வார்த்தைகளில் திட்டினார்கள்...

ஜோபா, வேறு இடத்திற்குக் குடிபெயர்ந்தாள். தன் பிறப்பைப் பற்றிப் பலர் இழிவாகப் பேசுவது, சின்னவயது முதலே கடாட்ரியூஃபி மனதில் ஒரு ஆறாத ரணத்தை உண்டாக்கியது. ஜோபாவைக் கேள்விகளால் துளைத்து எடுத்து, தன் தந்தை கோர்ட் பெய்லீஃப் ட்ரவர்ஹாவன்தான் என்பதை அவன் தெரிந்து கொண்டான். தந்தையின் இருப்பிடத்தை தேடிச் சென்று அறிமுகம் செய்து கொண்டான். ஆனால் ட்ரவர்ஹாவன் மகனை அலட்சியம் செய்தான்.

ஒருமுறை கடைத் தெருவில் சிறுவர்கள் பலர் ஒன்றுகூடி, சில உணவுப் பண்டங்களைத் திருடினார்கள். போலீஸ் துரத்திக் கொண்டு வந்தது! ஐந்து சிறுவர்களும் பிடிபட்டு விட்டார்கள். முகவரியைக் கேட்டபோது கடாட்ரியூஃபி தன் தந்தையின் பெயர் பெய்லீஃப் ட்ரவர்ஹாவன் என்று சொன்னான். போலீசார் அதிர்ந்தனர்!

ட்ரவர்ஹாவன் சிறைச்சாலைக்கு அழைக்கப்பட்டான். மெல்ல நடந்து வந்து கடாட்ரியூஃபியின் அருகில் நின்றான். கொஞ்ச நேரம் தன் மகனின் முகத்தை உற்றுப் பார்த்து விட்டு -

''இவனை எனக்குத் தெரியாது!'' - சொல்லிவிட்டுப் போய் விட்டான்!



கடாட்ரியூஃபிக்கு பெருத்த அவமானமாகப் போய்விட்டது! ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது! தந்தையின் பால் வன்மம் வளர்ந்தது!

கடாட்ரியூஃபி படிப்பில் படுசுட்டியாக இருந்தான். தாய்மொழியான டச்சு மொழியோடு, ஆங்கில அறிவையும் வளர்த்துக் கொண்டான். அவன் தாயார் தையல் இயந்திரம் ஒன்று வாங்கி வைத்துக் கொண்டு, துணி தைத்துக் கொடுத்து ஜீவனம் நடத்தினார்.

உயர்நிலைப் பள்ளியின் இறுதி ஆண்டை எட்டினான் கடாட்ரியூஃபி.

''இனிமேலும் என்னால் சம்பாதித்துப் போட்டுக் கொண்டிருக்க

முடியாது! உன் செலவுகளுக்கு நீயே பொருள் தேடிக்கொள்ள வேண்டும்!'' - மகனிடம் சொன்னாள் தாய்.

தாய் - மகன் உறவு ஆழமான அன்பால் பிணைக்கப்பட்டிருக்கவில்லை! ஜோபா மனம்விட்டு ஆத்மார்த்தமாக கடாட்ரியூஃபியுடன் பேசியதில்லை! இருந்தாலும் தாயின் கடமைகளில் இருந்து அவள் தவறிவிடவும் இல்லை!

உணவுக்கும் இருப்புக்கும் பணம் கொடுக்கும் விருந்தினராக ஒருவன் அந்தக் குடும்பத்தில் வந்து சேர்ந்தான். அந்தக் காம்ரேடை - தாய், மகன் இருவருக்குமே பிடித்துப் போயிற்று. தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்த அந்த கம்யூனிஸ்ட், அரசியல் பற்றிப் பல விஷயங்களை இளைஞன் கடாட்ரியூஃபிக்கு கற்றுத் தந்தான்.

சமூகம் அங்கீகரிக்காத தன் தாயின் ஆரம்ப வாழ்க்கை, தன் பிறப்பின் ரகசியம், ஆரம்பப் பள்ளியில் சக மாணவர்கள் செய்த கிண்டல், சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருக்கும் தன் தந்தையின் புறக்கணிப்பு, அவன் பார்த்த அன்பில்லாத உலகம் - இவை அவனுக்குள் ஒரு தீயை மூட்டி வளர்த்தன....

இந்த சமூகத்தின் முன் அந்தஸ்துடன் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். நன்றாகப் படித்துப் பெரிய ஆளாக வர வேண்டும். சம்பாதிக்க வேண்டும்... என்று கங்கணம் கட்டிக் கொண்டான் கடாட்ரியூஃபி.

பொதுநலக் கடன் சொஸைட்டியிடம் கடன் வாங்கி சிகரெட் விற்பனைக்கூடம் ஒன்று ஆரம்பித்தான். ஆனால் சரக்குக் கொடுத்தவன் செய்த சில ஏமாற்று வேலைகளால் வியாபாரம் படுத்துவிட்டது!

கடாட்ரியூஃபி கடையை இழுத்து மூடினான். பொதுநலக் கடன் சொஸைட்டி, கடனைவட்டியுடன் திருப்பித் தரச் சொல்லி நெருக்கியது! சொஸைட்டி தொடர்ந்த வழக்கு நீதிமன்றத்துக்கு வந்தது! இது ட்ரவர்ஹாவனின் கவனத்திற்கு வந்தும் மகனைக் கடன் தொல்லையில் இருந்து மீட்க தந்தை எந்த அக்கறையும் காட்டவில்லை! இது கடாட்ரியூஃபிக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்தது!

இந்தத் தருணத்திலாவது தன் தந்தை தனக்குப் பண உதவி செய்வார் என்று அவன் எதிர்பார்த்தான். ஆனால் அவன் தந்தையோ மகன் மேல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க ஆவனசெய்து கொண்டிருந்தார். தந்தையின் மீது கடாட்ரியூஃபிக்கு மேலும் வன்மம் வளர்ந்தது!

பிரபல வக்கீல் டிகேங்ளாரின் அலுவலகத்திற்கு கடாட்ரியூஃபி ஒருநாள் செல்ல வேண்டியிருந்தது! அங்கு அவனது ஆங்கிலப் புலமையையும் அறிவுக் கூர்மையையும் கண்டு டிகேங்ளார் ஆச்சரியம் அடைந்தார். அவனைத் தனது அலுவலக உதவியாளனாக அவர் வேலையில் சேர்த்துக் கொண்டார்.



பொதுநலக் கடன் சொஸைட்டி தொடர்ந்த வழக்கிலும் அவனுக்காக அந்த வக்கீல் ஆஜராகி, அவன் சார்பாக வாதாடினார். சொஸைட்டி கடாட்ரியூஃபியின் உடமைகளை ஜப்தி செய்யாமல் இருக்க உதவினார். சொஸைட்டி கடனை தவணை முறையில் அடைக்க கடாட்ரியூஃபி அனுமதி பெற்றான்.

டிகேங்ளாரின் அலுவலகத்தில் அவன் தட்டச்சு பயின்றான். சுருக்கெழுத்து எழுதவும் பழகிக் கொண்டான். உடன் பணியாற்றிய காரியதரிசியான மிஸ்ஜார்ஜா என்ற பெண், அவன் விஷயத்தில் அக்கறை காட்டத் தொடங்கினாள். கடாட்ரியூஃபியின் அயராத உழைப்பு அவளுக்கு அவன்பால் மதிப்பை ஏற்படுத்தி இருந்தது!

மேல்படிப்புக்காக அவன் கடன் வாங்க வேண்டியிருந்தது. தன் தந்தை ட்ரவர்ஹாவனுக்குச் சொந்தமான வங்கியிலேயே கடாட்ரியூஃபி கடன் வாங்கினான்.

டிகேங்ளாரைப் போலவே ஒரு பெரிய வக்கீலாகி விட வேண்டும் என்று அவன் நினைத்தான். அதற்காக இரவும் பகலும் விழுந்து விழுந்து படித்தான். சட்டக் கல்லூரிக்கான நுழைவுத் தேர்வில் அவன் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி அடைந்தான். அவனது அலுவலகத்தினர் அதற்காக ஒரு விருந்து கொடுத்து கடாட்ரியூஃபியைப் பாராட்டினார்கள். அலுவலக புதிய என்சைக்ளோபீடியா முழு வால்யூம்களும் அடங்கிய தொகுதி - அவனுக்குப் பரிசாக அளித்தார்கள். இந்த அலுவலகக் கொண்டாட்டங்களில் எல்லாம் மிஸ்ஜார்ஜ் முழு அக்கறை எடுத்துக்கொண்டு முன்நின்று நடத்திக் கொடுத்தாள். எப்படியாவது கடாட்ரியூஃபியின் கவனத்தைக் கவர்ந்து விடவேண்டும் என்று அவள் முயன்றாள்.

ஒருநாள் கடற்கரைக்கு அவனை அழைத்திருந்தாள். கடற்கரைக்குச் சென்றபோது கூட அவன் கையில் சட்டப் புத்தகத்தைச் சுமந்து கொண்டுதான் சென்றான். கடற்கரை மணலில் நடந்து கொண்டே கடலின் அழகை ரசிக்காமல் புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்.

கடாட்ரியூஃபியின் கவனத்தை ஈர்க்க மிஸ்ஜார்ஜ் பல வழிகளில் முயன்று தோற்றுப் போனாள். அவள் கடாட்ரியூஃபியை உண்மையாகக் காதலித்தாள். அவன் பாராமுகமாக இருக்கவே, அவளுக்கு சலிப்பு உண்டாயிற்று. வேலையை ராஜினாமா செய்துவிட்டு அந்த அலுவலகத்தை விட்டுப் போய் விட்டாள்.



படிப்பிலேயே கவனமாக இருந்த கடாட்ரியூஃபி இந்த இழப்பை உணரவில்லை!

சட்டக் கல்வியின் இறுதி ஆண்டுத்தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது! இரவு பகலாகக் கண் விழித்துப் படித்துக் கொண்டிருந்தான் அவன். ஒருநாள் பார்க்குக்கு தன் தாயார் ஜோபாவோடும், காம்ரேட் உடனும் அவன் சென்றான். அவர்கள் அங்கிருந்த பெஞ்சில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்....

தூரத்தில் மிஸ்.ஜார்ஜ் வருவது தெரிந்தது! ....அவள் முகத்தில் புதுப் பொலிவு! கடாட்ரியூஃபி அழைத்ததும், அவள் வந்து, மிகுந்த ஈடுபாட்டுடன் அவனோடு பேசத் தொடங்கினாள்..... அவளுக்குத் திருமணம் ஆகிவிட்டதாம்!

கடாட்ரியூஃபியுடன் அவள் பேசிவிட்டுச் சென்றபிறகு, அவன் தாயார் அந்தப் பெண்ணைப் பற்றி விசாரித்தாள். தன்னுடன் அலுவலகத்தில் ஒன்றாக வேலை பார்த்த பெண் என்று அவன் சொன்னான்.

''அங்கு வேலை பார்த்தபோது அந்தப்பெண் வேறு யாருக்காவது நிச்சயம் செய்யப்பட்டிருந்தாளா?''

- தாய் கேட்டாள்.

''இல்லை அம்மா!''

''அப்படி என்றால் ஒரு நல்ல பெண்ணை நீ இழந்து விட்டாய் மகனே!''


- ஜோபா பெருமூச்சு விட்டாள்! தாயும், மகனும் பல விஷயங்கள் குறித்துப் பேசிக் கொண்டார்கள்.

''அப்பா உன்னை ஏற்றுக் கொள்ள முன்வந்தபோது, நீ ஏன் அம்மா அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை?'' - மெதுவாகக் கேட்டான் கடாட்ரியூஃபி.

ஆனால் ஜோபா அதற்கு பதில் சொல்லாமல் பேச்சை மாற்றிவிட்டாள்...

மேல் படிப்புக்காக தன் வங்கியில் இருந்து பெற்றிருந்த கடன் தொகையைத் திருப்பித் தரச் சொல்லி ட்ரவர்ஹாவன் நெருக்கத் தொடங்கினான். கடாட்ரியூஃபியின் மனதில் குரோதம் வளர்ந்தது!

வக்கீல் டிகேங்ளார் வெளிநாடு செல்லத் திட்டமிட்டார். கடாட்ரியூஃபிக்கு அவரைப் பிரிவது கஷ்டமாக இருந்தது. ரயில் நிலையம் சென்று அவரை வழி அனுப்பி வைக்கும்போது, அவன் நெஞ்சில் துக்கம் நிறைந்திருந்தது.





அவன் சிரமப்பட்டுப் படித்து, சட்டக்கல்லூரி இறுதி ஆண்டுத் தேர்வில், முதல் வகுப்பில் வெற்றி பெற்றான்.

கோட்டுப் பாக்கெட்டில் அவன் ஒரு மடக்குக் கத்தியை எடுத்து வைத்துக் கொண்டான். தன் தந்தை அலுவலகத்திற்குச் சென்றான்.

கோட்டுப் பாக்கெட்டிலிருந்து கத்தியை எடுத்துப் பிரித்தான். அதை ஓசை எழ ட்ரவர்ஹாவனின் மேஜை மேல் குத்தி நட்டு வைத்தான்!

''என் பாதையில் தடைக் கற்களை நிரப்பிக் கொண்டே வந்தீர். இன்று நான் எதிர்நீச்சல் போட்டு ஒரு வக்கிலாக உயர்ந்து விட்டேன்!'' - கடாட்ரியூஃபி கர்ஜித்தான்.



''உனக்கு எதிராகக் காரியங்களைச் செய்த நான், உனக்காகவும் சில பணிகளைச் செய்திருக்கிறேன்.'' - ட்ரவர்ஹாவன் பொறுமையாகச் சொன்னார்.

தந்தையும், மகனும் கட்டிப் புரண்டு ஆக்ரோஷமாகச் சண்டை போட்டார்கள்... இருவருக்கும் ரத்தக்காயங்கள்...

ட்ரவர்ஹாவன் சோர்ந்து போய்க் கீழே விழுந்ததும், கடாட்ரியூஃபி அந்த இடத்தைவிட்டு அகன்றான்.

அன்றுவரை தன் வாழ்நாளில் நடந்ததை எல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லி முடித்திருந்தான் கடாட்ரியூஃபி.

''என்னை வாழ்க்கையில் முன்னேறவிடாமல் என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அதை எல்லாம் என் தந்தை செய்தார். அதனால் எனக்குள் ஒரு வெறி வளர்ந்திருந்தது. எப்படியாவது முன்னேறி விட வேண்டும் என்று பாடுபட்டேன். வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியும் அடைந்தேன். என் தந்தையின் முன் போய் நின்று வெற்றிக் களிப்புடன் எக்காளமிட வேண்டும் என்று நினைத்தேனே தவிர, அவரைக் கொலை செய்ய என்றுமே நான் திட்டமிடவில்லை!'' - சொல்லி முடித்தான் கடாட்ரியூஃபி.

அவனை விசாரித்துக் கொண்டிருந்த மூன்று போலீஸ் அதிகாரிகளும் அவன் கதையைக் கேட்டுப்

பெருமூச்சு விட்டார்கள்!

மகன் தன் வக்கீல் பட்டத்தைக் காட்டித் தன்னை அடித்துப் புரட்டிப் போட்டுவிட்டுச் சென்றபின் ட்ரவர்ஹாவன் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானான்.

....இன்று மகன் வந்து சண்டை போட்டுவிட்டுச் சென்றதும், அவனுக்கு வாழ்க்கையே அர்த்தமற்றதாகத் தெரிந்தது!

ட்ரவர்ஹாவன் உயில் எழுதினான்.

....மடக்குக் கத்தியைப் பிரித்து வயிற்றில் பாய்ச்சிக் கொண்டான்!...

ரத்தம் பீறிட்டது.

மகனையும் மனைவி ஜோபாவையும் நினைத்தபடியே சரிந்து விழுந்தான் ட்ரவர்ஹாவன்!

கடாட்ரியூஃபி அப்பாவைச் சந்தித்துவிட்டு வந்தபின் நெடுநேரம் கழித்தே அவர் உயிர் பிரிந்திருப்பது போஸ்ட்மார்ட்டம் முடிவுகள் மூலமாகத் தெரியவந்தது! ட்ரவர்ஹாவன் தற்கொலை செய்து கொண்டதும் நிரூபணமாயிற்று.



கடாட்ரியூஃபி விடுதலை செய்யப்பட்ட போது அவன் மனதில் ஒரு வெறுமை பரவியிருந்தது! இப்படியெல்லாம் நடந்திருக்க வேண்டுமா? - என்று அவன் தன்னைத் தானே நொந்து கொண்டான்!

விடுதலை அடைந்த அவனை, சிறைக் கோட்டத்தின் வாசலில் ட்ரவர்ஹாவனின் வக்கீல் சந்தித்தார்! தந்தை எழுதி வைத்துவிட்டுச் சென்ற உயில் மகனுக்குப் படித்துக் காட்டப்பட்டது!

பல லட்சம் மதிப்புள்ள சொத்து முழுவதையும் தன் மகன் கடாட்ரியூஃபிக்கு எழுதி வைத்துவிட்டுச் சென்ற கடைசிக் கடிதத்தில் ''இப்படிக்கு உன் தந்தை'' - என்று முடித்திருந்தான் ட்ரவர்ஹாவன்.

''இப்படிக்கு உன் தந்தை'' - என்ற வரிகளைப் படித்ததும் கடாட்ரியூஃபி ஸ்தம்பித்து நின்றுவிட்டான். தந்தையின் குணச்சித்திரம் ஒரு புரியாத புதிராக அவன் முன் தோன்றியது!

'உனக்காகச் சில காரியங்கள் செய்திருக்கிறேன்' என்று அவன் தந்தை கடைசிச் சந்திப்பில் சொன்னது அவன் காதில் மீண்டும் ஒலித்தது.


ஒவ்வொரு மனிதனுமே ஒரு புரியாத புதிர்! ஒவ்வொரு குணச்சித்திரமும் அவிழ்க்க முடியாத ஒரு மர்மமுடிச்சு என்று நினைத்தான் கடாட்ரியூஃபி.

தந்தையை எண்ணி அவன் கண்கள் கசிந்தன!



இந்த மாதம் எப்படி வந்தது தெரியுமா?

# மேய்யஸ்



'மே' - இம்மாதத்தில் தினமும் மூன்றுவேளை - காலை, நடுப்பகல், மாலையில் பால் கறப்பார்களாம் ஆங்கிலோ ஸாக்ஸோனியர்கள். இவ்வினத்தினர் வடமேற்கு ஐரோப்பிய நாடுகளில் பண்டைக் காலத்தில் வாழ்ந்தவர்கள். மூன்று வேளை பால் கறந்ததால் இந்த மே மாதத்தை ''த்ரைமில்ஸ்'' (Thrimilce) என்றனர்.

ஆங்கில ஆண்டின் ஐந்தாவது மாதமான ''மே'' என்பது லத்தீன் மொழிமூலம். வளர்ச்சி, பெருக்கத்துக்குரிய தேவதையான ''மேய்யா'' (Maia) வின் பெயரிலிருந்து வந்தது. ''மேய்யஸ்'' (Maius) என்பது அந்த தேவதைக்கு இன்னொரு பெயராம்.

ஜுலியன், கிரிகோரியன் காலண்டர்களில் இந்த மேமாதம் ஐந்தாவது மாதம். டச்சுக்காரர்கள் இதனை ''ப்ளோவ் மாண்ட்'' (Blou-Maand) என்றழைக்கின்றனர். ''ப்ளாஸமிங் மந்த்'' (Blossming Month) மலர்ந்து ஒளிரும் மாதம் என்பதாம். பிரெஞ்சுக் குடியாட்சிக் காலண்டர் படி ''ஃப்ளோரியல் மந்த்'' (Florial Month) என்கின்றனர். இவர்கள் காலக் கணக்கில் இந்த ஃப்ளோரியல் மாதம், ஏப்ரல் 20-ம் நாளிலிருந்து மே 20-ம் நாள் வரை கணக்கிட்டிருக்கிறார்கள்.

பிரபல ஆங்கில நூலாசிரியர் 'சாஸர்' (Chaucer) எழுதி உலகப்புகழ் பெற்றது - 'காண்டர்பர்ரீ டேல்ஸ்' இந்த நூலில் ஒரு அத்தியாயம் 'மர்ச்சன்ட்ஸ் டேல்' (Merchants Tale) இதில் கதாபாத்திரங்களுக்கு மாதங்களின் பெயர் வைத்து எழுதியிருக்கிறார். 'ஜனவரி' என்பவர் 60 வயது முதியவர். பணக்காரப் பிரபு. 'மே' பருவ வயதுப் பெண். முதியவர் அந்த இளம்பெண்ணை மணக்கிறார் என்பதே கதையின் போக்கு. இந்த நிகழ்ச்சியே பழமொழியாக நிலவி வருகிறது, ''இட் ஈஸ் எ கேஸ் ஆஃப் ஜானுவரி அண்ட் மே.'' (It's a case of January and May) என்று!

''போனா டியா'' (Bona Dea) என்பவள் ரோமர்களின் புராணத்தில் கற்புக் கடவுளாகப் போற்றப்படுபவள். இவளுடைய விழாவாக இந்த மேமாதம் முழுவதும் அனுசரிப்பார்கள். மேலும் ''லெமூரியாலியா'' (Lemurialia) எனப்படும் நீத்தார் நினைவுச் சடங்குகள் நிகழ்த்தப் பெறும் மாதம் மே. எனவே மே மாதத்தில் முக்காலே மூணுவிசம் திருமணங்களே நடைபெறாது. ''அன்லக்கி ஃபார் வெட்டிங்ஸ்'' (Unlucky for Weddings) என்ற நம்பிக்கையும் அதனால் நிலவி வருகிறது.

— விஜயகீதா.

ஒரிய மொழி மூலம்: தீபக் மிஸ்ரா



1938 இல் பிறந்தவர். அலஹாபாத் பல்கலைக்கழகத்தில் முதுகலை (வரலாறு) பயின்றவர். இவருடைய கவிதைத் தொகுப்புகள் பல வெளியாகி வாசகர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளன. இவர் பல்வேறு விருதுகளும் பரிசுகளும் பெற்றிருந்தாலும், 1981 இல் கவிதைக்காக ஒரிசா சாகித்ய அகாதமி பரிசு பெற்றது சிறப்புக்குரியது.

# இதுதான் இந்தியா!

இந்தியா ...



அவளது எல்லாக் கிராமங்களும்
எல்லாக் கிராமத்துத் துணி துவைக்கும் கற்களும்.
நெல் வயல்களும், குளங்களும்,
மலர்களின் சந்தையும்
கார்த்திகையில் முத்துக்களாய்ப் பரவியுள்ள
பனித்துளிக் கண்ணாடிகளும்
அல்லியின் உடம்பின் மேல்வரும் தும்பிகளும்
நெல்வயல் வரப்புகளும் ...

சாலையின் தனிமையான திருப்பத்தில்
யாரென்று தெரியாதவருக்காகக் காத்திருக்கும்
ஆலமரம்!


கட்டற்ற ஆகாயத்தின் நிழல்
அறியப்படாத நதியின் அறியப்பட்ட
நீரலையில் வந்திறங்கும்
அபூர்வப் பறவையின் நெருப்பற்ற சிறகுகளில்
மெதுவாக வந்து குவியும்...



அந்த நதியின் பெயர் இந்தியா.

அந்தப் பறவையின் பெயர் இந்தியா.

அந்த வானத்தின் பெயர்கூட இந்தியாதான்!



இங்கே பருவகாலங்கள் உடம்பை ஒத்திருக்கின்றன.
இங்கே உனதுருவத்தை ஒத்திருக்கின்றது தாமரை.
எல்லாப் பெண்கடவுள்களின் முகங்களும் ஒத்துள்ளன.
எல்லா நதிகளும் உனது வளைந்த இடைபோலுள்ளன.
எல்லாப் புனித ஸ்தலங்களும்
உனது உடலின் புனித ஸ்தலங்களைப் போல் உள்ளன.
எல்லா மலர்களும் உனது சிரிப்பை ஒத்துள்ளன.
இங்கே எல்லாமே உன்னைப் போல் ஒத்துள்ளன.

ஏனெனில் ...
ஒரு சதி யின் கால்கள்
ஒரு நீலகண்டரினால் இறைக்கப்பட்டுள்ளது.

வத்ரபாவின் வயல்களும்
நீலகண்டப் பறவையும்
சுடுகாட்டுக் கழுகுகளின் மகிழ்ச்சியான பாடல்களும்
பஞ்சமும் கலவரமும் புயல் வெள்ளமும்
பூமியதிர்ச்சியும்
பஞ்சமோ அல்லது ஏதாவதொரு சிறுதெய்வத்தின் கோபமும்
நெருப்பை சுத்தப்படுத்துவதாக நெருப்பை எரிக்கும் காற்றும்
கந்தர்பாவின் மலர் அம்பும்
சிவனின் மூன்றாம் கண்ணின் நெருப்பும்
இவை அனைத்தும்
இந்தியாவின் தொன்மமாய்த் தெரிகிறது எனக்கு!

தமிழாக்கம் : இந்திரன்

★ ஒரிசா சாஹித்ய அகடமி[illegible] நூலிலிருந்து...

✱ அமரர் தேவன் நினைவு பயணக் கட்டுரைப் போட்டியில்
பிரசுரத்திற்கெனத் தேர்வான கட்டுரை

**காசியும் ஹரித்வாரும்**

# இந்தியர் விரும்பும் தலங்கள்

**நா**ங்கள் நான்கு பேர் ஈரோடு சென்று, அங்கிருந்து மாலை 4.30-க்கு கொச்சின் - கோரக்பூர் எக்ஸ்பிரஸில் ஏறி அடுத்த இரண்டு தினங்களில் மதியம் 1.30-க்கு லக்னோ சென்றடைந்தோம்.

வடக்கே பயணம் செய்யும் போது, இந்தி தெரிந்தால், வசதியாக இருக்கும்! இல்லையெனில் நாம் ஒன்று கூற, அவர்கள் வேறொன்றாக நினைப்பார்கள். அல்லது சைகையில்தான் புரிய வைக்க வேண்டும். பொருள்களைக் காட்டித்தான் கேட்க வேண்டும்.

லக்னோவில் 2 நாட்கள் தங்கினோம். அங்கிருந்துமாப்பிள்ளை மற்றும் நண்பர்கள் இருவர் சேர்ந்து 7 பேர் கொண்ட கோஷ்டியாக ரயில் மூலம் ஹரித்துவாருக்குப் புறப்பட்டோம். தமிழகத்தில் உள்ளவர்களுக்கு கார்த்திகை மார்கழி தவிர மற்ற நாட்களில் குளிர் தெரியாது. அங்கோ பிப்ரவரியில் 'குளிர்' தெரியாது. ஆனாலும் ரயிலில் செல்லும்போது, கதவுகள் மூடியிருந்தாலும், இடுக்குகளிலிருந்து வரும் குளிர்க் காற்று நம்மைத் துளைத்து எடுத்தது.

ஸ்வெட்டரும் தலைக்கு குல்லாயும் அணிந்திருந்தும் கூட, தூங்கவே முடியவில்லை. ஒருவழியாக காலை 7 மணிக்கு ஹரித்துவார் ஸ்டேஷன் அடைந்தோம். அங்கிருந்து ரிக்ஷா மூலம் கர்நாடகா தர்ம சாலா விடுதியை அடைந்தோம். அங்கெல்லாம் ரிக்ஷா மிகவும் மலிவுதான். 1 1/2 கிலோமீட்டர் தூரம் செல்ல, ஆளுக்கு ரூ 5 தான். முன்பதிவு செய்திருந்ததால், அறைகள் தயாராக இருந்தன. சிறிது ஓய்வெடுத்தோம்.

தர்மசாலாவிலிருந்து ஒரு சின்ன சந்து திரும்பினால், கங்கை வந்துவிடுகிறது. காலை 8.00 மணி அளவில் குளிக்கச் சென்றோம். கங்கை, மலையிலிருந்து முதலில் ஹரித்துவாரத்தில்தான் இறங்குகிறாள். எனவே கங்கை நதி அங்கு அகலம் குறைவாக இருந்தாலும் வேகமும் குளிரும் மிக அதிகம்!

கங்கையில் கால் வைத்ததுதான் தாமதம்! குளிரில் கால்கள் விறைத்து விட்டன. எப்படியும் குளித்துத்தானே ஆக வேண்டும்! அவசர அவசரமாக இரண்டாம் படி, மூன்றாம்படியிலும் இறங்கினேன்... சங்கிலியைப் பிடித்துக் கொண்டுதான்! அங்கு ஒவ்வொரு படித்துறையிலும் சங்கிலிகள் இருக்கும். ஆழத்தில் போகக்கூடாது! பாதுகாப்பாக, சங்கிலியை பிடித்துக் கொண்டுதான் குளிக்க வேண்டும்!



◆ லக்ஷ்மண் ஜூலா தொங்கு பாலத்தில்...

உள்ளங்காலிலிருந்து கரண்ட் ஏறுவதுபோல், முழங்கால், தொடைவரை குளிர் ஏறி, காலே மரத்துப் போய்விட்டது போல் தோன்றியது. அவசரமாக மூன்று முங்கு, முங்கிவிட்டு கரையேறிவிட்டேன். பின்னர்தான் சூரிய நமஸ்காரம்! உடம்பை துவட்டிக் கொண்டே பார்த்தபோது, அவ்வூர் பெண்கள் இருவர் மிக நிதானமாக கங்கை நீரில் அமர்ந்து கொண்டு துணி துவைத்துக் கொண்டும் குளித்துக் கொண்டும் இருந்தார்கள்.

எனவேதான் வட மாநில பயணங்களை மார்ச், ஏப்ரல் மாதங்களில் வைத்துக் கொள்கிறார்கள். மே, ஜூன் மாதங்களில் அதிக வெய்யில்! எனவே பள்ளிக் குழந்தைகளுக்கு மே, ஜூன் மாதம் முழுவதும் விடுமுறை விடுகிறார்கள்!

பின் உடை மாற்றிக் கொண்டு கடைவீதியை சுற்றிப் பார்த்தோம். அங்கு பாசந்தியும், லஸ்ஸியும் சாப்பிட்டோம். மலிவாகவும் ருசியாகவும் இருந்தன. அங்கு மானஸதேவி கோயில் அலுவலகம் ஒன்று இருந்தது. மானஸதேவி கோயிலுக்கு டிராலி மூலம் சென்று தேவியை தரிசித்து விட்டு, டிராலி மூலம் திரும்பி, 6 கி.மீ வேன் மூலம் சென்று அங்கும் டிராலியில் மேலே சண்டிதேவி கோயிலுக்குச் சென்று, தேவியை தரிசித்து விட்டு, ''டிராலி மூலம் வந்து சேர ரூ.95. இது ஒரு பேக்கேஜ் டூர்! கூடவே ஒரு மினரல் வாட்டர் பாட்டிலும், அடையாளத்துக்கு, அவர்கள் பெயர் போட்ட அட்டையில் தொப்பி போன்ற ஒன்

**- மதுரை வி.எஸ்.ஆர். குப்புசாமி**


றையும் கொடுக்கிறார்கள். நாங்கள் அந்த பேக்கேஜ் டூரில் சென்றோம்.

அப்போது நல்ல குளிராக இருந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மழை எப்போது வேண்டுமானாலும் கொட்டும் போல் இருந்தது. பேக்கேஜ் டூரில் செல்பவர்கள் வரிசையில் செல்ல வேண்டியதில்லை. நாங்கள் நேராக டிராலியில் ஏறி, மலைகளின் மீது பயணத்தை தொடங்கினோம். ஒரு டிராலிக்கு 4 பேர்! வசதியாக பயணம் செய்ய முடிந்தது. பார்ப்பதற்கு வசதியாக பாதி கண்ணாடி! டிராலிகள் சிறிது தூரத்திற்கு ஒன்றாக சென்று கொண்டிருக்கின்றன. சிறிது தூரத்தில் மேலேயிருந்து கீழே போகும் டிராலிகள்! சுற்றிலும் மலைகள்! மேலே கறுத்த வானம்! கீழே பார்த்தால், அதள பாதாளம்! சுமார் 10 நிமிடம் ரம்மியமான பயணம்! இறங்கி கோயிலுக்குச் சென்றோம்!

மிக நிதானமாக ''மானஸதேவியை'' தரிசனம் செய்தோம். தென்கோடியில் இருக்கும் நாம், வடகோடியில், மலைகளுக்கு நடுவில் கோயில் கொண்டுள்ள அம்மனை தரிசிக்கும்போது, மெய்சிலிர்க்கிறது. பிற தெய்வங்களையும் தரிசித்து விட்டு, டிராலி மூலம் கீழே வந்து சேர்ந்தோம்! லேசாக மழை தூறத் தொடங்கி விட்டது.

அங்கிருந்து பேக்கேஜ் டூர் 'வேன்' மூலம் 6 கி.மீ. கடந்து சண்டிதேவியை தரிசிக்க வந்து சேர்ந்தோம்.

அங்கும் ''டிராலி'' மூலம் சண்டிதேவி கோயிலை அடைந்தோம். ''டிராலி'' பயணம் அதிக தூரமும் அதிக உயரமும் கூட! இவ்வளவு உயரத்தில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ''மா சண்டி தேவி''யை மனமார தரிசித்தோம்.



◆ பிம்கோடா சைட் டில்

மாதா வால்தேவி கோயிலின் முகப்பு



நல்ல பலத்த மழை தொடங்கிவிட்டது. எனவே 'டிராலி' ஓடவில்லை. அங்கு பணியாளர்கள் 'தீ' மூட்டி, குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள்! அவர்களுடன் நாங்களும் குளிர் காய்ந்தோம். சுமார் 1/2 மணிநேரம் கழித்து, டிராலி ஓடத் தொடங்கியது!

சுற்றிலும் பார்க்க பரவசமூட்டும் காட்சி! சில இடங்களில் உயர்ந்த மலை முகடுகளை பனி மூடிக் கொண்டிருக்கிறது. பெய்த மழையில், மலைகளில் இருந்து விழும் தண்ணீர், பெரிய நீர்வீழ்ச்சிகள் போல் விழுந்து கொண்டிருந்தது! கீழே பார்த்தால், இந்த தண்ணீர் எல்லாம் சேர்ந்து, பெரிய ஆறுகளாக செம்மண் கலரில் ஓடிக் கொண்டிருக்கின்றன! ரஸித்து முடிப்பதற்குள் கீழே வந்து சேர்ந்தோம். அங்கு ஆஞ்சநேயரின் தாயார் ''அஞ்சனை'' அன்னையை தரிசித்துவிட்டு, அறையில் ஓய்வு எடுத்துக் கொண்டோம்.

அன்று மாலையில் மீண்டும் கங்கை நதியில் ''பிரம்ம குண்ட''த்தை அடைந்தோம்! சரியாக 6 மணிக்கு ''ஹரிகிபைரி'' என்ற ஹரியின் பாதங்களுக்கு பூஜை செய்யும் நிகழ்ச்சி அங்கு நடைபெறுகிறது! அதனைக் காண கங்கைக் கரையில் ஏக கூட்டம்! கோயில்களிலிருந்தும் மடங்களிலிருந்தும், ''தீபம்'' காட்டியது, கண்கொள்ளாக் காட்சி! நாங்களும் இலைகளால் செய்த தொன்னையில் மலர்களின் மேல் தீபம் ஏற்றி, கங்கையில் விட்டோம்! இதை அங்கேயே விற்கின்றார்கள்!

மறுநாள் ஹரித்துவார் 'சைட்-சீயிங்'கும் ரிஷிகேஷும் பார்த்து வருவதற்காக, பஸ்ஸில் காலை 9.30-க்கு புறப்பட்டோம்.



◆ பிம்கோடா சைட் - கோயில் சிற்பம்

அநேகமாக டில்லிக்கு செல்பவர்கள் ஒருநாள் 'டூர்' மூலம் செல்வார்கள். ''ரிஷிகேஷ்'' பார்த்துவிட்டு ஹரித்துவாரில் கங்கையில் குளித்துவிட்டு மானஸ தேவியை மட்டும் தரிசனம் செய்ய முடியும்! அதுவும் பஸ்ஸில் வரும் ''கைடு'' அவசரப்படுத்துவார். ஆனால் அது ஒருநாளில் முடியும்! செலவு குறைவு!

முதலில் 'தக்ஷ மஹாதேவ்' கோயிலும் 'சதி குண்ட்'டும் பார்த்தோம். பின்னர் 'மா ஆனந்த மாயி ஆஸ்ரம்' பார்த்தோம். ''ஆனந்த மாயி'' அம்மையை இந்திரா காந்தி அடிக்கடி சந்திப்பாராம்! பின் அசல் ருத்ராக்ஷம் வளரும் 'ஹரிஹர் ஆஸ்ரம்' பார்த்தோம்.

அங்கிருந்து ரிஷிகேஷ் சென்றோம்! 'லக்ஷ்மண் ஜீலா' எனும் தொங்கு பாலம் மூலம் கங்கை நதியைக் கடந்து சென்றோம். அக்கரையிலுள்ள ஆதிபத்ரிநாத் கோயில், லக்ஷ்மண் கோயில், சுவர்காஸ்ரமம், கீதாபவன் போன்றவைகளைப் பார்த்தோம். ஓரிரண்டில் மட்டும்தான் உள்ளே சென்று பார்த்தோம். மற்றவற்றை மடமடவென்று பார்த்துவிட்டு வந்தோம். நேரம் குறைவு! ''ராம்ஜீலா'' தொங்கு பாலம் மூலம் கங்கை நதியைக் கடந்து வந்தோம்.

ரிஷிகேசத்திலிருந்து ஹரித்துவார் வரும் வழியில், ஹரித்துவாரில் ''பீம்கோடா சைட்'' என்னுமிடத்தில் ''பாரத் மாதாமந்திர்'', ''பூமா நிகேதன்'', ''மாதா வைஷ்ணவி மந்திர்'', ''பாவன் தாம்'' போன்ற கோயில்களைப் பார்த்தோம். அவற்றை கோயில்கள் என்று சொல்வதை விட, கலைக்கூடங்கள் என்றே கூறலாம்.

ஒவ்வொரு கோயில்களின் முகப்புகளிலும் எவ்வளவு பெரிய, அழகான சிலைகள்!

மாதா வைஷ்ணவி மந்திர், அசல் வைஷ்ணவி தேவி கோயிலைப் போலவே வடிவமைத்திருக்கின்றார்கள். ஓரிடத்தில் படுத்த மாதிரி தவழ்ந்துதான் செல்ல வேண்டியுள்ளது. ''பாவன்தாம்'' என்ற கோயிலில், முழுவதும் கீழே தவிர பக்கங்களில் முழுவதும் பிரதிபலிக்கும் கண்ணாடி பதித்துள்ளார்கள். உள்ளே புகைப்படம் எடுக்க அனுமதி இல்லை. நேரம் போதாமையால் 'பீம்கோடா சைட்'டிலும் ரஸித்துப் பார்க்க முடியாமல் போனது.

அன்றிரவு 7 மணிக்கு ரயிலில் புறப்பட்டு, மறுநாள் காலை லக்னோ வந்தடைந்தோம்!

மீண்டும் அன்று இரவு ரயில் மூலம் புறப்பட்டு, மறுநாள் காலை 7 மணிக்கு காசியை அடைந்தோம். அங்கு நாட்டுக்கோட்டை சத்திரத்தில் தங்கினோம்.

நாட்டுக்கோட்டை சத்திரம் மிகவும் பெரியது. செட்டியார்களால் நடத்தப்படுகிறது. நவீன வசதிகள் இல்லை என்றாலும், நமக்கு வேண்



◆ காசி-கங்காநதி படித்துரை. பின்னணியில் மணிகர்ணிகா காட்



டிய வசதிகள் உள்ளன. நாம் எப்போது சென்றாலும் 'அறைகள்' கிடைக்கும். அங்கு கவனித்துக் கொள்பவர்களும் தமிழர்கள்! வந்து தங்குபவர்களும் அநேகமாக தமிழர்கள். எனவே மொழிப் பிரச்னை இல்லாமல், நல்ல வழிகாட்டுதல்களும் கிடைக்கும். அங்கேயே தென்னிந்திய உணவும் கிடைக்கும். முன்னதாக சொல்லி 'டோக்கன்' வாங்கிக் கொள்ள வேண்டும். அதற்குத் தகுந்தபடி அவர்கள் சமைப்பார்கள். காலை இட்லி அல்லது ஊத்தப்பம், மதியம் நல்ல காய்கறிகளுடன் சாம்பார், ரசம், மோருடன் சாப்பாடு. இரவு டிபன். மூன்று வேளையும் வேண்டிய அளவுக்கு சாப்பிடலாம். அறை வாடகையும் சரி, உணவின் விலையும் சரி குறைவுதான்.

உள்ளேயே சிவன் கோவிலும் உண்டு. தினசரி இரவு காசி விஸ்வநாத சுவாமிக்கு அபிஷேக சாமான்களும் பூஜைப் பொருட்களும், நாட்டுக்கோட்டை சத்திரத்திலிருந்து நாதஸ்வரத்துடன் செல்கிறது. நாமும் கூடவே சென்று, அபிஷேகம், பூஜையில் கலந்து கொள்ளலாம்.

சத்திரத்தில் உடமைகளை வைத்துவிட்டு, இட்லி சாப்பிட்டுவிட்டு, கங்காஸ்நானத்திற்காகப் புறப்பட்டோம். முன்னரே சென்று வந்த அனுபவம் உள்ளதால், வழிகாட்டியை வைத்துக் கொள்ளவில்லை.

கங்கை படித்துறையில் சுமார் 30 படிகள் கீழே இறங்கி, கங்கை நீர்ப் பரப்பைத் தொட்டோம். கங்கையில் நீர்வரத்து அதிகம் ஆகும் போதும் வெள்ளமாக வரும் போதும், இந்த 30 படிக்கும் மேலே தண்ணீர் வந்து விடுமாம். நாம் ஒரு துடுப்புப் படகை அமர்த்திக் கொண்டு, அக்கரை போய் இறங்கி

னோம். அக்கரை என்பது, பாதி ஆற்றுக்கு மேல் மணல் மேடாகவே இருக்கிறது. அங்கு ஆழமும் இல்லை. சுத்தமாகவும் இருக்கிறது.



கங்கா மாதாவை வணங்கி விட்டு நன்கு குளித்தோம். இங்கு தண்ணீர் குளிர்ச்சியாக இல்லை! குளித்தபின் படகில் சென்று சில படித்துறை (காட்)களைப் பார்த்தோம். மிகவும் முக்கியமானது 'மணிகர்ணிகாகாட்.' அங்கு சடலங்கள் எரிவதையும் ஓரிரண்டு சடலங்கள் காத்திருப்பதையும் பார்த்தோம்.

அங்கிருந்து நேராக, காசி விசுவநாதர் கோயிலுக்குச் சென்றோம். சுவாமியை நன்கு தரிசனம் செய்தோம். அங்கு சுவாமியை (சிவலிங்கம்) தொட்டு வணங்கலாம். சுவாமி சுமார் 2 அடி பள்ளத்தில் இருக்கின்றார். அங்கிருப்பவர்கள் நன்கு குனிந்து, தலையாலும் வணங்குகின்றார்கள்.

மாதா 'அன்னபூரணி' யும், மாதா 'காசி விசாலாக்ஷி' யும் தனித்தனியாக சற்று தூரத்தில் கோவில் கொண்டுள்ளனர். அங்கும் தரிசனம் செய்தோம். காசி விசாலாக்ஷி அம்மனை, சங்கராச்சாரியார் பிரதிஷ்டை செய்திருப்பதாகக் கூறினார்கள். எனவே அம்மனின் உருவம் நம் தமிழ் நாட்டில் உள்ளது போல் உள்ளது. பூசாரிகளும் தமிழர்கள்தான்.

பின்னர் ஆட்டோ மூலம் காலபைரவர் கோயில், ஹனுமார் கோயில், பனாரஸ் சர்வகலாசாலை, சாரநாத் மற்றும் சில கோயில்களை தரிசனம் செய்து வந்தோம்.

இரவு ''நாட்டுக்கோட்டை'' சத்திரக்காரர்களுடன் சேர்ந்து, காசி விசுவநாதர் கோயிலுக்குச் சென்றோம். கருவறைக்கு நான்குபுறமும் வாசல் உண்டு. நான்கு பக்கத்திலிருந்தும் பார்க்கலாம். அனைத்து அபிஷேகங்களையும் தீபாராதனைகளையும் தரிசித்துவிட்டு, காசிவிசுவநாதரை 'தொட்டு' தரிசித்து வந்தோம்.

மதுரை வந்து சேர்ந்த பின்னரும், சிலநாட்கள் காசியும் ஹரித்துவாருமே கனவிலும் மனத்திரையிலும் ஓடிக் கொண்டேயிருந்தன. மறக்க இயலாத அந்தக் காட்சிகள் என்றென்றும் நினைவில் உழன்று கொண்டேயிருக்கும். காரணம், இந்திய மண்ணில் பிறந்தவர்களுக்கு அவை புனிதத் தலங்களல்லவா! ●



# இலக்கிய உலகில் ரத்னாவளி

ஹிந்தி மூலம் : டாக்டர் சிவதத்த சர்மா

தமிழில் : தியாகி டி.எஸ். ராஜுசர்மா

**த**னது மனைவியிடம் கட்டுக்கடங்காத காதல் கொண்ட துளசி, மனைவியின் ஏச்சுப்பேச்சால் அவளைத் துறந்து துறவறம் பூண்டதையும் பின்னால் ராம சரிதமானஸ் என்ற ராமகாதையை எழுதியதையும் நாம் அறிவோம்.

கணவனைத் துறந்த ரத்னாவளி பின்னாளில் ஹிந்தியில் கவிதைகளைப் படைத்துள்ளார். கணவனிடம் உறுதியான பக்திகொண்ட ரத்னாவளி 75 வயது வரை வாழ்ந்தார். பெண் குலத்துக்கே ஆதர்சமாக விளங்கிய அவரது வரலாற்றை 'ஸ்மாரிகா' என்ற ஆண்டு இதழ், சென்ற விஜயதசமி மலரில் வெளியிட்டு இலக்கிய உலகில் பரபரப்பை உண்டாக்கியுள்ளது.

**து**ளசிதாசரைப் பற்றி உலகம் அறியும். ஆனால் கணவனால் கைவிடப்பட்ட, பதிபக்தியில் சிறந்து விளங்கிய ரத்னாவளியைப் பற்றியும், அவரது துன்பக்கடலைப் பற்றியும், பின்னாளில் அவரது வாழ்க்கை எப்படி இருந்தது என்பது பற்றியும் இந்த உலகுக்குத் தெரியுமா?

ரத்னாவளி படித்தவர். நல்ல புலமையுடையவர். பத்ரிகாவில் வாழ்ந்தவர். தந்தை - தீன பந்து பாடக், தாயாரின் பெயர் தயாவதி. ரத்னாவளியுடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரர்கள் - சிவன், சங்கரன், சம்பு. ஆம்! அவர்கள் சிவ பக்த குடும்பத்தவர்கள்.

ரத்னாவளி நான்காவதாகப் பிறந்தவர். அவர் பிறந்தது கி.பி. 1520 என்றும் திருமணம் கி.பி. 1532 -ல் அவரது 12-வது வயதில் நடந்தது என்றும் பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவரது 16-வது வயதில் இல்லற வாழ்வு தொடங்கியதாம்.

துளசி - ரத்னாவளி தம்பதிகளுக்கு தாராபதி என்ற மகன் பிறந்த

தாகவும் சில மாதங்களே உயிருடனிருந்த குழந்தை தவறிவிட்டது என்றும் தெரிகிறது.

''தாராபதி என்ற சத்புத்திரன் சமர்தன், சதுரன் அடைந்தான் கால கதியை ..... ரத்னாவளி விதியை நொந்தது'' என்று ஈரடியுள்ள ஒரு கவிதை கூறுகிறது.

ஆவணி மாதம், ராமாயண பாராயணத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய துளசிதாசர், மனைவி ரத்னாவளி தாயார் வீட்டிற்குச் சென்றுள்ளதை அறிந்து வருத்தமடைந்து, அவளது பிறந்தகத்துக்கு விரைந்தார். ஆவணி மாதம், கங்கை வாலிபம் நிறைந்தவளாக இரண்டு கரையையும் தாண்டி பிரவகித்துக் கொண்டிருந்தாள். இரவு மழைவிடாது பெய்து கொண்டிருந்தது. துளசிதாசரால் மனைவியைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கங்கையை நீந்திக் கடந்தார். மாமனாரின் வீடு இருந்த பத்ரிகாவை அடைந்தார். நள்ளிரவு, விடாமழை, கங்கையின் வெள்ளத்தில் நீந்தி வந்ததால் மனைவி ரத்னாவளி சீற்றமடைந்தாள்.

''இல்லையா வெட்கம் உங்களுக்கு, வந்தீர்கள் உடனே இங்கு?

வெறுக்கிறோம் இந்தக் காதலை, கணவரே நான் கூறுகிறேன் உண்மையில்

உடல் என்பது எலும்பு தசை தோல் நிரம்பியது. இவ்வளவு காதலா இந்த உடலிடம்? ராமனிடம் இவ்வளவு பிரீதி இருந்தால் பவபீதி (உலக பயம்) இராது உண்மை.'' பீறிட்டது அவளது சீற்றம் சொல்லம்புகளாக!



மனைவியின் கூர்மையான சொல்லம்புகளால் வேதனையுற்ற துளசிதாசர் வீட்டை விட்டு வெளியேறியதை நாம் அறிவோம்.

திருமணம் நடந்த 15-வது வருடத்தில் ரத்னாவளியின் 27-வது வயதில் துளசிதாசர் கி.பி.1547-ல் (விக்ரம சகாப்தம் 1604) வீட்டைத் துறந்தார்.

''வயது பனிரெண்டில் கரம் பிடித்தாள்.

பதினாறில் கணவனை அடைந்தாள்....

''விக்ரம வருடம் 1651-ல் ரத்னாவளி தமது 74-வது வயதில் - உலக வாழ்வைத் துறந்தாள்.''

புறக்கணிக்கப்பட்ட ரத்னாவளி தமது மனவேதனையை ஈரடிச் செய்யுள் மூலம் வெளியிட்டுள்ளார். டாக்டர் ராம்தத்த பரத்வாஜ் என்பவர் அந்தப் பாடல்களை நான்கு பகுதிகளாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

முதல் பகுதி 201 ஈரடிகளைக் கொண்டது. அவை ஹிந்தியில் தோஹாக்கள் என்று கூறப்படுகின்றன. இதற்கு தோஹாரத்னாவளி என்று பெயர்.

கங்காதர் என்ற ஒரு அந்தணர் 201 தோஹாக்களின் தொகுப்பை 'தோஹா ரத்னாவளி' என்ற பெயரிலேயே 31.10.1772-ல் தொகுத்து வெளியிட்டார். 111 தோஹாக்களின் சிறு தொகுப்பு ஒன்றும் வெளியிடப்பட்டது. பண்டிட் ராமசந்திரா என்பவர் இதை கி.பி. 1817-ல் தொகுத்தார். நான்காம் பகுதியும் 111 தோஹாக்களின் சிறிய தொகுப்புதான். இதை ஈசுவரதாஸ் பண்டிட் என்பவர் 8.2.1819-ல் தொகுத்து வெளியிட்டார். இதில் துளசிதாசரின் மனைவி ஒவ்வொன்றிலும் ரத்னாவளி என்ற தனது பெயரைச் சேர்த்துள்ளார். 82 பாடல்களில் 'ரதன்' என்று கூறுகிறார். இவற்றின் மூலம் அவரது மன வேதனை உலகுக்குத் தெரிகிறது.

''விவாக தினம், வாத்யங்கள் முழங்கின. கணவர் அழைத்து வந்தார் கிருகத்துக்கு. வெளியேறிய அவர் பாதங்களைத் தொட்டு வணங்கவும் வாய்ப்பு தந்தாரில்லை.''

எவ்வளவு பெரிய துன்பத்தில் ஆழ்ந்துள்ளார் ரத்னாவளி! அப்படி இருந்தும் அவர் திரும்பி வந்தால் அவரிடம் ஒரு முறைகூட 'உலாஹனா' செய்ய மாட்டேன் என்கிறார். உலாஹனா என்றால் பிணக்கு என்று பொருள்.

''நாதா, நான் மௌனமாகவே இருப்பேன். நீங்கள் சந்தோஷமுடன் இருங்கள். நான் இனி பிணக்கு செய்ய மாட்டேன். என்றும் குற்றம் சாட்ட மாட்டேன்.''

இதில் அவரது வேதனை தெரிகிறது. கடைசியில் அவர் திரும்பாதபோது நிராசையுடன் நம்பிக்கையை இழந்து, தமது எல்லா சுக வாழ்வையும் தியாகம் செய்து விடுகிறார் அந்த உத்தமி.

உணவு, நல்ல ஆடைகள், இன்பம் தரும் அரண்மனை வாசம் நான் விரும்பேன். வாழ்க்கை சுமையாகி விட்டது எனக்கு. ஒவ்வொரு நிமிடமும் துன்பமயமே.'' - என்று சலித்துக் கொள்கிறார் அவர்.

அவர் உணர்ந்து கூறும் ஒரு செய்யுளில் தீங்கைச் செய்யும் நான்கைப் பற்றிக் கூறுகிறார்.

பெண் நடத்தை கெட்டவளாய் இருத்தல், நண்பன் கபடமுள்ளவனாக இருத்தல், ஊழியன் எதிர்த்துப் பேசுதல், பாம்புகள் வீட்டில் வாழ்தல் இவை துன்பங்கள் தருபவை. இவற்றால் 'எப்போதும் துன்பம், விபத்து உண்டாகும் என்று யார் அறிவார்!' என்கிறார் அவர்.

ஆதார நூல் : ''கோஸ்வாமி துளசிதாசரின் தர்மபத்னி ரத்னாவளி'', கங்கா புத்தக நிலையம், லக்னோ.

* அக்கரைச் செய்திகள்

# 'சென்டிமெண்ட்' சாதனையாளர்

தமிழ் சூப்பர் ஸ்டாரின் 'முத்து' திரைப்படம் ஜப்பானில் சக்கைபோடு போட்டது. அதன்மூலம் அங்கே ரஜினி பாப்புலரானது உங்களுக்குத் தெரியும். 'பாப்புலரான' ஒரு ஜப்பான் நாட்டு நடிகரைப் பற்றி நாம் தெரிந்து கொள்வோமே!

இவருடைய பெயர் ஸீஸோ ஃபுகுமோட்டோ. நாற்பத்தைந்தாண்டு காலமாகத் திரையுலகில் நீடித்த இறவாப் புகழுடன் ''இறந்து இறந்து'' வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஆமாம், இவர் செத்தால்தான் (நடிப்பில்தான்) வாழ்வு. (நிஜத்தில்) காசு சம்பாதிப்பதற்காக இவர் சினிமாவில் 20,000 தடவைக்கு மேல் உதைவாங்கி, கத்தியால் குத்தப்பட்டு, துப்பாக்கியால் சுடப்பட்டுச் செத்துப் போயிருக்கிறார்.

ஒரு கதாபாத்திரம் சாகடிக்கப்பட வேண்டியதாக கதை அமைக்கப்பட்டிருந்தால் ஃபுகுமோட்டோவுக்கு தயாரிப்பாளரிடமிருந்து அழைப்பு வரும். போய் செத்துப் போய்விட்டு (நடிப்பில்தான்) பணத்துடன் திரும்பி வருவார். இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரே படத்தில் பல கதாபாத்திரங்களுக்காக 'பிணமாக' நடித்துவிட்டு உயிருடன் வீடு திரும்பியிருக்கிறார்.

ஃபுகுமோட்டோ 'செத்துப் போனால்' படம் சூப்பர் ஹிட்டாகும் என்பது படமுதலாளிகளுக்கு ஒரு சென்டிமென்ட். இப்படியொரு காட்சியை வலுக்கட்டாயமாக டைரக்டரும் புகுத்தி விடுவார். அமெரிக்க 'ஹாலிவுட்', நம்மூர் 'கோலிவுட்' மாதிரி ஜப்பானின் திரையுலகப் பேட்டை 'கியோட்டா' நகரம். பதினைந்து வயதில் கிராமத்திலிருந்து பிழைப்பு தேடி இந்நகருக்கு வந்த ஃபுகுமோட்டோவிற்கு துணைநடிகராக நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆக்ஷன் ஹீரோவாகும் ஆசையில் அதற்குத் தேவையான சண்டைப் பயிற்சிகளைக் கற்றுக் கொண்டார்.

1960-களில் ஜப்பான் திரையுலகம் 'சாமுராய்' பாணிப் படங்களையும், 'கொள்ளைத் தலைவன்' பாணிப் படங்களையும் எடுத்து வந்தது. சாமுராய் - வரலாற்றுக் கதைக்களன் கொண்டது. கொள்ளைத்தலைவன், அடிதடி, கலாட்டா, அத்துடன் ராபின்ஹுட் வகைக் கதைகளை அடித்தளமாகக் கொண்டது.




இரண்டிலுமே வன்முறை, ரத்தக்களறி, கொலை ஏராளம். இத்தகைய படங்களில் உதைவாங்கி, கத்திக்குத்து பட்டு, துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி உயிர்விடும் காட்சிகளுக்குப் பஞ்சமேயிருக்காது. இந்த மாதிரி கதாபாத்திரத்தில் நடிப்பதை (ஒரு சில காட்சிகளில்தான்) தொழிலாகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் துணை நடிகர்கள், ஜப்பான் திரையுலகில் மிக அதிகம். அந்தக் கூட்டத்தில் ஃபுகுமோட்டோ ஒரு சூப்பர் ஸ்டார். இவருக்கு ஏன் 'கிராக்கி' அதிகம் என்றால், இவருடைய அகண்ட கன்ன எலும்பும், பயங்கரத் தோற்றத்துடன் கூடிய புருவ வளைவும் தான்! அறுபத்தி இரண்டு வயது நிரம்பிய இவருக்கு, இது கடவுள் கொடுத்த வரம். இவருக்கு ஜப்பான் முழுவதும் ரசிகர்கள் அதிகம்.

இவர், '2001-ஆம் ஆண்டு', என்ற தலைப்பில் ஒரு சுயசரிதம் எழுதி வெளியிட்டார். ஒரே 'மூச்சில்' 80,000 பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத்த புத்தகம் அது. எத்துணை முறை சினிமாவில் தான் செத்துப்போய் இருப்பதாகக் கணக்கு வைத்துக் கொள்ளவில்லையென்றும், இருந்தாலும் குறைந்தபட்சம் 20,000 முறையாவது இருக்கும் என்றும் எழுதியிருந்தார். இதனைப் படித்த ஒரு ரசிகர் துல்லியமாக எத்துணைமுறை 'செத்திருக்கிறார்' எனப் படப்பெயருடன் பட்டியலிட்டு, இவருக்குக் கடிதம் எழுதி புள்ளி விவரத்தை அள்ளி வீசினாராம். அவரைப் பேட்டி எடுத்த ஒரு நிருபரிடம் ஃபுகுமோட்டோ சொன்னாராம்...

''எனக்கு சாவை நினைத்தாலே மிகவும் பயமாயிருக்கு!''

# சஊஜா & ராஜா



இன்னொரு சூப்பர் ஸ்டார் பற்றி சில தகவல்கள்... இவர் ஹாலிவுட் நபர். இந்தியாவில் ஆங்கிலப்படங்கள் பார்ப்பவர்களுக்கு நன்கு அறிமுகமானவர். இவர் நடித்த படத்தைப் பார்த்திருக்கா



விட்டாலும், படத்தின் பெயர் மிகவும் பிரபலம். 'லாரன்ஸ் ஆப் அரேபியா', 'டாக்டர் ஷிவாகோ' - இந்த இரண்டு சினிமாக்களைப் பற்றித் தெரியாதவர்கள் மிகக் குறைவு. இவர் பெயர் உமர் ஷெரீப். எகிப்தில் பிறந்த இவர் ஹாலிவுட்டில் கலக்கிவிட்டு, தற்போது தனது 72-வது வயதில் ஃபிரான்ஸ் பாரீஸ் நகரில் ஒரு நட்சத்திர ஓட்டலில் 'தனிமைவாசம்' புரிந்து கொண்டிருக்கிறார்.

இளமையில் எடுப்பான, அழகான, கவர்ச்சியான தோற்றம்தான், உமர் ஷெரீப்பின் ஆஸ்தி. இவருடைய அழகில் மயங்கிய, எகிப்திய பிரபல நடிகை 'ஃபடன் ஹமாமா' வலைவீசிப் பிடித்து இவரை கணவனாக்கிக் கொண்டார். புகழ்பெற்ற பிரபல கனவுக் கன்னியின் கவனத்தைக் கவர்ந்தவர் என்ற ஒரே காரணம், இவர் பெயர் புகழின் உச்சியைத் தொட்டு, கூரையைப் பொத்துக்கொண்டு அதிர்ஷ்டத்தைக் கொட்டோ கொட்டு என்று கொட்டிற்று.

சினிமா உலகில் நடிகையின் கணவனாக வலம் வந்த உமர் ஷெரீப் 'லாரன்ஸ் ஆஃப் அரேபியா'வின் - கதாநாயகனாக ஒப்பந்தம் செய்யப்பட்டார். இரண்டாண்டுக் காலப் படப்பிடிப்பு. மொத்த சம்பளமே, வெறும் எட்டாயிரம் டாலர்தான். ஆனால், இந்தப் படம் உமர்ஷெரீப்பை எங்கேயோ கொண்டுபோய் விட்டுவிட்டது. தொடர்ந்து பல படங்கள்.... செங்கிஸ்கான், ஜார் நிக்கோலஸ் II, சேகுவாரா என வரலாற்று நாயகர்களை திரையில் சித்தரித்த கதாநாயகன் இவர்.



தற்சமயம், 72-வது வயதில் 'ஹிடால்கோ' என்ற படத்தை நடித்து இயக்கி, தயாரித்துக் கொண்டிருக்கிறார். ஒரு கௌபாயின் குதிரையும் அதனுடன் அவனுக்குள்ள நட்பும் தான் கதை. இந்தப் படத்தின் ஹைலைட், 3000 மைல் குதிரைப் பந்தயம் - பாலைவனத்தில்! உலகின் மிகச் சிறந்த குதிரைகளை (அரேபிய) வளர்க்கும் கதாபாத்திரம் 'ரியாத் ஷேக்'காக நடிக்கிறார் உமர்.

திரையுலகில் சம்பாதித்ததை எல்லாம் உல்லாச வாழ்க்கையிலேயே கரைத்து விட்டார். இவருக்கு ஐந்து மொழிகள் தெரியும். ஆனால் தாய் மொழியான 'அரபிக்' தெரியாது. இவருக்கு ஒரே மகன். வயது 47. இப்படித்தான் இவர் எல்லோரிடமும் சொல்லி வந்தார். திடீரென்று ஒருநாள், பத்திரிகையில் பணியாற்றும் பெண்மணி ஒருவர், ஒரு போட்டோவை அனுப்பி, இவரும் உங்கள் 'மகன்' தான் என தெரிவித்தார். படத்தைப் பார்த்த உமர், 'அச்சு அசலாக' அப்படியே தன்னை உரித்து வைத்திருக்கிறதே என படத்தில் படர விட்ட பார்வையை மீட்க முடியாமல் தவித்தார். அந்தப் பெண்மணியுடன் தொடர்பு கொண்டபோது, பலவருடங்களுக்கு முன்பு சினிமா பேட்டி எடுக்க வந்த நிகழ்ச்சியை, இடம், நாள், நேரத்துடன் குறிப்பிட்டு, அன்றைய தினம் அவருடைய எடுப்பான தோற்றத்திற்கு முன் தன்னிலை இழந்து பெற்ற பரிசுதான் இந்த ஜெராக்ஸ் பிரதி என்று கூறினாள். இந்தப் பிள்ளைக்கும் இப்பொழுது 34 வயதாகிறது.

ஹாலிவுட் சினிமா உலகில் உமர் ஷெரீப் குறித்து இன்றளவும் ஒரு ஜோக் பரிமாறிக் கொள்ளப் படுகிறது.

உமர் ஷெரீப்பை பேட்டி எடுக்க, எந்தப் பத்திரிகையும் தயவு செய்து பெண் நிருபர்களை அனுப்பாதீர்கள்! ''அப்பப்பா உமர்'' என அவரை ஆச்சர்யத்துடன் அனைவரும் அழைக்க நேரிடும். அப்புறம் அவர் ஐயோ பாவம் உமராகி விடுவார்!

**ஜனகன்**

(கார்டியன் நியூஸ் பேப்பர்ஸ், டெக்கான் ஹெரால்ட், தி ஹிந்து (பெங்களூர்) பத்திரிகைகளிலிருந்து தொகுத்தது.)

### நாய்க்கு மறுப்புண்டா?

ஒரு பெண்மணி தான் வளர்க்கும் நாய்க்குட்டிக்குப் பெர்னாட்ஷா என்று பெயர் வைப்பதற்கு ஏதாவது மறுப்புண்டா என்று கேட்டு அவருக்கு கடிதம் எழுதினார்.

அதற்கு ஷா அவர்கள், ''மேன்மை தாங்கிய பெண்மணி அவர்கட்கு, என்னுடைய பெயரை நாய்க்கு வைப்பதற்கு எனக்கு மட்டற்ற மகிழ்ச்சிதான். ஆனால் இதற்கு ஏதேனும் மறுப்பு உண்டா என்று உங்கள் நாயிடம் கேட்டு எழுதுங்கள்'' என்று குறிப்பிட்டு எழுதியிருந்தார்.

– நெ.இராமன்

சென்ற நூற்றாண்டின் உதாரண புருஷர்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

# அன்னதான சிவன்

நூலகம்

**சி**வன் - இவருடைய உண்மையான பெயர் ராமசாமி. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தேப்பெருமாநல்லூர் கிராமத்தில் ஒரு எளிமையான அந்தணர் குலத்தில் 1852-ல் பிறந்தவர். பள்ளிப்படிப்பில் இவருக்கு கவனம் செல்லவில்லை. ஆனால் அவ்வயதிலேயே வெளியூரிலிருந்து புனித யாத்திரை மேற்கொண்டு கோயில்களுக்கு வரும் பக்தர்களின் தாகத்தைத் தணிக்க தண்ணீர்ப் பந்தல்கள் பல உருவாக்கினார்.


வேதங்கள் கற்று ஓரளவு புலமை பெற்றாலும், பரம்பரையான வைதீகத் தொழிலில் அவர் ஈடுபடவில்லை. இதனால் ஒன்றுக்கும் உதவாதவரென்று அவருடைய பெற்றோர் அவரைக் கைவிட்டுவிடவே, தான் விரும்பியவாறு செயலாற்றுவது அவருக்கு சுலபமாயிற்று. கிராமத்திலுள்ளோருக்கு சிறுவேலைகளைச் செய்து உதவினார். அதனால், தன் பெற்றோரைத் தவிர மற்றவர்களிடம் நற்பெயர் பெற்றார்.

ஊருக்கு உழைத்த இவருக்கு, தனக்கு ஒரு நிரந்தரவேலை தேவை என்று உணர்ந்தபோது, அருகில் திருவிடைமருதூரிலிருந்த செட்டிச் சத்திரத்தில் சமையற்கார வேலை கிடைத்தது. சம்பளம் மாதம் ரூ.3. இலவச சாப்பாட்டுடன்! தன் அயராத உழைப்பினால், கணக்கற்றவர்களுக்கு உணவளிக்கும் வித்தையைக் கற்றுக்கொண்ட சிவன், அச்சத்திரத்திற்கே தலைமைச் சமையற்காரர் மற்றும் பொறுப்பாளரானார்.

அன்றாடக் கடமைகள் முடிந்தபின், தம் பங்கு சாதத்தில் அது மென்மையாயிருக்க தண்ணீர் விட்டு எடுத்துக்கொண்டு தக்ஷிணாமூர்த்தி ஸ்வாமி சன்னதியில் அதை நிவேதனமாக அளித்த பின்னரே அதை உண்ணும் வழக்கத்தைக் கட்டாயமாக மேற்கொண்டார். இதனால் இவருக்குப் ''பழையசாத சிவன்'' என்று கேலிப் பெயரும் உருவாகி நிலைத்து விட்டது.

ஒரு 'நிரந்தர வேலை'யில் அமர்ந்துவிட்ட தம் பிள்ளைக்கு அவரது பெற்றோர் திருமணம் செய்துவைக்க விரும்பினர். சம்சாரச் சிக்கலில் மாட்டிக் கொள்ள விரும்பாத சிவன், பெற்றோரின் விடாத வற்புறுத்தலால் சிவகாமு





என்ற பெண்ணை மணந்தார். இவர் சிவனுடைய சுயநலமற்ற சேவைக்கு உறுதுணையாக அமைந்தது ஒரு அதிர்ஷ்டமே.

செட்டிச் சத்திரத்தில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு உணவு படைத்த அநுபவம், தானே தன் சொந்த முயற்சியில் ஏன் அவ்வாறு செய்யக்கூடாது என்ற சிந்தனையை சிவனிடம் உருவாக்கியது. சொந்த கிராமமான தேப்பெருமாநல்லூரிலுள்ள வரதராஜஸ்வாமி கோயிலின் சித்திரை மாத வஸந்த உற்சவத்தின்போது இதை செயலாற்றிப் பார்க்க சிவன் முடிவு செய்தார்.

அப்போது நடைபெறும் நரசிம்ம ஜெயந்தி உற்சவத்திற்கு சுற்றுப்புற கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவதுண்டு. பிரஹலாத சரித்திரம் போன்ற சம்பிரதாய நாடகங்களும் நடைபெறும். விடிய விடிய நடக்கும் இந் நாடகங்களைக் காணும் பக்தர்களுக்கு உணவளிக்க அவர் தீர்மானித்தார்.

இத்திட்டம் வெற்றிபெற எவ்வாறு வெளி உதவிகளைப் பெறுவது என்று அப்போது அவருக்குத் தெரியாததால், செலவைச் சரிகட்ட தன்னிடமிருந்த சொத்துக்களை விற்க வேண்டியதாயிற்று. தனக்குச் சொந்தமானது என்று எவற்றை நினைத்தாரோ, அவற்றைத் துறந்த தன் மூலம் பெருமளவு பக்தர்களின் பசியைப் போக்க எவை தேவை என்பதையும் அறிந்து கொண்டார்.

வசதியானவர்களிடம் பணம் கேட்காமல் மற்ற பொருட்களைக் கேட்டுப் பெற்றார். இதனால் அவர் தனக்காகப் பணம் கேட்கவில்லை, பசித்தோருக்கு அன்னமளிக்கவே பொருட்கள் கோருகிறார் என்பதை அறிந்த செல்வந்தர்கள் அவர்மீது நம்பிக்கை கொண்டு உதவ முன்வந்தனர்.

இவ்வாறு அவரது அயராத உழைப்பு நாற்பது வருடங்களுக்கு நீண்டது. பின்னர் தமது அறுபத்து நான்காவது வயதில் சில நண்பர்களுடன் காசிக்குச் சென்றார். அங்கு மகாராஜாக்கள் மற்றும் ஜமீன்தார்

கள் உருவாக்கிய பெரிய சத்திரத்தில் பல ஆயிரக்கணக்கான பக்தர்களுக்குப் பெரிய அளவில் உணவு அளிக்கப்படுவதைக் கண்டார். கும்பகோணத்தில் மகாமகத்தின்போது திரளும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஏன் இதுபோல் உதவக்கூடாதென்ற நற்சிந்தனையும் அப்போது அவருக்குள் எழுந்தது.

இது நிறைவேற பல பெரிய தனவந்தர்களின் ஆதரவு தேவை என்பதை உணர்ந்தார். அவருக்குச் சோதிடத்தில் இருந்த பேராற்றலும், துல்லியமாக வரும்பொருள் உரைக்கக்கூடிய நுண்ணறிவும் தக்க சமயத்தில் உறுதுணையாயிருந்தன. தன்னிடம் சோதிடம் கேட்கவந்த செல்வந்தர்கள் ஒவ்வொருவரிடமும் அரிசி, பருப்பு, விறகு, காய்கறிகள் போன்றவற்றைக் கேட்டுப் பெற்றார். அனைவ்ரும் தயங்காது ஒத்துழைத்தனர். அன்னதானம் நடக்கவுள்ள இடத்திற்கு அவர் ஒருநாள் முன்னதாகவே சென்றுவிட, அவருடைய சமையற்காரர்களும் சாமான்களும் தவறாமல் தக்க சமயத்திற்கு வந்து சேர்வது வழக்கம்.

சிவன் சிக்கனசீலராகவும் திகழ்ந்தார். எந்த ஒருவரும் உணவின்றிப் போக நேர்ந்ததில்லை என்பது ஒருபுறமிருக்க, சமாராதனைக்குப்பின் உணவுப் பொருட்கள் மீந்து வீணானதும் இல்லை. அவ்வளவு பெரிய கூட்டத்திற்கு சமையல் செய்துபோட அவரிடம் கைவசம் விலையுயர்ந்த பாத்திரங்கள் கிடையாது. அவற்றை உபயோகிப்பது இல்லை. அரிசி மற்ற காய்கறிகளை வேகவைக்க மட்டுமே அவர் பாத்திரங்களை உபயோகிப்பது வழக்கம். உணவு வகைகளைப் பரிமாற தகரக் குவளைகள், தூக்குகள், மூங்கில் கூடைகள் மற்றும் மர அகப்பைகளையே உபயோகித்தார்.

உணவுப் பந்திகள் முடிந்தபின் ஏதாவது பாத்திரங்கள் மளிகைச் சாமான்கள் மீதமிருந்தால், உடனடியாக அவற்றை ஏலம் விட்டு, சமையற்காரர்களுக்கு சம்பளம் கொடுத்தபின், அடுத்த அன்னதானத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்வதே அவர் வழக்கம். எப்போதாவது பணம் மீந்தால் பின்னர் வேறிடத்தில் அன்னதானம் செய்ய தேவைப்படும் போது அதைப்பெற ஏதுவாக அதை அவ்வூர் பெரிய மனிதர் ஒருவரிடம் ஒப்படைத்து விடுவது அவரது வழக்கமாயிற்று.

பசியுற்றோருக்கு உணவளிப்பதை எவ்வளவு புனிதமான ஒரு கடமையாக அவர் கருதினார் என்பதற்கு, பந்திகள் முடிந்தபின் மீந்துள்ள இலைகளின்மேல் புரண்டு நீராடியபின், அருகிலுள்ள ஏதாவது ஒரு வீட்டில் சிறிது மோரும் சாதமும் கேட்டுவாங்கி உண்பது அவர் விரும்பிச் செய்யும் பணி என்பதிலிருந்தே அறியலாம். தவிர, தான் ஏற்பாடு செய்யும் அன்னதானத்திலிருந்து ஒரு பருக்கை உணவைக்கூட அவர் உண்டதில்லை என்பதும் வியப்பளிக்கும் ஒரு செய்தி!

சிவனின் நேர்மையில் அனைத்துத் தரப்பினரும் அசாத்திய நம்பிக்கை வைத்திருந்தனர். சிவனுக்கு அனுப்பப்படும் பார்சல்களுக்கு ரயில்வே இலாகா முன்னுரிமை அளித்தது. உணவுப்பொருள் கட்டுப்பாடுகள் நிலவிய அக்காலத்தில் போலீஸ் இலாகாவும் அவரிடம் பரிவு காட்டியது.

சிவனின் நற்பணிகள் வருடமுழுவதும் தொடர்ந்தன. இவை தவிர விசேஷ தினங்களும் உண்டு. ஆலய குடமுழுக்கு விழாக்களும் இவற்றில் அடங்கும். சுவாமிமலை, திருவிடைமருதூர், திருப்புவனம், மலைக்கோட்டை போன்ற தலங்களில் நடைபெற்ற குடமுழுக்குகள் தவிர இவருடைய மிகப்பெரிய அறப்பணியாக விளங்கியது - திருவானைக்காவலில் நடைபெற்ற தாடங்க பிரதிஷ்டையின்போது எனலாம். இவ்விழாவில் ஒரேநாளில் உணவருந்தியவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியது என்பது வரலாறு. கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகத் திருவிழாவின்போது வழக்கமாக இவர் நடத்தும் அன்னதானமும் பிரம்மாண்டமானதே!

கடமைக்கே முதலிடம் கொடுத்த இவர் காவேரிப்பட்டினத்தில் செயலாற்றிக் கொண்டிருந்தபோது, இவரது மனைவி மிக மோசமான உடல் நிலையிலிருப்பதாகத் தகவல் வந்தது. இருப்பினும் தானே ஏற்படுத்திக் கொண்ட தன் கடமைகளை நிறைவேற்றும்வரை அதைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால், அவரால் செல்ல முடிந்தபோது, அவர் மனைவி இவ்வுலகத்திலில்லை.

*1933*-ல் நடைபெற்ற மகாமகத்திற்குப்பின் சிவனின் உடல்நிலை பாதிக்கப்பட்டது. அவர் மன உறுதியைப்போல் உடல்நலம் சீராக இல்லை. தளர்ந்த உடலோடு அவரால் முன்புபோல் ஓடியாடிப் பணிபுரிய முடியவில்லை. இதற்கிடையே அவருடைய நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு சிலர் அவர் பெயரால் நிதிதிரட்டி, சொந்த லாபம் காண முயன்றனர். எனவே, அன்னதானப் பணியிலிருந்து தான் ஓய்வு பெற்றுவிட்டதாக சிவனே அறிவிக்க வேண்டியதாயிற்று.

அரை நூற்றாண்டுகாலம் அயர்வின்றிப் பொதுப்பணியாற்றிய சிவன், திருப்புவனத்தில் தீவிர சிகிச்சை பெற்று வந்தார். அவர் பிறந்த ஊரான தேப்பெருமாநல்லூருக்குச் சென்று தம் இறுதி நாட்களை அங்கே கழிக்குமாறு கூறப்பட்ட அறிவுரைகளை அவர் ஏற்கவில்லை. *19.5.1933* அன்று அமரரானார்.

அவர், தற்போது நம்மிடையே இல்லை. ஆனால், ஏழைகளுக்கு உதவ முன்வரும் தயாளகுணம் தமிழர்களிடையே இருக்கும்வரை, அவர் பெயர் அமரத்துவத்துடன் உலவும் என்பது திண்ணம்.

''மகாமகம் கெய்ட் & டைரக்டரி' யில் இருந்து 'தமிழில் :

— குடந்தை சீனிவாசன்

தெலுங்கில் - மந்தடி கிருஷ்ணாரெட்டி

தமிழில் - சாந்தா தத்

# தாயத்து மகிமை!?

**நா**ன்கு வீதிக்கூடலான அந்த இடத்தில் சாலையோரத்திலிருந்த புளியமரம் மானுட வாழ்க்கையை எத்தனையோ வருடங்களாய் பரிசீலித்துக் கொண்டிருக்கும் மகா மேதாவிபோல் கம்பீரமாய் நின்று கொண்டிருந்தது. அம்மரத்தடியில் குழுமியிருந்த கும்பலின் நடுவில் நின்று கொண்டிருந்தான் அவன்.

எண்ணெய் காணாத தலை சில நாட்களாய் பயன் படுத்தப்படாத வீடு துடைக்கும் சுரணை போலிருந்தது. ஒரேயடியாய் சல்லடை போலில்லாது ஆங்காங்கே கிழிந்திருந்த உடை. தோளில் கண்ணைப் பறிக்கும் வண்ணத்தில் நீளமான துணி. இந்த அலங்காரத்திற்குப் பின்னால் பசியால் சுருண்டு சுருங்கியிருந்த வயிறு. அந்த வயிற்றை நிரப்புவதற்காகவென்றே பின்னிக் கொண்டிருக்கும் வார்த்தைப் பின்னல். தன் சொற் ஜாலத்தால் சுற்றி நின்று கொண்டிருந்த ஜனங்களைத் தன் பால் அப்படியே ஈர்த்து விட வேண்டுமென்ற முயற்சி. அவன் மஸ் தான் சாஹேப்!


“எல்லோரும் கவனமாப் பாருங்க பாபு...”


அத்தனை விழிகளும் ஒருமுகமாய்ப் பார்த்தன... கண்ணாடி அலமாரிக்குள் வைக்கப்பட்டிருக்கும் தின்பண்டங்களை ஆசையுடன் பார்க்கும் பிச்சைக்காரனின் குழி விழுந்த கண்களின் பார்வை போல்! இடக்கையிலிருக்கும் சின்ன தகரப் பெட்டியைத் திறந்து வலக்கையை வெளியே நுழைத்து மூடிய கையை எடுத்தான் மஸ்தான் சாஹேப்.

“சின்னப் பசங்கள்ளாம் ஒரு தடவை ஜோரா கை தட்டி கையைக் கட்டிட்டு நில்லுங்க...” ஏதோ அதிசயம் நிகழப் போகும் பாவனை யுடன் ஆணையிடும் தோரணையில் கூறினான். சிறுவர்களும், அதே உற்சாகத்துடன் பெரியவர்களும் கை தட்டினார்கள். அந்தக்கரவொலியுடன் கூட்டத்தின் நடுவிலிருந்த பதினைந்து வயதுச் சிறுவனின் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த மத்தளம், வற்றிய எருமை மடியினின்று பால் கறக்கும் சத்தம் போல் ஒலித்தது. சிறுவர்களெல்லோரும் கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கலாயினர்.

அவ்வளவு நேரம் மூடியே இருந்த மஸ்தானின் கை திறந்தது. அதில் இரு முனைகளும் மூடப்பட்ட தகர தாயத்துகள் கூட்டத்தின் கண்களில் பிரதிபலித்தன.

“இதெல்லாம் சாதாரண தாயத்து இல்ல. கடைவீதியில் விற்கும் பைராகி தாயத்து இல்ல. தெருவில் விற்கும் விபூதிப் பண்டாரத் தாயத்தும் கிடையாது. நரிக்குறவர்கள் கட்டும் தாயத்தும் இல்ல. இதெல்லாம் யந்திரத் தாயத்துகள் தெரியுமா...’ அவன்வாக்கு சாதுர்யம்,





முடிவே அற்ற வறியவனின் பசி போலிருந்தது.

"இந்தக் கும்பல்ல பெரியவங்க இருக்காங்க. சின்னப் புள்ளைங்க இருக்காங்க. தர்மப் பிரபுக்கள் இருக்காங்க. எல்லோரும் கேட்டுக்கங்க இந்தத் தாயத்தோட மகிமையை. கவனமாக் கேட்டுக்கங்க..." ஒரு கணம்போல் பேச்சை நிறுத்தி ஓரக் கண்ணால் கூட்டத்தை நோட்டமிட்டான்... சொற்பொழிவு துவங்குமுன் சிட்டிகை போட்டுப் பார்க்கும் மைக்டெஸ்டிங் போல். அனைவரின் கவனமும் அவன் கையிலிருக்கும் தாயத்தின் மீதும் அவன் பேச்சின் மீதும் பதிந்திருந்தது. இரட்டிப்பு உற்சாகத்துடன் தாயத்து மகிமை மீண்டும் தொடங்கியது.

"இந்தத் தாயத்தைக் கட்டிக்கிட்டா நடுராத்திரியில் கூட தைரியமா நடந்து போகலாம். பூரான் தேள் பாம்புன்னு அத்தனையும் உங்களைப் பார்த்து பயந்து ஓடலன்னா என்பேரு செப்பிடுவித்தை மஸ்தான் சாஹேப் இல்ல..." மூச்சிறைக்கப் பேசி நிறுத்தினான் அவன். மூச்சுவிடவே மறந்து போனதுபோல் நின்று கொண்டிருந்தது கூட்டம்.

"யாரையாவது பாம்பு கடிச்சிட்டா கடிபட்ட இடத்தில் இந்த தாயத்தை மூணு நிமிஷம்போல் வெக்கணும். அவ்வளவுதான்? அவ்வளவு விஷத்தையும் தாயத்து உறிஞ்சிடும். பாம்பு கடித்த மனுஷன் சிரிச்சிட்டே எந்திரிச்சி உட்காருவான். இது உங்களிடம் இருந்தா ஜென்ம எதிரி கூட உங்க ஜோலிக்கு வரமாட்டான். நான் சொன்னதெல்லாம் நடக்கலன்னா எம்பேரு மோடி மஸ்தான் இல்ல. எங்க குரு ஜலால் சாஹேப் மேல ஆணை. ஒண்ணு ரெண்டு ரூபா. ரெண்டே ரூபா. வேணும்கறவங்க காசு குடுத்து வாங்கிக்கங்க. இன்னைப் பொழுதுக்கு இருபது தாயத்து மட்டும்தான் விக்கப் போறேன். முன்னால் காசு குடுக்கறவங்களுக்கு மொதல்ல கெடைக்கும்..." அவன் சொல்லி முடிப்பதற்குள் குப்பைத் தொட்டி அருகில் எச்சில் இலைகளுக்காக முட்டிமோதும் பசிக்கூட்டம் போல் அங்கிருந்தவர்கள் ரூபாய் நோட்டுக்களுடன் தாயத்துக்காக முண்டியடித்தனர்.

ஜோதிடர்களுக்கு, சாமியார் விபூதிக்கு, குறி சொல்பவர்களின் நல்வாக்குகளுக்கு, செப்பிடு வித்தைத் தந்திரங்களுக்கு இங்கே எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதென்பதை அங்குச் சேரும் கூட்டத்தை வைத்தே புரிந்து கொள்ள முடியும்.

"காரடி சாஹேப்.. காரடி சாஹேப்... பாம்பு... நாகப் பாம்பு...!" கூச்சலிட்டபடி கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஓடி வந்தான் நடுத்தர வயது மனிதன் ஒருவன்.

"பாம்பா... எங்க... எங்க...?" மிரண்டுபோன ஜனங்கள் அங்கும் இங்கும் பார்த்தபடி அவிழ்த்து விட்ட நெல்லி மூட்டைபோல் சிதறினார்கள்.

"அட... இங்கு இல்லய்யா.. பக்கத்துத் தெருவில் இருக்கற எங்க வீட்லதான் பாம்பு வந்தது. நாங்க பார்த்துட்டது தெரிஞ்சி மூலையில் இருக்கற மரப்பெட்டியில் நுழைஞ்சிட்டது. சாஹேப்? நீ வந்து எப்படியாவது அதைப் பிடிச்சுடணும். நீ கேக்கற காசு தந்துடறோம்..." பரிதாபமாய்க் கெஞ்சினான் அந்த ஆள்... காரியம் சாதித்துக் கொள்ள அதிகாரிகளுக்கு முடிப்பு கொடுத்துப் பழகிவிட்ட பெரிய மனிதரைப்போல்!

"வேற யாரையாவது பாருங்க. எனக்கு நெறைய ஜோலி இருக்கு. என்னால் இப்ப வரமுடியாது..." அவசரமாய்க் கூறிய மஸ்தான் சாஹேப் பரபரவென தாயத்து விற்ற பணத்தை தன் பைக்குள் பத்திரப் படுத்தலானான். எவ்வளவு சமாதானப்படுத்தியும் காதில் வாங்காமல் அடம்பிடிக்கும் சிறுபிள்ளையைப் போலிருந்தது அவன் நடவடிக்கை.

"மனுஷன் பதறிக்கிட்டிருக்கார். போய்ட்டு வா சாஹேப். சுத்து வட்டாரத்துல பாம்பு பிடிக்கற துணிச்சல் உள்ளவன் உன்னை விட்டா வேறு யார் இருக்காங்க சொல்லு..."

"இதில் இவ்வளவு தூரம் யோசிக்க என்ன இருக்கு. கௌம்புய்யா..."

"உன்னிடம்தான் தாயத்து இருக்கே! நொடியில் அந்தப் பாம்பைப் பிடிச்சுட மாட்டயா... சீக்கிரம் போ சாஹேப்..."



கூட்டத்திலிருந்து ஆளாளுக்குக் குரல் கொடுத்தனர்.

கையும் களவுமாய் பிடிபட்ட திருடன்போல் சாஹேப் கண்களில் மருட்சி தென்பட்டது. அவ்வளவு நேரம் பிரவாகமாய்ப் பொங்கி வந்த பேச்சு போனவழி தெரியவில்லை. ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தவன் போல் தெரிந்தான்.

அவன் குடும்பநிலை உள்ளங்கை நெல்லிக்கனியாய்ப் புலப்பட்டது. கழுத்தில் மத்தளம் தொங்கவிட்டிருந்த பையன்...அவ

னுக்கு வித்தைக்காக வைக்கப்பட்டிருந்த மண்டையோட்டின் அருகில் உட்கார்ந்துகொண்டு, மிரள மிரள விழித்துக் கொண்டிருந்த ஏழு வயதுச் சிறுமி... பல் பிடுங்கப்பட்டு வட்டக்கூடையில் சாதுவாய்ச் சுருண்டிருந்த பாம்பின் பக்கத்தில் ஐந்து வயது இளையவன்... தூரத்து மரத்தடியில் கைப்பிள்ளைக்குப் பால் கொடுத்தபடி சோறாக்கிக் கொண்டிருந்த மஸ்தானின் பெண்டாட்டி... அவள் தோள்மீது சாய்ந்தபடி அழுதுகொண்டிருந்த மூன்று வயதுப்பெண்... இவர்களெல்லாம் அவனை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் ஜீவன்கள்.

ஏதோ தீர்மானத்திற்கு வந்தவனாய் தன் மகுடியையும் காசு முடித்து வைத்திருந்த துணிப்பையையும் எடுத்துக்கொண்டு தன்னவர்களை ஒருமுறை ஆழமாய்ப் பார்த்துவிட்டு கடவுள்மீது பாரத்தைப் போட்டபடி, வந்த ஆளுடன் நடந்தான் மஸ்தான் சாஹேப். மரணக்குகை நோக்கிச் சென்றுகொண்டிருப்பவன் போன்ற பீதி தெளிவாய்த் தென்பட்டது அவனிடம். கூட்டமும் பின்னால் தொடர்ந்தது.



பாம்பு பதுங்கியிருந்த மரப்பெட்டி, வீட்டு வாசலுக்குக் கொண்டு வரப்பட்டது. பெட்டியில் துணிக்குவியலிடை ஒளிந்திருந்த பாம்பின் வால் கண்ணில் பட்டது. பெட்டியைச் சுற்றி மஸ்தான் சாஹேப், அவன் குடும்பம்... தாயத்து மகிமையைக் கண்ணால் பார்க்கப் போகும் பரபரப்புடன் கூட்டம்...

புலிக்கூண்டில் தள்ளப்பட்ட அற்ப ஜீவனைப்போல் பரிதாபமாய் இருந்தது மஸ்தானின் நிலைமை. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு காரியத்தில் இறங்கினான். மகுடியை வாயில் பொருத்தி யந்திரகதியில் வாசிக்கத் தொடங்கினான். அதிலிருந்து வெளிப்பட்ட இசை, மரண தேவதையை யுத்தத்திற்கு வரவேற்கும் பேரிகை போலிருந்தது. அபஸ்வரமாய் வெளிப்பட்ட மகுடி இசையை லட்சியமே செய்யாத பாம்பு, இருந்த இடம் விட்டு மயிரிழை கூட அசைந்ததாய்த் தெரியவில்லை. மஸ்தானின் மேலண்ணம் உலர்ந்து போனாலும் வாசிப்பை நிறுத்தாமலிருக்க மிகுந்த சிரமத்துடன் முயற்சித்துக் கொண்டிருந்தான்.

இருள் படர்ந்து கொண்டிருந்தது. கூட்டம் பொறுமையிழந்தது. அவன் வேண்டுமென்றே காலம்




கடத்துவதுபோல் பட்டது அவர்களுக்கு. மனம் வைத்தால் அவனால் கணத்தில் பாம்பைப் பிடித்துவிட முடியும் என்பது அவர்களுடைய அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது.

“இருட்டிட்டு வர்றது பார். உன் பாட்டுக்கெல்லாம் இந்தப் பாம்பு மசியறதா தெரியல.. கையால பிடிக்கற வழியைப்பாரு சாஹேப்.. உங்கிட்டதான் தாயத்து இருக்கே... என்ன பயம்?’’ எரிச்சலுடன் ஒருவர் சொல்ல, அதை ஆமோதிப்பது போல் கோரஸாய் குரல்கள் எழுந்தன.

மஸ்தான் கையிலிருந்த மகுடி நழுவிக் கீழே விழுந்தது. கை கால்கள் மரத்துப் போயின. என் தாயத்திற்கு எந்த மகிமையும் கிடையாது, மண்ணாங்கட்டியும் கிடையாது எனக் கத்த வேண்டும் போலிருந்தது. தன்னால் பாம்பெல்லாம் பிடிக்க முடியாது, தெரியவும் தெரியாது என்பதை உரத்த குரலில் எடுத்துச் சொல்ல வேண்டும் போலிருந்தது. தான் காட்டும் கண்கட்டு வித்தையெல்லாம், கேவலம் சாண் வயிற்றுக்காகத்தான் எனக் கூப்பாடு போட வேண்டும் போலிருந்தது. ஆனால் எதுவுமே செய்ய இயலாத ஒரு கையாலாகாத்தனம்! பெண்டாட்டி பிள்ளைகளின் நினைவு வாயைக் கட்டிவிட்டது.

அனிச்சைச் செயலாய் அவன் கை பாம்பின் வாலைத்தொட.... அவ்வளவுதான்... மந்தமாய்ப் படுத்திருந்த மலைப்பாம்பைத்



திருப்பிப் போட்டாற்போல்... சூறாவளியாய் கடலலைகள் எகிறி எழுவதுபோல்... அவன் கையிலிருந்து உக்கிரமாய் ஒரு வெப்ப உருண்டை தன்மீது பரவியது போல் சரெலெனப் படம் விரித்த பாம்பு தன்மீது பாய்ந்த உஷ்ணத்தை மின்சார வீச்சாய் அவன் மீதே திருப்பிச் செலுத்தியது. அத்துடன் தன் வேலை முடிந்ததுபோல குழுமியிருந்த ஜனங்களைச் சட்டை செய்யாது சரசரவென நகர்ந்து சற்று தள்ளியிருந்த கற்குவியலுக்குள் புகுந்து மறைந்துவிட்டது.

பாம்புக் கடியின் வீரியத்தைத் தாங்க முடியாது அப்படியே சுருண்டு விழுந்தான் மஸ்தான் சாஹேப். அவன் வாயிலிருந்து நுரை தள்ளியது. விலுக்விலுக்கென அடித்துக் கொண்டது உடம்பு. கூட்டத்தில் ஒருவருக்குக் கூட அவன்மீது இரக்கம் ஏற்பட்டதாய்த் தெரியவில்லை. தாயத்தின் மீதான நம்பிக்கை இன்னும் அகலவில்லை அவர்களிடம்.



''கடிபட்ட இடத்தில் உங்கிட்ட இருக்கற தாயத்தை வச்சு அழுத்து சாஹேப். விஷம் எறங்கிடும்....'' வலியில் துடித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் தாயத்து குறித்து அவன் மறந்து போயிருப்பானோ என்ற சந்தேகத்துடன் நினைவுபடுத்தினான் ஒருவன். அதற்கான முயற்சியே செய்யவில்லை அவன். அப்படியே அசையாமல் கிடந்தான். அவன் உடம்பில் மெல்ல மெல்ல நீலம் பரவியது. விஷம் தன் வேலையைக் காட்ட ஆரம்பித்துவிட்டது.

''பாவம்... டாக்டரை வேணா கூப்பிடலாமா?''

''உனக்கென்ன பைத்தியமா... டாக்டர் எதுக்கு... அதான் தாயத்து இருக்கில்ல?''

இதே விவாதத்தில் நேரம் கரைந்தபின்... மஸ்தான் சஹேபின் தலை தொங்கியபின்... யாரோ ஒருவன் சென்று டாக்டரை அழைத்து வந்தான். அவனைப் பரிசோதித்த டாக்டர் பிரயோஜனமில்லை என்பதுபோல் உதடு பிதுக்கினார். பாம்பு கடித்த உடனே சிகிச்சை செய்திருந்தால் நிச்சயம் பலன் இருந்திருக்கும் எனச் சொல்லிவிட்டுத் தன் வழி நடந்தார்.

மஸ்தான் சாஹேப் மண்ணோடு மண்ணாய்க் கலந்து போனான். அவன் பெண்டாட்டியும் பிள்ளைகளும் அவன்மீது விழுந்து கதறினர்.

ஒரு வாரம் கடந்திருக்கும். அதே நாற்சந்தி... அதே மரத்தடி. மறுபடியும் செப்பிடு வித்தை? சுற்றிலும் அதே ஜனங்கள்? மஸ்தானின் பதினைந்து வயதுத் தம்பி மஸ்தானின் இடத்தில் ஆட்டத்தை நடத்திக் கொண்டிருந்தான்.

பத்து வயதுப்பிள்ளை மத்தளம் வாசித்துக் கொண்டிருந்தான். ஏழு வயதுப் பெண் புல்புல்தாரா அருகில். கைக்குழந்தைக்கு முந்திய பெண், மண்டையோட்டின் முன் உட்கார்ந்து ஜனங்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

செத்துப்போன அண்ணனை கூட்டத்துக்கு நினைவுபடுத்தும் வகையில் தாயத்து மகிமையை விவரித்துக் கொண்டிருந்தான் தம்பி. அவன் முடித்ததுதான் தாமதம்... கையில் காசுடன் தாயத்துக்காக முண்டியடித்தனர் ஜனங்கள். மஸ்தான் சாஹேப் மரணம் அவர்களிடையே எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தியதாய்த் தெரியவில்லை.

### மத்தளம்

மத்து என்பது ஓசைப்பெயர். தளம் என்பது அடித்தளமாகிய கருவிகளுக்கு எல்லாம் அமைவிடமாக இருப்பதனால் 'மத்தளம்' என்று பெயர் பெற்றது. இதற்குப் பழங்காலத்தே 'முட்டு' என்ற பெயருண்டு. சந்தனம், பலா, கொண்டல், அகில், வேம்பு ஆகியவற்றால் மத்தளம் செய்யப்படுகிறது. தற்காலத்தில் பனை மரத்தால் செய்யபட்டாலும் பலாமரமே சிறந்ததாகப் பேசப்படுகிறது.

திரு. சுகி சிவம், பாரதி சுராஜ் போன்ற அறிஞர்கள் பாராட்டும் மிக அற்புதமான நூல்...ஸ்ரீகாஞ்சி மகாபெரியவாள் செய்த அற்புத சித்துக்கள், அருளிய அருள் உபதேசங்கள் அனைத்தும் அடங்கிய கவி நூல். மொத்தம் 192 பக்கம்.
விலை ரூ.60/- மட்டுமே (விலை ரூ.50 தபால் செலவு ரூ.10)
அனுப்பி, கவியோகி வேதம் (போன்: 24490246) 3/496,
ரெங்கா ரெட்டிகார்டன், நீலாங்கரை, சென்னை - 600 041
அவர்களிடமிருந்து பெற்று விமர்சனம் எழுதுபவர்களுக்குப் பரிசுகளும் ஸ்ரீஅன்னை சக்தி யோகா அன்பர்களால் தரப்படும்.
வாங்குக! முந்துக!

★ வலைத்தளத்தில் இருந்து...

# இந்தியா ஒளிர்வதில் அமெரிக்காவின் பங்கு

இந்தியா ஒளிர்வதில் நம்பிக்கை கொள்ளும் அனைவருக்கும், அக்டோபர் - டிசம்பர் காலகட்டத்தில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி 10.4 சதவீதம் என்ற செய்தி ஜாக்பாட் அடித்தது போல இருந்திருக்கும். மழை வளத்தால் ஏற்பட்ட வளர்ச்சியினை கருத்தில் எடுத்துக் கொண்டாலும் கூட 'இந்தியா தற்பொழுது வளர்ச்சிக்கான விரைவுப் பாதையில் இருக்கிறது' என்றே கூறலாம்.

வாஜ்பேயியே இதற்குக் காரணம்' என்று பாரதீய ஜனதாக்காரர்கள் முழங்கினாலும் பல காரணிகள் இந்த வளர்ச்சி விகிதத்தோடு பின்னிப் பிணைந்துள்ளன. முக்கியமான ஒரு காரணம், அவ்வளவாகக் கண்டு கொள்ளப்படாத உலகமயமாக்கல் (globalisation of pump-priming) என்றால் அது மிகையல்ல.

அமெரிக்க வரலாற்றிலேயே மிகப் பெரிய பற்றாக்குறையான வரவு-செலவுத் திட்டத்தினை ஜனாதிபதி வரி விகிதங்களைக் (tax rates) குறைப்பதன் மூலம் எதிர் கொள்கிறார். தன் பங்குக்கு அதே சமயம், அமெரிக்க மத்திய வங்கி (Federal Reserve) நாம் இதுவரை அறிந்திராத வகையில் வட்டி வீதத்தினை ஒரு சதவிகித அளவிற்குக் குறைத்துள்ளது. வட்டியும் வரியும் இவ்வாறாகக் குறைக்கப்படுவது, பெரியதொரு வளர்ச்சிக்கான தூண்டுகோலாக அமையக்கூடும்.

இவ்வாறு அரசு தனது செலவினங்களில் தாராளமாக இருந்து, பணமும் குறைந்த வட்டியில் மலிவாகக் கிடைக்கையில், மக்களும், நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு கடன் வாங்கிக் குவிக்க மாட்டார்களா? கடன் வாங்கிய பணம், ஏதாவது பொருளை வாங்குவதற்காக சந்தைக்கும் வந்து தீர வேண்டும்!


இவ்வாறாக அபரிதமாக மக்கள் கையில் வந்து குவியும் பணம், பொருட்களை வாங்குவதற்காக செலவிடப்பட்டு, மக்களின் தேவைகளை ஈடுகட்ட உற்பத்தி பெருக, உற்பத்தியைப் பெருக்குவதால் வேலைவாய்ப்பும் பெருகி, அந்த அலையில், தான் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என புஷ் நினைக்கிறார். ஆனால், அவர் நினைப்பதுபோல காரியங்கள் நிகழ்வதாகத் தெரியவில்லை.

பொருளாதாரம் வளர்கிறது என்பது உண்மை. ஆனால் வேலைவாய்ப்பின்மையை பெருமளவில் குறைக்கும் அளவிற்கு வேலைவாய்ப்பு பெருக மாட்டேன் என்கிறது! ஆனாலும் மேலும் மேலும் மக்கள் செலவு செய்ய, இதனால் தூண்டப்படும் பொருளாதார முன்னேற்றம் தேர்தலுக்குள் குறிப்பிடத்தக்க வகையில் இருக்கும் என புஷ் நம்புகிறார்.

ஏன் வரலாறு காணாத வகையில் ஏற்படுத்தப்படும் பணப் புழக்கம் (pump-priming) அமெரிக்காவில் எதிர்பார்த்த விளைவினை உண்டாக்கவில்லை? முதன்மைக் காரணி 'உலகமயமாக்கல்'. வரி விகிதங்கள் குறைந்தால் மக்கள் அதிகமான அளவில் பொருட்களை வாங்கி, அதனால் உள்நாட்டு உற்பத்தி பெருக வேண்டும் என்பது தான் நியாயம்! மேலும் எளிதில் கிடைக்கும் பணம் (cheap money = money at low interest rates) புதிய தொழிற்சாலைகளுக்கும், சேவை நிறுவனங்களுக்குமான முதலீட்டைப் பெருக்கி பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதுதான் தர்மம்!!

ஆனால் நடந்திருப்பது என்ன என்றால் உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில், அமெரிக்க மக்களின் செலவினங்கள் உள்நாட்டுத் தயாரிப்புகளுக்காக செலவிடப்படாமல் இறக்குமதிப் பொருட்களுக்காக செலவிடப்படுகிறது. அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறை (trade deficit) முன்னெப்





போதும் இல்லாத வகையில் 500 பில்லியன் டாலர்களைத் தொடுவதிலிருந்தே இதனை அறியலாம்.

அதுபோலவே எளிதாகக் கிடைக்கும் பணம், அமெரிக்க நிறுவனங்களின் தொழில் முதலீடுகளை அதிகரித்துள்ளது. ஆனால் இம் முதலீடுகள் அமெரிக்காவை விட்டுப் பறந்து, இந்தியாவிலோ அல்லது சீனாவிலோ செய்யப்படலாம். "நியூ டாலர் ஸோன்" என்று பைனான்ஷியல் டைம்ஸைச் சேர்ந்த மார்ட்டின் உல்ஃப் குறிப்பிடும் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் எழுச்சி, அமெரிக்காவின் இந்தப் பிரச்னையை மேலும் சிக்கலாக்குகிறது.

ஆசிய நாடுகளினுடனான வர்த்தகத்திலேயே அமெரிக்கா அதிகப் பற்றாக்குறையை எதிர்நோக்குகிறது. இதனால் ஆசிய நாடுகளின் டாலருக்கு நிகரான பண மதிப்பு உயருகிறது. ஆனால் ஆசிய நாடுகள் இந்த விளைவை விரும்புவதில்லை. அவை தங்களுக்குள்ளேயே குழுமங்களை அமைத்து டாலருடனான நிலையான மதிப்பை நிறுவ முயலுகிறார்கள். சீனா, ஹாங்காங், மலேசியா போன்றவை இந்த முறையைப் பின்பற்றுகின்றன. இந்தியா, ஜப்பான், கொரியா, தைவான், ரஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற நாடுகள்

இவ்விதமாக குழுக்கள் அமைக்காமல் பணமாற்று சந்தையில் (forex market) பங்கெடுத்து, தங்களது பண மதிப்பு அதிகமான அளவில் டாலருக்கு நிகராக உயராமல் பார்த்துக் கொள் கின்றன.

இந்த டாலர் பிரதேசங்களின் (dollar zone) முக்கியத்துவம் என்ன? முதன்மையானது, இவ்விதமாக அமெரிக்க பொருளாதாரத்தைத் தூண்ட வேண்டும் என்று புஷ் எடுக்கும் முயற்சிகளின் பலன்கள் கசிந்து, டாலர் பிரதேசங்களை வந்து அடைகிறது. இறக்குமதிப் பொருள்களின் மீதான அமெரிக்கர்களின் அதிகமான செலவினங்கள் டாலரின் மதிப்பினை குறைத்து, அதன் விளைவாக வெளிநாட்டுப் பொருள்களின் விலைகள் அதிகரித்து அமெரிக்க பொருள்களின் விற்பனை சூடு பிடிக்கலாம். இந்தக் கோட்பாட்டிற்கேற்ப யூரோவுக்கு நிகரான டாலரின் மதிப்பு குறைந்து, அதன் விளைவாக ஐரோப்பியப் பொருட்களின் இறக்குமதி பாதிக்கப் பட்டுள்ளது.

ஆனால் ஆசிய நாடுகள் இவ்விதமாக டாலருடன் தங்கள் பண மதிப்பைப் பொருத்துவதன் மூலம், தங்கள் பொருட்களின் விலை அமெரிக்காவில் அதிகரிக்கத் தேவையில்லாமல் நிலை நிறுத்துகிறார்கள். இவ்விதமான டாலர் பிரதேசங்களாகப் பங்கெடுக்கும் நாடுகளின் ஏற்றுமதி தொழில் அமெரிக்கர்களின் செலவில் பலனடைகிறது.

டாலர் பிரதேசங்கள் அமெரிக்க முதலீட்டின் பலனையும் அள்ளுகின்றன. இவ்வகையான வளரும் புதிய சந்தைகளுக்கு அமெரிக்க முதலீடு நேரடி முதலீடுகளாகவும், பங்கு முதலீடுகளாகவும் அளவிடமுடியாத அளவிற்கு வந்து குவிகிறது. குறைந்த வட்டிக்கு இவ்வாறு அமெரிக்காவில் கிடைக்கும் பணமானது டாலர் பிரதேசங்களின் பங்குச் சந்தைகளை கொழிக்க வைக்க உதவுகிறது.

2003ல் இந்திய பங்குச் சந்தைக்கு வரலாறு காணாத வகையில் பணம் வந்து குவிந்தது. இந்த வருடமும் அது தொடர்கிறது. மார்ட்டின் உல்ஃப் இந்த டாலர் பிரதேசங்கள் உலகின் 52 சதவிகித மக்கள் தொகையை உள்ளடக்கியிருந்தாலும் ஜிடிபி வளர்ச்சியில் இவற்றின் பங்கு 53 சதவிகிதம் என்கிறார். முறையாக ஏற்படுத்தப்பட்ட ஒரு குழுமம் இல்லையென்றாலும், டாலர் பிரதேசங்கள் தற்பொழுது உலகின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் முக்கியமான காரணி என்கிறார்.

முதன்மையானது, அமெரிக்க அரசு முயற்சிக்கும் பொருளாதார, செலவீட்டு (fiscal) தூண்டுதல்கள் அமெரிக்காவில் மட்டுமே பலன் தராது, உலகெங்கும் பரவியுள்ள இந்த டாலர் பிரதேசங்களுக்கும் பரவுகிறது. குழுமமாக செயல்படும் ஆசிய நாடுகள் தங்கள் நாடுகளின் பண மதிப்பு குறையாமலும், வட்டிவிகிதங்கள் கூடாமலும், பண வீக்கம் அதிகரிக்காமலும் இருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கின்றனர். இந்த நாடுகளுக்கு அமெரிக்காவின் தொழில்நுட்பமும், முதலீடுகளும் எளிதில் கிடைப்பதோடு, போதிய அளவு மலிவான தொழிலாளர்களும் கையிருப்பில் இருக்கிறார்கள். தொழில் உற்பத்தி இவ்வாறான மலிவான தொழிலாளர்கள் இருக்கும் நாடுகளை நோக்கி நகர்ந்துள்ளதால், அமெரிக்காவில் இவ்வாறு அதிகமான அளவில் செலவளிப்பதால் ஏற்படும் பண வீக்கம் இல்லை.

எனவே, புஷ் நிர்வாகத்தின் தற்போதைய கவலை அமெரிக்காவில் மட்டுமல்லாமல் இந்த டாலர் பிரதேசங்கள் அனைத்தின் பொருளாதாரத்தையும் தூண்டவல்ல ஒரு பெரிய தூண்டுதலை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதுதான். எனவே இந்தியா மட்டுமல்லாது ஆசியாவின் அனைத்து பொருளாதாரங்களும் ஒளிர்கிறது.

இதுவரை தூக்கத்திலிருந்த ஜப்பான் கூட தற்பொழுது விழித்துக் கொண்டுள்ளதால், கடந்த காலாண்டில் அதன் ஜிடிபி வளர்ச்சி 6.4 சதவிகிதத்தை எட்டியிருக்கிறது.


தொழில் வளர்ச்சி குறித்து சமீபத்திய புள்ளிவிபரங்களின் படி சீனாவின் வளர்ச்சி 23 சதவிகிதம். பின்னர் மலேசியா, தாய்லாந்து, ரஷ்யாவுக்கு அடுத்து இந்தியாவின் வளர்ச்சி 7 சதவிகிதம். இந்த அனைத்து நாடுகளின் பங்குச் சந்தைகளும் கடந்த ஆண்டில் பெரும் வளர்ச்சியைக் கண்டன.


இந்த நிகழ்வுகள் ஏதோ குருட்டாம் போக்கில் நிகழ்வதல்ல. அமெரிக்காவின் பொருளாதாரத் தூண்டுதல்கள், உலகமயமாக்கப் படுவதின் விளைவு. வரும் தேர்தலில் தன்னைக் காப்பாற்றும் என்று புஷ் செய்யும் இம்முயற்சிகள் அவரைக் காப்பாற்றாமல் வாஜ்பேயியைக் காப்பாற்றுகிறது...

*பிரபு ராஜதுரை*

*ராயர் காபி க்ளப்பிலிருந்து...*







நெட் கூடி

# ஒண்ணு அடிச்சா ஒண்ணு...

என் நண்பர் ஒருவரைப் பார்க்க அவருடைய அலுவலகத்திற்குப் போன போது ரொம்பவும் கவலையாயிருந்தார். என்னவென்று விசாரித்தபோது அவரது கணினியில் கீ போர்டு சரியாக வேலை செய்யவில்லையென்றும், முக்கியமான வேலையொன்றை உடனே முடிக்க வேண்டியிருக்கிறது என்றும், பழுது பார்ப்பவரை அழைத்திருப்பதாகவும், அவர் வந்து கொண்டிருப்பதாகவும் சொன்னார். கொஞ்ச நேரத்தில் பழுது பார்ப்பவரும் வந்துசேர நண்பர் அவரிடம் அழாக்குறையாக குறைகளை சொல்லிக் கொண்டிருந்தார்.

"கீ போர்டு சரியாவே இல்ல சார். ஒண்ணு அடிச்சா ஒண்ணு விழுது."

நான் நடுவில் புகுந்து, "அப்ப சரியாத்தானே வேலை செய்யுது. ஏன் ரிப்பேருன்றீங்க?"

இரண்டு பேரும் ஒன்றும் புரியாமல் என்னை விழித்துப் பார்க்க நான் சீரியசாக விளக்கத் தொடங்கினேன்.

"இப்ப நீங்க ஒண்ணுன்னு அடிச்சா ஒண்ணுதானே விழுது. சரிதானே. ரெண்டுன்னு விழுந்தாத்தானே சரியில்லேன்னு அர்த்தம்."

நண்பர் என்னை பார்த்த பார்வையில் அதிகபட்ச கோபமிருந்தது என்பதை சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

ராயர் காப்பி க்ளப்பில்

*சுரேஷ்*

இணையப் பக்கம்

# நூலகம் நாட்டு வைத்தியம்

ஓம் சுப்ரமண்யம்

ஒரு காலத்தில் சில வியாதிகள் அதிகம் இருந்தன. பழம் பாடல்களில் அவை குறிப்பிடப் பட்டிருக்கும்.

கந்தர் ஷஷ்டி கவசத்தில்... திருப்புகழில் (இருமலு ரோகம் முயலகன் என்ற பாடலில்)... பாம்பன் சுவாமிகளின் சண்முக கவசத்தில் (ஞமலியம் பரியன் கைவேல், நவக்கிரகக்கோள் காக்க-16)..என்று பல பாடல்களில் நோய்களைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம். நாட்டுவைத்திய முறையில் நோய்களைச் சோதித்து ஆராய்ந்து அனுபவப் பட்டு பக்குவமடைந்தோர் பலர் உளர்.

நோயாளியிடம் உனக்கு என்ன செய்கிறது, என்ன குறை என்பதை அவர்கள் கேட்பதில்லை. மாறாக கை நாடி பார்த்து இன்ன குறைகள் உள்ளனவா என்று பட்டியலிடுவர். நோயாளி ஏற்றுக் கொண்டவற்றின் மீது அக்கறை செலுத்தி மீளவும் உறுதி செய்வர். மேலும் முதல் முதலில் சிறிது விபூதியை தேனில் கலந்து கொடுப்பர். அதை விபூதி என்று சொல்லாது சிறிது தியானித்துவிட்டு அருந்தச் செய்வர். நோயாளிக்கு மனோதத்துவ ரீதியில் முதலில் நம்பிக்கையூட்டுவர். வியாதியினின்றும் முழுமையாக நிவாரணம் கிடைக்கும் என்பதை நம்பு என்பர்.

கனிவான பேச்சால், வியாதியைக் கொன்றுவிட்டதைப் போன்ற உணர்வுக்கு நோயாளி வருமாறு செய்யும் வைத்தியர்களின் கைவந்த கலை பயனளிக்கின்றது. நல்ல பேச்சுச் சாதுரியம் உள்ள மருத்துவருக்கு நிச்சயமாக வியாதிகள் கட்டுப்பட்டு விடும். மேலும் சரம் பார்ப்போரும் உளர். பக்ஷி பார்ப்போரும் உளர். ஜாதகமும் கோள் ஆறும் பார்த்து வைத்தியம் செய்வது,'நேர சுத்தம்'- பார்த்துச் செய்வது என்பனவும் உண்டு..

அக்காலத்தில் பெண்களின் கையில் நாடி பார்ப்பதற்காக ஒரு பட்டுத் துணியை கைவசம் வைத்திருப்பர். பெண்களின் மெய் தீண்டுதல் குற்றம் என்பது 'அக்கால' மருத்துவர்களுக்கு 'தெய்வீக விதி'யாக இருந்தது..

வீரம், பூரம் என்று வீரியமான மருந்து வகைகள், உள்ளன. அவற்றிற்கு பத்திய உணவு மிகவும் அத்தியாவசியமானது. பத்தியப் பிழை செய்தால் நோயாளிக்கு தலைவலியோடு திருகு வலியும் ஏற்படும்.

கிராமங்களில் பச்சிலை வைத்தியம் மிகவும் எளிய முறையில் துன்பம் தவிர்க்கின்றது. மூத்திரம் பிரியாமல் நீர்சுருக்கினால், அவதிப் படுபவரின் கால் கட்டைவிரலில் சுண்ணாம்பைத் தடவிய சிறிது நேரத்தில் நோயாளி குணமடைவான்.

மேலும் "காடி" என்று அழைக்கப் படும் ஒரு மருந்தை எல்லோர் வீட்டிலும் வைத்திருப்பர். அதனால் தான் கிராமத்தில் ஏதேனும் ஒரு உணவுப்பொருள் புளித்தால் "என்ன இது ஒரே புளிச்சக் "காடி'யாக இருக்கிறதே" என்று இன்றும் சொல்லப் படுகிறது.

இருப்பினும் ஏமாற்றுவோர் இங்கே பரவலாகக் கலந்து விடுவதாலும், தடியெடுத்தவன் தண்டல்காரன் என்பது போல செயல் படுபவர்கள் ஊடாடுவதாலும் பாட்டி வைத்தியம்.. பச்சிலை வைத்தியம் என்பவை தளர்வுற்றிருக்கின்றன.'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' என்று ஒரு பழமொழி தப்பாக மருவி வந்துள்ளது.

உண்மையில் 'ஆயிரம் வேர் கண்டவன் அரை வைத்தியன்'. ஆயிரம் வேர் மற்றும் பச்சிலைக் குறிப்பினை இனம் கண்டு கொள்ள அறிந்தாலே அவன் அரை வைத்தியனாகிறான்.

ஒருவருக்கு காலரா போன்று வாந்திபேதி ஆரம்பித்த போது எலுமிச்சம்பழம் ஒன்றை எடுத்து சிறிது வைக்கோலைப் பரப்பி தீமூட்டி, அதில் பழத்தை இட்டு வெந்த பின்னர் அதன் சாறை எடுத்து சுத்தமான தேனில் கலந்து நோயாளிக்குத் தந்தபோது உடனே நின்றது. பேருந்தில் சிக்கி ஒருவரின் கையில் பெரிய எலும்பு முறிவு ஏற்பட்டது. கை நொடியில் வீக்கம் கண்டது. கிராம வைத்தியர் ஒருவர் பக்கத்தில் இருந்தார். அவர் உடனே சில பச்சிலைகளைப் பறித்து வந்து வைத்தியம் செய்தார்.

ஊமத்தைச் செடி எல்லோருக்கும் தெரியும். அந்தச் செடியில் இருவகை உண்டு. காம்புகள் பசுமையான வண்ணத்தில் ஒன்றும், கரு நீல நிறத்தில் ஒரு வகையும் உண்டு. அந்தக் கருநீல ஊமத்தஞ் செடியின் இலை நான்கினைக் கசக்கிச் சாறு பிழிந்து, பச்சைக் கற்பூரம், பசுவின் வெண்ணை இவற்றை சம எடை கலந்து தடவினார்.


பார்த்துக் கொண்டிருக்கும் போதே வீக்கம் வடிய ஆரம்பித்தது. மூன்று முறைக்கு மேல் போடவேண்டாம் என்றார். அவ்வளவு கடுமையான வெம்மையுடையதாம்! இவற்றிற்கு இன்ன பரிகாரம், இன்ன அனுபானம் என்பதை தமிழ் வைத்தியர்கள்" இடக்கர் அடக்கலாக மறைமுகப் படுத்தி ".கோட்' மொழியில் பெயரிட்டதால், உண்மையான 'மூலிகை வைத்தியத்'திற்கு தற்போது மவுசு குறைந்து வருகிறது.

*- அகத்தியர் இணையத்திலிருந்து...*



# அக்காலக் கோட்டைகளின் அற்புதங்கள்

*டாக்டர் ஜெயபாரதி, மலேஷியா*



பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை மதில் சுவர்களில் ஒரு சுவற்றின் இரண்டு ஓரங்களின் இடையே காரீயம் உருக்கி தனிக் கலவையுடன் செலுத்தியிருப்பதாக ஒரு தகவல் படித்தேன். பனைமரப் பதனீரினின்றும் கருப்பட்டி தயார்செய்து அதனைச் சூடாக்கிப் பாகாக்கி அதனை சுண்ணக் காரையுடன் கலந்து சுவர்களின் ஒரு பகுதியில் பூசுவதால், நொறுங்குதல், பொடிதல் ஆகிய குணங்கள் தவிர்க்கப்

படுவதாய் கூறப்படுகின்றது. செங்கல் சூளைகளில் வைத்துச் சுடும்போது உருகி அதன் உருவம் மாறி கறுத்து கடினப்பட்டு விடுகின்றது. அந்த உருக் காஞ்செங்கல் சாணைக் கற்களைப் போன்ற அமைப்புடன் உறுதியானவை. செங்கல்லினின்றும் மாறுபட்ட தன்மை யுடையவை. யானை குளிப்பாட்டும் மாவுத்தன் அவ்வாறான உருக்காஞ் செங்கல்லை வைத்துத்தான் தேய்ப் பான். அந்த உருக்காஞ்செங்கல் துண்டு களும் காரீயக் கலவையில் சேர்க்கப் படுகின்றது என்றும் ஒரு தகவல்.

முன்னாள் தஞ்சாவூர், கோட்டை உடையதாகவே இருந்திருக்கிறது. மதுரைக் கோட்டை என்பதுபோல 'தஞ்சைக் கோட்டை' என்ற சொல் வழக்கும் உண்டு. மராத்தியர்கள் அவர்கள் பாணியில் கோட்டைகளை அமைப்பதில் வல்லவர்கள்.

கோட்டைச்சுவர் இரு புறமும் உறுதியான கற்களுக்கு இடையில் செங்கல் வைத்தே நிரப்பப்பட்டு இருந்தது. கற்கள் மட்டுமே கொண்டு அமைக்கப்படும் சுவர்களுக்கு சில பலவீனங்களும் உண்டு. கற்களின் நடுவே செங்கல்கள் வைத்துக் கட்டப் படும் சுவர்களை கவண்கற்களோ இடி மரங்களோ வைத்துத் தகர்ப்பது சிரமம். அந்த செங்கற்கள் சாதாரணமானவை



யல்ல. மிகவும் உறுதியானவை. அத்து டன் அந்த செங்கற்களை இணைக்கும் காரையும் சாதாரணமானதல்ல. Special Formula கொண்டது.

கருப்பஞ்சாறு, கடுக்காய்ச்சாறு, இலவம்பஞ்சு அரைத்த வைக்கோல் போன்ற சரக்குகள் சேர்ந்தது. அந்த செங்கற்கள் பொருத்தப்பட்டிருக்கும் விதமும் ஒருமாதிரியான Interlocking முறையாக இருக்கும். ஆகவே அவை கனத்தில் குறைவாக இருந்தாலும் வேறு வழிகளில் உறுதியும் வலுவும் வசதியும் கொண்டவையாக விளங்கும்.

பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை பானர்மேனிடம் வீழ்ந்த பின்னர், ஊமைத் துரை இரண்டே வாரங்களில் அதன் சுவர்களைச் செப்பம் செய்தார். இருப தாயிரம் பேர் அதில் ஈடுபட்டனர். மண்ணுடன் இலவம்பஞ்சு, கருப்பஞ் சாறு, முதலியவை சேர்த்து அந்தக் கலவையால் கட்டப்பட்ட சுவர். அதனைத் தகர்ப்பதற்காக ஆங்கி லேயர், Eighteen Pounder எனப்படும் கனரக பீரங்கியை, செயற்கையாக அதற்கென்று அமைக்கப்பட்ட மண் மேட்டில் ஏற்றிவைத்து தொடர்ந்து தாக்குதல் நடத்தினர்.

Eighteen Pounder என்பது பதி னெட்டுப் பவுண்டு - அதாவது எட்டுக் கிலோ எடையுள்ள குண்டுகளை மிகவும் விசையுடன் வெகு தூரத்துக்கு சுடக் கூடியது. அந்த பீரங்கியின் வாய்ப்பகுதி, சுட்ட வேகம் தாங்காமல் தானாகவே விரிசல் கண்டு வெடித்து விட்டது. ஆனால் அந்தக் கோட்டைச்சுவர் அப்ப டியே இருந்தது. பீரங்கிக்குண்டுகளின் வேகத்தையும் விசையையும் தாங்கிக் கொண்டு விட்டது. என்னே நம் முன்னோர்களின் சாமர்த்தியம்!

*தொகுப்பு : கவியோகி வேதம்*



*விழித்துக் கொள்க; வெற்றி பெறுக*

# குழம்பித் தவிக்காதீர்; (5) கோபப்படாதீர்!

**ஸ்வாமி**

'குழப்பம் தவிர்; கோபம் தவிர்' என்பது மூதுரை.

குழப்பம் கோபத்தைக் கொழுந் துவிடச் செய்துவிடும். கோபம் குழப்பத்தைக் கூடச் செய்யும். இந்த இரண்டும் கூடா உணர்வு களில் முக்கியமானவை. தன் னையே கொல்லும் சினம் என்பது குறள்.

விசுவாமித்திரர் வசிட்டரிடம் கோபித்தார். காரணம், பிரும்மரிஷி யின் பெருமை தெரியாத குழப்பம் அதன் விளைவு அரசனாயிருந்தும் ஆளும் அம்பும் சேனையும் கொண்டிருந்தும் வித்தையில் சிறந் திருந்தும் தோற்று அவமானப்பட் டார்.

'கோபத்துடன் எழுந்திருப்ப வன் நஷ்டத்துடன் அமருகிறான்' என்பது ஆங்கிலச் சொல். 'கோபம் பாவம் சண்டாளம்' என்றும் தமிழ கக் குடும்பங்களில் கூறப்பட்டு வருகின்றன.

சண்டாளம்' என்பது ..ாலைப் பழியைக் குறிக்கும்.

## கோபம் புத்தியை அழிக்கும்

'கோபம் வரும் போது புத்தி நாசமடைகிறது. இதனால் ஒருவன். எந்தத் தீய செயலிலும் இறங்கி விடுகிறான். இதன் விளைவாக அழிகிறான்' என்பது கீதை.

படித்தவராயினும், பணக்கார ராயினும் பழிச்செயலைச் செய்து விட்டுப் பாவத்தைச் சுமப்பதும்; தண்டனையில் தவிப்பதும் கோபத் தால் தான்.

கோபம் உண்டாகிவிட்டால், எதிரே இருப்பவர் யார்? யாருடன் எங்கே, என்ன பேசி எதில் ஈடுபட் டிருக்கிறோம்?' என்று, இடம் காலம் சூழ்நிலையை எல்லாம் மறந்து விடும் மனிதர், பெரும் அழிவுச் செயலிலும் இறங்கிவிடு கின்றனர்.

## தமோகுணம்

இதற்கு ஏகப்பட்ட உதாரணங் கள் உள்ளன. இருள் (தமோ) குணத் தைச் சார்ந்ததே இவ்வளவு மட்ட மான கோபமும் குழப்பமும்.

'பொறுத்தார் பூமியாள்வார்' என்று அரசரேயாயினும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது போதிக்கப்பட்டுள்ளது. ராமரும், தருமரும் பொறுத்தனர். பூமியாண்டனர்.

குடும்பத்திலோ, நாட்டிலோ எங்குமே எதிலுமே கோபமின்றிப் பிரச்னையை அணுகுபவரில்லை. இதனால்தான் நண்பர்கள் பகைவர்களாகின்றனர். உறவினர் பிரிந்துவிடுகின்றனர்.

## கோபமும் வேண்டும்

சமையலுக்குத் தீ போல நிர்வாகத்திற்கு, நேர்மை நிலைப்பதற்குக் கோபம் இருக்கலாம்.

கோபத்தை சதா கொழுந்துவிடச்செய்து வாழ்க்கையைத் தீபாவளிபோல வெடிச்சத்தத்தால் வகுத்துக் கொண்டு ரத்தத்தைக் குடித்துப் பிறர் கண்ணீரில் குளிக்கக் கூடாது.

எங்குப் பார்த்தாலும் பக்குவமின்மை. தெளிவின்மை. நாணயமின்மை. பொய்மை. போலித்தன்மை. நம்ப முடியாமை. இந்த உலகம் மீது கோபம் வராமலிருக்குமா?

## படித்தவரையும் நம்பமுடியவில்லை

நண்பர் ஒருவர் கேட்டார், ''சார், பணத்தைப் பற்றிக் கூடக் கவலையில்லை, உண்மையாக சரியான சிகிச்சை செய்வார்களா?'' என்று! மருத்துவரைப் பற்றியே அச்சம். எந்த மருத்துவரிடம் உடம்பைக்




காட்டலாம்? யாரிடம் அறுவை சிகிச்சைக்குச் சேர்ந்தால், கிட்னி காணாமற் போகாமலிருக்கும்?'' என்றார்.

எனக்கு அதிர்ச்சி! போலி டாக்டர்கள் பிடிபடுவதும், வியாபார நோக்கில் மருத்துவமனைகள் நடத்தப்படுவதும் அவர் அச்சத்தை நியாயப்படுத்துகிறது.

அரசியல்வாதிகள், அதிகாரிகள் என்று அயோக்கியர்களையே அறியும் போது சமுதாயத்தின் மேல் கோபம் கொள்ளாமல் முடியுமா?

## நேர்மை மதிக்கப்படும்

புறாக்கள் மலிந்துவிட்டன என்பதால் மயில்களின் மதிப்பும் குறைந்துவிடுமா? அயோக்கியத்தனம் அதிகப்பட்டாலும் மிகக்குறைவாக இருக்கும் நேர்மைக்கு மரியாதையுண்டு.



## ஆசைக்கு அளவில்லை

ஏகப்பட்ட சொத்துக்கள் சேர்ந்துவிட்டாலும், மனிதர் இன்னும் சம்பாதித்துக் கொண்டே போவதேன்?

எப்போது சாவோம் என்று தெரியாததால் எவ்வளவு சம்பாதித்தால் போதும் என்றும் தெரியவில்லை. மேலும், பிள்ளை, பேரன், இன்னும் குடும்பத்தாருக்கு எல்லாம் வசதியாக வாழ எவ்வளவு செல்வம் வேண்டும் என்றும் தெரியாததால்தான் பலநூறு கோடி பணம் கிடைத்தாலும் பற்றாது எனப் படுகிறது. மேலும் மேலும் சம்பாதிக்க முயலுகின்றனர். குழப்பத்தால் அப்படி. இந்த விருப்பத்திற்குத் தடை ஏற்பட்டால் கோபம் குமுறுகிறது.

தவறு செய்பவர் யாரைக் கேட்டாலும், இந்தச் சமுதாயமே அதன் காரணம் என்பர். கோபப்படுபவர் எவரும் பிறரை காரணப்படுத்துவர். பிறர் தம்மை கிளறிவிட்டு டென்ஷன் உண்டாக்கி உள்ளிருந்த பூதத்தைக் கிளம்பி எழச் செய்துவிட்டனர் என்பர். இவர்கள் ஏன் தம்முள்ளே பூதத்தையெல்லாம் வைத்திருக்கின்றனர்?

## நமக்கு இன்னல் நம்மால்தான்

'தம் சிரமங்கள் எல்லாம் பிறரால் தமக்கு உண்டுபண்ணப்பட்டவை' என்று நினைப்பதாலேயே பிறரைக் கோபிக்கின்றனர். இது தவறு. கணியன் பூங்குன்றனார் புறநானூறில், ''தீதும் நன்றும் பிறர் தர வாரா'' என்றதை உணர்ந்தால், பிறரை நம் இன்னல்களுக்காகக் கோபிக்க மாட்டோம். முன்வினையால்தான் நமக்கு இன்ப துன்பங்கள் வரும்.

பிறர் நம்மை விமர்சிக்கலாம். நம் எழுத்தை, பிற திறமைகளைக் குறைத்து மதிப்பிடலாம். பழிக்கலாம். பலவீனமான இடத்தில் தாக்கலாம். இதனால் எல்லாம் பாதிக்கப்படாதவராக நாம் நம்மைத் தயாரித்துக் கொள்வதற்குப் பதில், மற்றவர் மீது கோபம் கொண்டு தூற்றுவதோ தாக்குவதோ தவறு.

## சகிப்புத்தன்மையே பலம்

முகத்தைச் சரிசெய்து கொள்ள வேண்டுமேயொழிய, கண்ணாடியை உடைக்கக் கூடாது. கோபப்படுவது பலமில்லை; பலவீனம். பலம் என்பது சகிப்புத்தன்மைதான்.

ஏசுவைப் போலப் புகழை விரும்பும் நம்மால், சிலுவையில் அறையப்பட்டால் சகித்துக் கொள்ள முடியுமா? உடல் பளு தூக்கலாம்; உள்ளம் துன்பத்தைப் பொறுக்குமா? பொறுத்தால் அதுவே மனோ பலம்.

## தெளிவு பெறுங்கள்

'நமக்கு என்ன வேண்டும்? என்பதில் தெளிவில்லை. குழப்பம்! நாலு பட்டுப்புடவைகளைப் பரத்திப் போட்டால் அதிலொன்றைத் தேர்ந்தெடுக்க முடிவதில்லை. குழப்பம் தீராமலேயே ஒன்றை எடுக்கிறோம். பிறகு அதை எடுத்

திருக்கலாமே' என்று வேறொன்றை நினைத்துப் பெருமூச்சு விடுகின்றோம்.

மனைவி, காதலி, வேலை, வாகனம், ஆடை, வீடு, நண்பர் என எதிலும் இப்படியே குழப்பத்துடன் ஒன்றைச் சேர்ந்து வேறொன்றை எண்ணி ஏக்கத்துடன் திருப்தியில்லாத வாழ்க்கை நடத்துகிறோம்.

குழப்பமற்ற தெளிவுற்றவர் கோபிக்காமல் அமைதியாக வாழ்வார். ஏனெனில், அவருடைய வாழ்க்கையை அவரே தீர்மானித்து நடத்துவார். ஆகவே திருப்தி இருக்கும் ஆதலால் கோபமும் எழாது. பாவமும் வராது. இதற்கே விழித்துக் கொள்ள வேண்டும்.

பரம்பரை பரம்பரையாக மனித சமூகத்தில் ஒரு சூழ்நிலையில் எப்படி இயங்குவோமோ அப்படியே எந்திர கதியில் எதிர்ச் செயல் புரிகின்றோம். ஆகவே, குழம்புவதையோ, கோபப்படுவதையோ தவிர்க்க முடிவதில்லை. இதன் விளைவை வேதனையாகச் சந்திக்கிறோம்.

ஒரு முறை பகலில் அப்பா தூங்கிக் கொண்டிருந்த போது ஓர் ஐந்து வயதுச் சிறுவன் குறும்பு செய்து, ஓசைப்படுத்தினான். விழித்த அப்பா, பையனின் முதுகில் பளார் என்று ஓர் அறை வைத்தார். வலி பொறுக்காத பையன் அழுதான்.

''ஏம்ப்பா, இப்படி அடிக்கிறே?'' என்றான்.

''பின்ன உன்னை நீ பண்ணினதுக்குக் கொஞ்சுவாளாக்கும்?'' என்றார் அப்பா.

''ஒரே ஒரு வாட்டிதான் கொஞ்சேன், எப்பவும்தான் அடிக்கறயே!'' என்றான் பையன்.

இப்படிக் குறும்பு செய்தால் கோபித்து அடிக்க வேண்டும் என்பது கோபத்தில் வரும் நடவடிக்கை. அதை மாற்றிக் கொண்டால் கோபம் இல்லாமல் செய்து கொள்ளலாம் இல்லையா?

இதுவே அந்த ஐந்து வயதுச் சிறுவனுடைய வலி பொறுக்க முடியாத பேச்சு வலியுறுத்துவது.

## கோபத்தை விடும் வழி

*கோபம் கொஞ்சம் கொஞ்சமாக மனத்தைப் பூரணமாக மூடிவிடுகிறது. ஆகவே, கோபம் எழும்போதே 'கோபம் என்னை வசப்படுத்தப் போகிறது' என்று உணர்ந்து உடனே அதை விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*கொஞ்சம் தண்ணீரை ஜில் லெனக் குடிப்பதையோ, 1, 2, 3, 4 என எண்ணுவதையோ, 'ஓம், ஓம்' என ஜெபிப்பதையோ, கோபம் ஏற்பட்டதுமே அங்கிருந்து அகன்று செல்வதையோ, கோபம் உண்டாக்கியவருடைய முகத்தைக் காணாமலிருப்பதையோ செய்யலாம்.*

*'கோபத்தால் வெறுப்பே வளரும்; குழப்பம் தீராது' எனும் கருத்தைப் பதித்துக் கொள்ளுவதும் சிறப்பு.*

*பிறரை 'ஜெயிக்க வேண்டும்' என்று எண்ணாததும், எதையும், பிறர் வெற்றியைத் தன் அவமானமாகக் கருதாததும் கோபம் உண்டாக விடாது.*



## வழக்கம் போல ஒரு கதை

ஓர் அரசன் இருந்தான். தவறு செய்தவர்களைக் கடுமையாக தண்டித்து வந்தான். மரண தண்டனை, ஆயுள் தண்டனைகளுடன் மிகச் சாதாரணமாகவே பலவகைச் சித்ரவதைகளும் அவனுடைய சிறைச் சாலையில் நிறைவேற்றப்பட்டு வந்தன. இதனால் மக்களுக்கு அரசன் மீது அச்சம் மிகுந்தது. ஆகவே ஆட்சியில் ஒழுக்கமாகக் கட்டுப்பட்டு மக்கள் வாழ்ந்தனர்.

ஒரு துறவி வந்தார். ''ஏனப்பா, இவ்வளவு கடுமையாக இருக்கிறாய்? அக்கிரமக்காரர்களாயினும் கருணையோடு நட. இல்லையேல் உன்னை மக்கள் வெறுப்பர். உன்னிடம் பயத்தால் பணிவதை விட பிரியத்தால் பணிய வேண்டும்'' என்று கூறித் தம் வழியில் சென்றார்.

மன்னனும் அவர் வார்த்தை படி தன் கோபத்தைக் குறைத்தான். கோபமே இல்லாத கருணை வள்ளல் ஆகிவிட்டான். இதனால் மக்களுக்கு அவனிடம் பயம் போய்விட்டது. எக்குற்றத்திற்கும் முன் போல் கடுந்தண்டனை இல்லை என்றதும் நிறையக் குற்றங்கள் நடந்தன. சாது மக்கள் நிறையத் துன்பப்பட்டனர். அரசன் இருக்கிறானா? ஆட்சி நடக்கிறதா? என சான்றோர் சந்தேகித்து மன்னனைப் பழித்தனர்.

துறவி மன்னனைப் பார்க்க வந்தார். ''கோபத்தை விட்டுவிட்டாயா?'' என்று கேட்டார். ''நான் கோபத்தை விட்டதால் நாடு பெரும் அவல நிலைக்கு வந்து விட்டது'' என்று சொல்லி வருந்தினான் மன்னன்.

''நீ கோபமில்லாமல் இருக்க வேண்டும் என்றேனே தவிர, எவரையும் தண்டிக்க வேண்டாம் என்றேனா? சுயநலத்திற்குக் கோபப்படாமல் பொதுநலத்திற்குக் கோபப்படலாம். கோபமுடன் தண்டிப்பது போல அச்சுறுத்தி, அதிகம் துன்பப்படுத்தாமல் கருணையால் மன்னிக்கவும் செய்ய வேண்டும்.

கொடுக்கில்லா தேள்கூடப் பிள்ளைப் பூச்சிதான். கோபமில்லாச் சிங்கம்கூட நாய் போலத்தான் முழுக்க முழுக்கக் கோபத்துடன் எட்டிக்காய் போல இருந்தால், உலகம் உன்னை ஒதுக்கிவிடும். முழுக்க முழுக்க சர்க்கரையாக இருந்தால் உலகம் உன்னைக் கரைத்துக் குடித்துவிடும்.''என்று, வெளியில் கோபமுள்ளவனாகவும் உள்ளில் கருணையுடனும் மன்னன் இருக்க வேண்டும் என்றும் கூறிச் சென்றார்.

முதலிலிருந்தே கோபமின்றி இருந்தாக வேண்டும். இந்த உலகம் எப்போதும் திருந்திய பிறகு தண்டிப்பதாகும். ஆகவே, எப்படி நடக்க வேண்டும் எனக் குழம்பித் தவிக்காதீர், அநாவசியமாகக் கோபப்படாதீர்.

— தொடரும்

## கடித மஞ்சரி — வாசகர் எண்ணங்கள்...

சித்திரை இதழின் தலையங்கமும் விழித்துக் கொள்க வெற்றி பெறுக தொடரின் அறிவுரைகளும் உள்ளத்து எண்ணங்களை மேல்நோக்கி அசை போட வைத்தன. தென்கச்சி பதில்கள் ஒவ்வொன்றும் அனுபவத் தேன்.

*- கன்னிக்கோவில் ராஜா, சென்னை-18*

அழுதுகொண்டே சிரிக்கின்றேன் என்று ஆரம்பித்து மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் என்ற பாடல் வரிகளையும் சுட்டிக்காட்டி முடிக்கப்பட்ட கட்டுரையை ஒரே மூச்சில் படித்து முடித்த பிறகு சாவாகாசமாக வாயினால் காற்றை விட வைத்து விட்டது என்று ஆஸ்த்மா நோயாளிகள் சொல்வார்கள்.

*- கவிஞர் அய்யாறு வாசுதேவன்*

தர்க்கங்களில் ஆன்மிக முறையில் வெற்றி பெறுதல் என்ற கட்டுரையில் ஒரு மேல் நாட்டவர், நமது பகவத்கீதை மற்றும் ஸ்ரீசின்மயாநந்தர் சொற்பொழிவுகளை மேற்கோள் காட்டி எழுதியுள்ளது வியப்பூட்டுவதாக உள்ளது. தெரிவிக்கப் பட்ட கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளன.

*-எஸ்.வைத்தியநாதன், திருநெல்வேலி-11*

விளையாட்டில் மட்டுமல்ல வெற்றி, நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும்தான் என்பதை தலையங்கத்தில் படித்தேன். ஆம் அது படிப்பினை.

*- எஸ். முரளி, ஸ்ரீரங்கம்*

ப்ரொபசர் ரோமியோ சினிமாக்கதை மிகவும் விறுவிறுப்பு. மொப்பசானைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருப்பதால் மாடல் பிரெஞ்சு சிறுகதையை ஆர்வமுடன் படித்து முடித்தேன். சும்மா சொல்லக்கூடாது, நான் ரசிக்கும்படி நன்றாகவே இருந்தது. மொழி பெயர்ப்பாளருக்கும் இப்பாராட்டு சேரும்.

*- கே.எஸ்.பட்டாம்பி ராமையர், புதுவை*

ஒழவெட்டி பாரதிப்ரியனின் துளிப்பாக்கள் மஞ்சரி தரும் விருந்துக்குத் துவையல் போல் சுவையாக இருந்தன. பிரோஸ் காந்தி சமாதியின் அவல நிலை செய்திக் கட்டுரை, ஒவ்வொரு காங்கிரஸ்காரனையும் வெட்கப்பட வைக்கும் விதத்தில் இருந்தது. வேதனையான செய்தியும் கூட!

*-சஞ்சீவி மோகன், வெள்ளப்புத்தூர்*

சுவாமி எழுதும் தொடரில் ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பதை நன்றாக விளக்கியது கீரியின் குட்டிக் கதை. அக்கதையைச் சொல்லி எங்கள் புத்தியைத் தீட்டிய விதம் நன்று.

*- எம்.எஸ்.சேகர், நீலிக்கோணாம்பாளையம்*

வலைத்தளத்தில் ஒரு பார்வை- பத்ரி சேஷாத்ரி கட்டுரை அறிவுடையோர் தமிழின் மீது பற்றுடையோர் அவசியம் படித்தறிய வேண்டிய கட்டுரை. எல்லோரிடமும் கணிப்பொறி இருப்பது சாத்தியமில்லை. இதையறிந்து காலத்திற்கேற்ப நல்ல ஆரோக்கியமான வலைத்தளத் தகவல்களைத் தருவது பாராட்டுக்குரியது.

*- தாமல் கண்ணன், பெங்களூர்*

Edited and Published by R.Narayanaswamy for and on behalf of the Kalaimagal Office. No.1, Sanskrit College Street, Mylapore, Chennai - 600 004. Ph: 24983099/24983799 And Printed at Rajam Offset Printers. 1, Portugese Church Street, 9th lane, Chennai-600001


# ஹோட்டல் அகாடமி

## கலைமகளுடன்

இணைந்து நடத்தும்

## மகளிருக்கான சமையல் போட்டி

* கடலை மாவால் தயார் செய்யப்படும் இனிப்பு வகைப் பதார்த்தங்களைப் பற்றி சமையல் குறிப்பு அனுப்புங்கள். ஒருவர் எத்தனை குறிப்பு வேண்டுமானாலும் அனுப்பலாம்.

* தேர்வு செய்யப்படும் சமையல் குறிப்பு எழுதியவரை ஹோட்டல் அகாடெமி சென்னை, தி.நகருக்கு அழைத்து அவரைக் கொண்டு அந்த இனிப்பு வகையைச் செய்யச் சொல்லும். நடுவர்கள் தீர்ப்பின் படி 15 சமையல் குறிப்புகள் தேர்வு செய்யப்படும். கலைமகளில் வெளியிடப்படும். பரிசுகள் வழங்கப்படும்.

* பரிசுகள் சென்னையில் நடைபெறும் விழாவில் ஹோட்டல் அகாடெமியினரால் வழங்கப்படும். புதுமையான முறையில் கேட்டரிங் கல்லூரியை நடத்தி வரும் ஹோட்டல் அகாடெமி பல புதுமையான சமையல் குறிப்புகளை எதிர்பார்க்கிறது. ஏற்கனவே கலைமகளுடன் இணைந்து ஹோட்டல் அகாடெமியினர் சமையல் குறிப்புப் போட்டியை நடத்தியுள்ளனர்.

** வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்கஇப்போட்டியின் தேதி ஜூன் 3 ஆம் தேதி (3.6.2004) வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. **

சமையல் குறிப்பு ✉ ஆசிரியர் கலைமகள் ✉ சமஸ்கிருதக் கல்லூரித் தெரு ✉ மயிலாப்பூர் ✉ சென்னை - 4



# அமரர் கா.ஸ்ரீ.ஸ்ரீ. நினைவுச் சிறுகதைப் போட்டி

- கலைமகள் - மஞ்சரி மாத இதழ்களில் இணை மற்றும் மொழி ஆசிரியராக இருந்தவர் கா.ஸ்ரீ.ஸ்ரீநிவாஸா சார்யா.
- கா.ஸ்ரீ.ஸ்ரீ. நினைவைப் போற்றும் கையில் அவர் குடும்பத்தினர் சார்பாக சிறுகதைப் போட்டி ஒன்றை அறிவிக்கிறோம்.
- கலைமகளில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் சிறுகதை அமைதல் வேண்டும். பரிசுத் தொகை ரூ. 2000/-
- கலைமகள் ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. கடந்த மூன்றாண்டுகளில் கலைமகள் நடத்திய போட்டிகளில் பரிசு பெற்றவர்கள் இப்போட்டிக்கு விண்ணப்பிக்க வேண்டாம்.

**கடைசித் தேதி 3.6.2004**

சிறுகதைகள் அனுப்பவேண்டிய முகவரி

**கா.ஸ்ரீ.ஸ்ரீ. நினைவுச் சிறுகதைப் போட்டி - 2004**
**கலைமகள் அ.பெ.எண். 604, சென்னை - 600 004.**

**தேர்வு செய்யப்படாத சிறுகதைகளை திருப்ப பெற இயலாது எனவே கைவசம் நகல் வைத்துக் கொள்ளவும்.**

சிலம்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER
REGD.NO.1105/57,POSTAL REGN.NO.TN/PMG(CCR)/549/03-05 & WPP NO.342/03-05